சட்டவிரோத சிறியரக ஆயுதங்களுக்கும் இலகுரக ஆயுதங்களுக்குமானான
வழிகாட்டல் ஆய்வு

# அம்பாந்தோட்டை




**சட்டவிரோதமான சிறிய ஆயுதங்கள்
பல்கிப் பெருகுவதற்கு எதிரான
தேசிய ஆணைக்குழு**

## நிறைவேற்றுச் சாராம்சம்

சகல அதன் அம்சங்களிலும் சிறு ஆயுதங்களிலும், இலகு ஆயுதங்களிலும் சட்டவிரோத வர்த்தகத்தை தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், ஒழிப்பதற்குமான ஐக்கிய நாடுகள் செயற்றிட்டமானது (UNPoA) சிறு ஆயுதங்களும், இலகு ஆயுதங்களும் (SALW) பல்கிப் பெருகுவதையும், துஷ்பிரயோகிப்படுவதையும் கவனத்தில் எடுப்பதற்கு சகல நாடுகளினாலும் அமுல்படுத்தப்படுவதற்கு ஒரு தொடரான கடப்பாடுகளைக் குறித்துரைக்கின்றது. UNPoA இன் அங்கமாக, தேசிய மட்டத்தில் சிறு ஆயுதங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கான அணுகுமுறையை ஒன்றிணைப்பதற்கு தேசிய ஆணைக்குழுக்களைத் தாபிப்பதற்கு அரசாங்கங்கள் உடன்பட்டுள்ளன. இந் நோக்கத்திற்காக இலங்கையில், தேசிய சட்டவிரோத சிறு ஆயுதங்கள் பல்கிப் பெருகுதலுக்கு எதிரான ஆணைக்குழு (NCAPISA) தாபிக்கப்பட்டதுடன், இது மட்டுமே தென் ஆசியாவில் உள்ள இத்தகைய ஓர் உறுப்பாகும். SALWஉடன் இணைந்துள்ள பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து கரிசனைகளுக்கு தேசிய ஆணைக்குழு சக்திமிக்கதாக பதிலிறுப்பதற்கு, பிரச்சினைகளைப் பாரியளவில் புரிந்து கொள்வதை வசதிப்படுத்துமுகமாகவும், அவற்றை கவனத்தில் எடுப்பதற்கு கொள்கை விருப்புக்களை சுட்டிச் சொல்லுமுகமாகவும் விரிவானதொரு தேசிய அளவீடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2006 முற்பகுதியில், சாத்தியமான ஆராய்ச்சி முறைமையியல்களைச் சோதிப்பதற்கான முழுமையான தேசிய அளவீட்டுக்கு முன்கூட்டியே முன்னோடியிலான SALW அளவீடொன்றை ஆரம்பிப்பதற்கும் NCAPISA தீர்மானித்ததுடன், இந்த முன்னோடி அளவீட்டின் இடம் ஹம்பாந்தோட்டை மாவட்டம் என அடையாளங் காணப்பட்டது. முன்னோடிக் கருத்திட்டத்தின் முடிவுகளும், சிபார்சுகளும் இந்த இரகசிய அறிக்கையில் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது. இது 2006 ஜுலையில் ஆரம்பமாகவுள்ள முழுமையான தேசிய அளவீடானது சாத்தியமானளவு சக்திமிக்கதாகவும், பயனுள்ளதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துகின்ற ஆராய்ச்சி நடைமுறையின் கட்டமைப்பு தொடர்பில் கற்கப்பட்ட பாடங்களை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இவ்வளவீடானது சட்டவிரோதமான ஆயுதங்களின் பங்கீட்டினை மதிப்பிடுவதையும், பாதுகாப்பு, பந்தோபஸ்து, அபிவிருத்தி மற்றும் ஆட்சி ஆகியன மீது SALWஇன் தாக்கத்தைப் பரீட்சிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளதுடன், அவற்றை அதிக சக்திமிக்கதாக கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் ஆற்றலளவைச் சுருக்கமாக விபரிக்கின்றது. பின்வரும் நான்கு முறைகளைப் பயன்படுத்தி இந்த அளவீட்டில் உள்ளடக்கப்பட்ட தகவல் திரட்டப்பட்டது: ஒரு மேசை மதிப்பாய்வு, சிறு ஆயுதங்கள், பந்தோபஸ்து மற்றும் அபிவிருத்தி ஆகியன தொடர்பில் உள்ளூர் மக்களின் மனவுணர்ச்சிகளினுள் விரிவானதொரு பண்பறிதல் உட்கிடக்கையை ஈட்டுவதற்கு நடத்தப்பட்ட ஆறு நோக்கிலான குழுக் கருத்துப்பரிமாறல்கள், ஓர் ஊடகப் பகுப்பாய்வு; மற்றும் பங்குதாரர்களின் கருத்துக்களை மதிப்பிடுவதற்கு முக்கிய தகவலளிப்பவரை நேர்முகங்காணுதல். இந்த முறைகள் சான்றின் சோதனையாலும், அளவீட்டுக்கான சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பினாலும் ஆதரவளிக்கப்பட்டன.

குடித்தனக் கேள்விக்கொத்து இல்லாமையே குறிப்பிடத்தக்கதாகும். இது விருப்புரிமையாக, இவ்வகையான ஆராய்ச்சியை நடத்தும் போது தரவைத் தோற்றுவிப்பதற்கே 'சேபர்வேர்ல்ட்' இனால் (Saferworld) வழமையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இறுக்கமான நேர மற்றும் வள மட்டுப்படுத்தல்கள் இல்லாதிருந்தால், இந்த அம்சத்தினை முறைமையியல் உள்ளடக்கியிருக்கும். எனினும், திட்டமிடப்பட்ட தேசிய அளவீடு இத்தகையதொரு கேள்விக்கொத்தை உள்ளடக்க வேண்டும். முன்னோடி அளவீட்டிலிருந்து முக்கிய முடிவுகளினதும், சிபார்சுகளினதும் சாராம்சமொன்றை பின்வருவன பிரதிநிதிப்படுத்துகின்றன. தேசிய ஆணைக் குழுவினதும், சம்பந்தப்பட்ட அரசாங்க முகவராண்மைகளினதும் பணிக்கு உறுதியானதும், கூட்டு முயற்சியிலானதுமான பங்களிப்பினை இது உத்தேசமாகக் கொண்டுள்ளது.

## ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுடுகலன்களின் பங்கீடும், தாக்கங்களும்

இலங்கையின் தெற்குக் கரையோரத்தில் அமைந்துள்ள ஹம்பாந்தோட்டை மாவட்டமானது

தற்போதைய இலங்கையின் ஜனாதிபதியினதும், பாதுகாப்பு, பொது பந்தோபஸ்து, சட்ட, ஒழுங்கு அமைச்சுச் செயலாளரினதும் தேர்தல் தொகுதியாகும். இது 2,609 சதுர கிலோ மீட்டர்களை உள்ளடக்குவதுடன், 523,370ஐக் கொண்ட சனத்தொகையைக் கொண்டுள்ளது. மாவட்டச் சனத்தொகை 97 சதவீத சிங்களவர்களையும், 2 சதவீத முஸ்லிம்களையும், 1 சதவீத தமிழர்களையும் கொண்டுள்ளதாக உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.[1]

மாவட்டத்தில் உள்ளூரில் செய்யப்பட்ட துப்பாக்கிகள் (கல்கட்டாஸ்), நீண்ட குழல் துப்பாக்கிகள், மற்றும் ரவைத் துப்பாக்கிகள் ஆகியன பரந்தளவில் சட்டவிரோதமாக உள்ளன. மேலதிகமாக, குற்றம்புரிபவர்களிடம் சிறு ஆனால், வளர்ச்சியுறும் எண்ணிக்கையிலான T-56 துப்பாக்கிகள் உள்ளன. இவை உயர் மட்டத்திலான ஆயுத வன்முறைக்கு குறிப்பிடத்தக்களவில் பங்களிக்கும் மாவட்டத்தின் மேற்கு அந்தந்தில் செறிந்துள்ளமை வெளிப்படையாகும்.[2] மாவட்டத்தில் சட்டவிரோதமான கைக்குண்டுகளும் (hand grenades) அதிகரித்தளவில் விநியோகத்தில் உள்ளன. இவை அரசாங்க இருப்புக்களிலிருந்து வந்தவை என்பதும் வெளிப்படையாகும்.

T-56 குண்டுகளை வெடிக்க வைக்கும் கல்கட்டாஸுக்கு பெயர்ந்துள்ளமையானது T-56 குண்டுகள் பெரிதும் உடனடியாகவே கிட்டுகின்றன என்பதைச் சாத்தியமானளவில் எடுத்துக்காட்டுகின்றது. குற்றம் தொடர்பான துஷ்பிரயோகத்திற்கு குண்டுகளின் மூலமொன்றாக மீள் நிரப்பப்பட்ட வெற்றுத் தோட்டாக்கள் விளங்குவதுடன், இவ்விடயத்தில் சகல அங்கீகரிக்கப்பட்ட துப்பாக்கி உபயோகிப்பாளர்களிடமிருந்து பயன்படுத்தப்பட்ட தோட்டா உறைகைளைச் சேகரிப்பதிலும், அழிப்பதிலும் அதிகரித்த சக்திமிக்க போக்கானது எதிர்காலத்திற்கு முக்கியமானது என சுட்டிச்சொல்லப்படுகின்றது.

கல்கட்டாஸ் உற்பத்தியின் ஆரம்பநிலை மூலங்களாக உள்ளூர் கொல்லர்கள் விளங்குகின்றனர். மாவட்டத்தில் பாரிய தொகையிலான கொல்லர்கள் உள்ளனர். விநியோகத்தில் உள்ள உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கிகளின் எண்ணிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கொல்லர்களைக் கட்டுப்படுத்துவது ஒரு முக்கியமான நடவடிக்கையாக உள்ள அதேவேளை, பாரிய அளவில் சுடுகலன்களின் உள்ளூர் உற்பத்தியின் பிரசன்னமானது பெரிதுமே மட்டுப்படுத்துகின்ற விநியோகத்திற்கு ஈடாகின்றது. மாவட்டத்தில் ஆயுதங்களுக்கான கிராக்கியின் மூலாதாரக் காரணங்கள் மீது பணியாற்றுவது மிகவும் முக்கியமானதாகும். இக்காரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: வறுமையும், வாய்ப்புக்களை அடைய முடியாதிருத்தலும், நிருவாக துஷ்பிரயோகத்திலிருந்து ஓரளவுக்கு விளைகின்ற தகராறுகள் மற்றும் சட்ட, நீதி முறைமை தொழிற்படாதிருத்தல், இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்கள் மத்தியில் ஒருங்கிணைப்பு இன்மையும், குற்றத்தன்மையிலான போக்கும், பொலிஸ் மற்றும் ஏனைய முகவராண்மைகள் மத்தியில் ஊழலின் மனவுணர்ச்சி.

2005க்கு ஹம்பாந்தோட்டையில் சுடுகலன்கள் மூலமான கொலை புரியப்பட்ட வீதம் சனத்தொகையில் 100,000க்கு 4.95 ஆகும். இது நாட்டில் எஞ்சிய பகுதிக்கான வீதத்தை (2.06) விட இரண்டு மடங்குக்கு மேற்பட்டதாகும் என்பதுடன், பெருமளவு நாடுகளில் உள்ளதை விட உயர்வானதாகும். மாவட்டத்தில் சுடுகலன்களினாலான தற்கொலையின் ஏதாவது குறிப்பிடத்தக்க மட்டத்தைக் கண்டறிவதற்கு சான்று இல்லை. சுடுகலன்களின் துஷ்பிரயோகத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் வருமாறு: சூரியவெவ, பெலியத்த, வலஸ்முல்ல, வீரகெட்டிய, திஸ்ஸமஹராம மற்றும் அங்குணகொலபெலஸ்ஸ.

அரசியல்வாதிகளின் தொடர்புடனான ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றம் மாவட்டத்தில் ஆயுத வன்முறைக்கான ஊக்கியாக உணரப்படுகின்றது. ஒப்பந்தக் கொலைகள், கோஷ்டிகளுக்கு இடையில்

---

[1] 2005 செப்ரெம்பர் 01 திகதியிடப்பட்டதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள்

[2] இலங்கையில் தானியங்கு இராணுவ முறையிலான தாக்குதல் ஆயுதங்களுக்கு சிறப்புப் பண்புப் பதமாக T 56 அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது.

பழிதீர்த்துக் கொள்ளுதல், கஞ்சா செய்கை/வர்த்தகம், ஆயுதக் கொள்ளை மற்றும் மிக முக்கிய நபர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆகியனவற்றை ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றம்புரிபவர்களின் ஆயுத நடவடிக்கைகள் உள்ளடக்குகின்றன. மாவட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றச்செயற்பாட்டின் அடையாளமாக T -56இனதும், நவீன ஆயுத தளபாடங்களினதும் உபயோகம் விளங்குகின்றது.

மாவட்டத்தில் உயர்ந்த சக்தியிலான ஆயுதங்களின் விநியோகத்திலும், பாரதூரமான குற்றங்களைப் புரிவதிலும் சம்பந்தப்பட்டுள்ள குழுவாக இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவர்கள் முனைவுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த அனுமானம் உண்மையானதா என்பதைத் திட்டவட்டமாக நிரூபிப்பதற்கு அளவீட்டினால் இயலாதிருந்தது. எனினும், மிகவும் சக்திமிக்க தடுப்புக் கொள்கையினதும், மீள் ஒன்றிணைப்பு முன்னெடுப்புக்களினதும் (உதாரணமாக, இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் சிவில் சமூகத்திற்கு திரும்புவதற்கும், சட்டபூர்வமான வாழ்வாதார வாய்ப்புக்களை பின்துரந்து செல்வதைத் தெரிவு செய்வதற்கு முன்னாள் இராணுவ ஆளணியினருக்கு அதிகாரமளிப்பதற்கும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்) ஊடாக இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மத்தியில் எவ்வகையான குற்றம் புரியும் தன்மையுள்ளது என்பதை அறிந்து, அதைத் தணிப்பதற்கு அயராத முயற்சி எடுக்கப்பட வேண்டும் என இன்னுமே விதந்துரைக்கப்படுகின்றது. இராணுவ ஆளணியினரை நடத்தும் விதத்திலும், அங்கீகரிப்பதிலும் எடுக்கப்படும் முன்னேற்றங்கள் தடுத்து வைத்திருப்பதற்கு உதவும் எனக் கருதப்பட வேண்டும்.

சேனைச் செய்கை, பசுமாடு வளர்ப்பு, சட்டவிரோதமாக மரங்களைத் தறித்தல், விறகு பொறுக்குதல், காணி, நீர்ப்பாசனம், மற்றும் வேறு உரித்துரிமைகள் மீதான தகராறுகள், மற்றும் சட்டவிரோத மது உற்பத்தி (அத்துடன் பாவனை) ஆகியன தொடர்பில் மாவட்டத்தில் சுடுகலன்களின் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றது.

மாவட்டத்தில் ஆயுத வன்முறையினால் முக்கியமாக பாதிக்கப்பட்டவர்களாகவும், குற்றமிழைப்பவர்களாகவும் 18-35 வயதான ஆண்களே விளங்குகின்றனர் எனத் தோன்றுகின்றது. சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் தாக்கத்தை மதிப்பிடுவதில் விரிவான தரவு இல்லாமை இதற்கு ஓரளவுக்கு காரணமாக இருக்க முடியும். உதாரணமாக, உள்ளூர் சூழலொன்றினுள் பயமுறுத்துவதற்கு ஆயுதங்கள் உபயோகிக்கப்படுகின்ற அளவு மீது மிகவும் சிறிதளவு தகவலே கிட்டுகின்றது. இது பெரிதுமே உலகின் வேறு பகுதிகளில் சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் துஷ்பிரயோகத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிறு ஆயுதங்களின் துஷ்பிரயோகத்தில் ஆண்களினதும், பெண்களினதும் சம்பந்தத்திற்கு இடையிலான பாகுபாடு பால்நிலையிலான பதிலிறுப்பு மூலோபாயத்திற்கான அவசியத்தைச் சுட்டிச்சொல்கின்றது. சுடுகலன்களுக்கான போக்குகளை மாற்றுவதற்கான ஏதாவது முன்னெடுப்புகளுக்கான உத்தேசமான ஆதரவளிப்பு தளமொன்றினை பெண்கள் தெளிவாக வழங்குகின்றனர். இளம் ஆண்கள் மத்தியில் சுடுகலன்கள் துஷ்பிரயோகத்தின் முறையை மாற்றியமைப்பதற்கான சவாலானது கட்டமைப்பு மட்டத்திலும், சுடுகலன்களுக்கான அவர்களது அடைதலைக் கட்டுப்படுத்துவதிலும் அவர்களுக்கான கவர்ச்சிகரமான வன்முறையற்ற மாற்றுவழிகளுக்கான குவியப்படுத்தப்பட்ட முயற்சியொன்றை வேண்டுகின்றது.

ஹம்பாந்தோட்டையில் மக்கள் முகங்கொடுக்கும் முக்கிய சமூகப் பிரச்சினையாகவும், பெருமளவு நேர்முகங் காணப்பட்டவர்களினாலும், நோக்குக் குழு பங்கெடுப்பாளர்களினாலும் சுட்டிக் காட்டப்பட்ட ஆயுத வன்முறைக்கான முக்கிய மூலாதாரக் காரணியாகவும் வாழ்வாதாரத்திற்கு கல்வியும், பயிற்சியும், வாய்ப்புக்களும் இன்மையே விளங்குகின்றது. ஆதலினால், மாவட்டத்தில் ஆயுத வன்முறையின் சமூகக் காரணிகளை வெற்றிகொள்வதில் நீண்ட கால முன்னுரிமைப் பகுதிகள் பின்வருவனவாக சொல்லப்படுகின்றன: கல்வி, விசேடமாக பல்கலைக்கழக இடங்கள், பயிற்சி, தொழிலை உருவாக்குதல், வியாபார முயற்சிக்கான ஆதார மற்றும் சனசமூக முன்னேற்றம். எனினும், அரசியல் அனுசரணையாளர்களிடமிருந்து நியாயமற்ற பாதுகாப்பினால் குற்றம்புரிபவர்கள் நன்மையடைகின்றனர் என்ற மனவுணர்வு தொடர்கின்ற அதேவேளை, சட்டபூர்வ வேலைக்காக வாய்ப்புக்களை உருவாக்குதல் அவர்களது வாழ்க்கை முறையின் தெரிவை மாற்றுவதற்கு

சிறிதளவையே செய்யும். இதன் விளைவாக, குற்றவியல் வாழ்க்கை முறைக்கு மாற்றுவழிகளை வழங்குவதற்கு சக்திமிக்க அபிவிருத்தி வேலைக்கு மேலதிகமாக, உத்தேசமான குற்றமிழைப்பவர்களை எச்சரிப்பதற்கும், தண்டிப்பதற்கும் மிகவும் சக்திமிக்க முறைமையொன்று இருக்க வேண்டும்.

இலங்கையின் வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்கள் விநியோகத்தினுள் பிரவேசித்துள்ளதாகத் தோன்றுகின்றது. எல்.ரி.ரி.ஈ.இன் அல்லது அரசாங்கத்தின் இருப்புக்களில் இருந்து எந்த சமவிகிதத்தில் ஆயுதங்கள் வெளிப்பட்டுள்ளன என்பது தெளிவில்லை. யுத்தப் பகுதிகளிலிருந்து தெற்குக்கு பிரயாணம் செய்யும் படை ஆளணியினர்களை சோதிக்கும் முறைமையில் உள்ள குறைபாடுகள் அடையாளங் காணப்பட்டு, முடிவுகட்டப்பட வேண்டும். இது ஹம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களுக்கு உயர் சக்தியிலான ஆயுதங்களின் விநியோகங்களைக் குறைப்பதில் உதவும். மேலும், இரு ஜே.வி.பி. கிளர்ச்சிகளின் விளைவாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கணிசமானளவு எண்ணிக்கையிலான சட்டவிரோதமான ஆயுத தளபாடங்கள் பொது விநியோகத்திற்குள் பிரவேசித்துள்ளதாக அறியப்படுகின்றது.

## சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் ஆற்றலளவு

### ஒழுங்கை நிலைநிறுத்துதல்

சனசமூக உறவுகளைப் பேணுவதற்கும், தடுப்பு முறைகளை பயன்படுத்தி வன்முறையைக் குறைப்பதற்கும் குறிப்பான பொலிஸ் நிலையங்களினால் தீவிரம் சார்ந்த பணியை அளவீடு அடையாளங் கண்டுள்ளது. பொலிசார் மீதான நம்பிக்கையீனமும், வன்முறையின் மட்டங்கள் தொடர்ந்தும் உயர்வாகவும் உள்ள பகுதிகளில் இத்தகைய முயற்சிகள் அவசரமான தேவைகளாகும். உத்தியோகத்தர்களுக்கான அதிகரித்த வேதனங்களும், படிகளும் இலஞ்சங்களைப் பெறுவதற்கான அவாவை குறைவடையச் செய்யும். பொலிசாருடன் பொதுசன ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதற்கு விழிப்பியலை உயர்த்துவதற்கும் முன்னே வருமாறு தகவல் அளிப்பவர்களை ஊக்குவிப்பதற்குமான வெகுமதி முறைமைக்குமான அவசியத்தையிட்டு பொலிசார் குறிப்பிட்டனர்.

ஒழுங்கை நிலைநிறுத்துவதில் சீர்படுத்தலுக்கான பொதுசன ஆலோசனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கின: குற்றத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பந்தோபஸ்தின் மனவுணர்ச்சியினை அதிகரிப்பதற்கு அதிகளவு பொலிஸ் ரோந்துகள், தகராறுகளின் மத்தியஸ்த்திற்கு சிறந்த நுட்பங்கள், மற்றும் வளங்களினதும், நன்மைகளினதும் நியாயமான பங்கீட்டினை உறுதிப்படுத்துதல்; அத்துடன் தகராறுகளைத் தீர்த்து வைப்பதிலும், பாதுகாப்பினை அதிகரிப்பதற்கு வேறு முன்னெடுப்புகளிலும் தீவிரமான சனசமூகப் பங்கெடுப்பு.

மாவட்டத்தில் சில கோஷ்டி தொடர்பான சுடுகலன் கொலைகள் விரைவான வரிசைக் கிரமத்தில் தொடர்வதுடன், அதே நிகழ்வுகளின் சங்கிலிக்கு தொடர்பினைக் கொண்டுள்ளது.[3] உயர்ந்த மட்டத்திலான கொலைகளைத் தொடர்ந்து இத்தகைய காலங்களை எதிர்பார்ப்பதும், அனேகமாக குழுக்களுக்கு இடையில் பழிதீர்த்தல் இடம்பெறுவதற்கு முன்னர் இலக்குப்படுத்தப்பட்ட பகுதிகளில் தேடி அழித்தல் நடவடிக்கைகளை நடத்துவதன் மூலம் வன்முறை தோன்றுவதற்கு முன் அதை செயற்படுத்துவதும் சாத்தியமானதாகும்.

ஆயுத வன்முறையின் அபாயகரமான சம்பவங்களுக்கு பதிலிறுப்பதற்கு அதிகரிக்கப்பட்ட பயிற்சிக்கான அவசியத்தை பொலிசார் அறிக்கையிட்டனர். கைது செய்யப்படுதலின் போது பொலிஸ் உத்தியோகத்தர்களினதும், சந்தேக நபர்களினதும் மரணத்திற்கு இட்டுச் செல்லும் சம்பவங்களினால்

[3] மாத்தறை ஆஸ்பத்திரி, உசாத்துணை சட்ட மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் எல்.பீ.எம்.பெர்னாண்டோவுடன் நேர்முகங் காணல்

இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்பாடலுக்கான தொழில்நுட்பம், பதிவு வைத்திருத்தல் போன்ற பொலிஸ் சாதனங்கள் மற்றும் போதிய ஆடைகள் ஆகியன இல்லாதிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஏதாவது புதிய சாதனங்களின் ஏற்பாடானது அதன் உபயோகத்தில் ஆளணியினரின் பயிற்சியை வேண்டுகின்றது.

பொலிசாரின் பதிலிறுப்பு ஆற்றலளவை உயர்த்துவதற்கு அதிக வாகனங்களினதும், ஆளணியினரினதும் தேவையை பொலிசாருடன் பணியாற்றும் அரசாங்கத் திணைக்களங்கள் சுட்டிக்காட்டின.

வன திணைக்களம் மற்றும் வனவாழ்வுத் திணைக்களம் போன்ற வன்முறையிலான பயமுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கும் திணைக்களங்கள் தமது ஆளணியினர் கொல்லப்படும், காயப்படும் அபாயத்தை குறைப்பதற்கு சிறந்த பயிற்சியையும், பின் தொடருகின்ற ஆதரவையும் வேண்டுகின்றனர்.

ஒவ்வொரு நாளைய சம்பவங்களுக்கும் பொலிசாரினாலான பதிலிறுப்பின் மட்டம் திருப்திகரமானதாக இருந்தது; ஆனால், அவசரகால நிலைமைகளுக்கும், பாரதூரமான குற்றத்திற்குமான பதிலிறுப்பு அனேகமாக பலவீனமானது என்பதற்கான எடுத்துக்காட்டல்கள் இருந்தன. மேலும், அதன் பொதுசன மனத்தோற்றப்பாட்டினை சீர்திருத்துவதற்கும், திருத்தியமைப்பதற்கும் பொலிஸ் சேவைகளினால் நடைமுறையில் முயற்சிகள் எடுக்கப்படுகின்ற போதிலும், பொது மக்களின் உறுப்பினர்கள் எல்லோரும் இல்லாவிட்டாலும், பெரும்பாலானோர் பொலிசார் நம்பத்தகுந்தவர்கள் அல்லர் என்றும், செயற்றிறன் அற்றவர்கள் என்றும் நம்புவதாகத் தெரிகின்றது.

## விசாரணையும், வழக்குத் தொடர்தலும்

பாரதூரமான குற்றங்களுக்கு தண்டிப்பதில் தற்போதைய முறைமைகளின் செயற்றிறனினால் கைவிடப்பட்டுள்ளதாக எதிர்வுகூறத்தக்கவிதமாக பொது மக்கள் உணர்ந்ததுடன், பெருமளவானோர் சுடுகலன் தொடர்பிலான குற்றவாளிகளுக்கு மிகவும் சக்திமிக்க தண்டனையைப் பார்க்க ஆர்வங் கொண்டிருந்தனர்.

சுடுகலன் தொடர்பிலான குற்றங்கள் உட்பட பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் செயற்றிறனாகவும், சக்திமிக்கதாகவும் நீதியை வழங்குவதற்கு சட்டம் மற்றும் நீதித்துறையில் உள்ள செயற்பாட்டாளர்களின் ஆற்றலளவுடன் பிரச்சினைகளை அளவீடு அடையாளங் கண்டுள்ளது. இவை பின்வருவனவற்றுக்கான அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றன:

- திருந்திய துப்பறியும் பணியும், பொலிசாரினால் சான்றினைக் கையாள்வதில் பாரியளவிலான நேர்மையும்;
- அரசாங்கப் பாதுகாவலில் இருந்து ஏதாவது சுடுகலன்களை ஆஜர் செய்கையில் தொலைந்ததினால் அதன் விசாரணைகளும், அதைத் தடுத்தலும்;
- மேலும் பணியணியினரின் பயிற்சியும், சாத்தியமானளவில் மாகாண மட்டத்திற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளரை பரவலாக்கலும் உட்பட சுடுகலன்களை ஆஜர் செய்தல் மீது அறிக்கையிடுவதற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளரின் ஆற்றலளவில் ஓர் அதிகரிப்பு;
- சுடுகலன்கள் தொடர்பான சம்பவங்கள் உட்பட மரணத்தினதும், காயத்தினதும் சட்ட வைத்திய விசாரணையை நடத்துவதற்கு கிட்டுகின்ற ஆளணியினரின் வசதிகளிலும், எண்ணிக்கைகளிலும் ஒரு மேம்படுத்தல்;
- வழக்குகளைத் துரிதமாகத் தயாரிப்பதற்காகவும், நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதைக் குறைப்பதற்காகவும் சட்டமா அதிபரின் திணைக்களத்தின் ஆற்றலளவுகளில் ஓர் அதிகரிப்பு;
- நெரிசலைக் குறைப்பதற்கும், குற்றமிழைத்தவர்களின் புனர்வாழ்வு மீதான வலியுறுத்தலை அதிகரிப்பதற்கும் சிறைச்சாலை சேவையில் ஒரு முதலீடு.

## உத்தரவுப்பத்திரம் வழங்குதல்

அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்கு கைமாறி இருக்கக்கூடியதும், அரசியல்வாதிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டதுமான ஆயுதங்களைப் பெரிதுமே கட்டுப்படுத்துவதற்கு மனவுணர்விலான அவசியமொன்றுள்ளது. இப்பிரச்சினையை சமாளித்தால், அது பொது மக்களில் நம்பிக்கையை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கும்.

சுடுகலன்களுக்கான உத்தரவுப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக தவறுவதற்கு எதிராக அதிகளவு நம்பகமான முறையில் ஊக்கம் வழங்காதிருப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு தவறுவதற்கான அபராதம் உயர்த்தப்படுவது வரவேற்கத்தக்கது.

தனித்த விண்ணப்பமொன்றின் நடைமுறைப்படுத்தலில் பலதரப்பட்ட தரப்புக்கள் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணத்தினால், தரப்புக்களுக்கு இடையிலான தகவலின் ஓட்டம் சீராக்கப்பட்டாலும், ஒன்றிணைப்பின் முழுமையான மட்டம் திருத்தியமைக்கப்பட்டாலும் நடைமுறை திருத்தியமைக்கப்பட முடியும் என சுட்டிச்சொல்லப்பட்டது. விவகாரம் பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்கு தகவலளிப்பவர்கள் தயக்கம் காட்டுகின்ற போதிலும், சுடுகலன் உத்தரவுப்பத்திரங்களைப் பெறுவதற்கு தனிப்பட்ட செல்வாக்கினைப் மக்கள் பயன்படுத்துவது தொடர்பிலான பிரச்சினைகளும் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன.

தேசிய மட்டத்தை விட ஆயுதங்களுக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கும் முறைமை உள்ளூர் மட்டத்தில் மிகவும் கடுமையாக உள்ளதனால், முன்னரை விட தற்போதைய முகாமைத்துவத்தின் கீழ் சிறிதளவு உத்தரவுப்பத்திரங்களே வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஓர் உறுதியான சாதனையாகவுள்ள அதேவேளை, முக்கிய பதவிகளில் உள்ள தனிப்பட்டவர்களின் ஆளுமைகளுக்கு அக்கறையின்றி, கண்டிப்புக்கு உத்தரவாதங்களை வழங்கும் கட்டமைப்பொன்றின் மீது முறைமையின் இணக்கமின்மை தங்கியுள்ளதாகத் தெரிவது தொடர்ந்துமிருக்கின்ற ஒரு கரிசனையாகும்.

## சேகரிப்பு, மன்னிப்பு மற்றும் விழிப்பியல்

பாதுகாப்பின் முன்னுணர்வினதும், பொறுப்பான முகவராண்மைகளில் நம்பிக்கை இன்மையினதும் காரணமாக முன்னைய மன்னிப்பு முன்னெடுப்புக்கள் ஒன்றில் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட எடுப்பினைக் கொண்டிருந்தது. ஆயுதங்களைச் சேகரிப்பதற்கு அல்லது மன்னிப்பு முன்னெடுப்புகளுக்கு சிறிதளவு ஆர்வம் இருந்தது. ஆனால், பொலிசார் மற்றும் வேறு அரசாங்க முகவராண்மைகள் ஆகியவற்றில் நம்பிக்கை உட்பட சுடுகலன்களின் துஷ்பிரயோகத்தையும், பாதுகாப்பின்மையையும் உருவாக்குகின்ற நிலைமைகள் வெற்றிகரமாக ஆயுதங்கள் சேகரிக்கப்படுவதற்கு அல்லது பாரிய எண்ணிக்கையில் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் திருத்தியமைக்கப்பட வேண்டும் என மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் எச்சரிக்கை செய்தனர். எவ்வாறாயினும், முழுப் பிரச்சினைகளையும் விளைவிக்கும் கடும் குற்றம்புரிபவர்களின் ஆயுதங்கள் ஏதாவது மன்னிப்புத் திட்டத்திலிருந்து இதே மாதிரியாக அகற்றப்படாத போது பொலிசாருக்கு ஆயுதங்களைக் கையளிப்பது பற்றி மக்கள் சந்தேகம் கொள்வார்கள் என பரந்தளவில் குறிப்பிடத்தக்கது.

வன திணைக்களம் மற்றும் வனவாழ்வு உத்தியோகத்தர்களை ஆயுத பாணியிலான பயமுறுத்தல், மற்றும் குறிப்பாக, மாவட்டத்தின் பகுதிகளில் பயமுறுத்தக்கூடிய அடிக்கடி காயங்களை விளைவிக்கும் பொறித் துப்பாக்கிகளை உபயோகித்தல் போன்ற ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றத்திற்கு தொடர்பற்ற பயங்கரமான சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் ஒழிப்பது மீது எதிர்கால பொதுப் பிரச்சாரங்கள் நோக்கினைக் கொண்டிருக்கலாம். வாய்ப்புக்களுக்கும், வன்முறைகளுக்குமான அடைதலின்மைக்கும் இடையிலான தொடர்பானது பாதுகாப்பற்ற பகுதிகளில் அபிவிருத்திப் பணியை நோக்காகக் கொண்டிருப்பதற்கான அவசியத்தைச் சுட்டிச்சொல்கின்றது. இது சட்டவிரோதமான ஆயுதங்களில் கையளிப்புக்கு நேரடி கெடுதியை சனசமூகங்களுக்கு வழங்குவதை, அல்லது

இலக்குப்படுத்தப்பட்ட சனசமூக அபிவிருத்தி முன்னெடுப்புக்களின் ஊடாக பாதுகாப்பினை உயர்த்துவதற்கான பங்கெடுப்பு அணுகுமுறையைச் சம்பந்தப்படுத்த முடியும்.
சட்டவிரோதமான ஆயுதங்களைக் கொண்டிருப்பதை குறைப்பதற்காக மன்னிப்புத் திட்டம் அல்லது வேறு முன்னெடுப்பு நடத்தப்பட்டால், ஆயுதங்களை பதிவு செய்தலின் பாதுகாப்பையிட்டு சட்டவிரோதமான உரிமையாளர்களை நம்பச் செய்வதற்கு உள்ளூரில் நம்பிக்கையிலான தாபனங்களை சம்பந்தப்படுத்துவதற்கான அயராத விழிப்பியல் இயக்கமொன்று அவசியமானதாகும் என நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். சனசமூகப் பாதுகாப்பினை மேம்படுத்துவதில் சனசமூக தாபனங்கள் ஆற்றக்கூடிய வகிபங்கினையிட்டு அவர்கள் வலியுறுத்தினார்கள்.

## ஊடகங்கள் அறிக்கையிடுதல்

ஹம்பாந்தோட்டையில் சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் பிரச்சினைகள் மீது ஊடகங்களின் அறிக்கைகள் இருக்கவில்லை என கவனத்திற்கு எடுக்கப்பட்டதுடன், அங்கு திறனைக் கொண்ட இதழியலாளர்கள் இல்லாமையே இதற்கு காரணமாகக் காட்டப்பட்டது. சிறு ஆயுதங்களினதும், குற்றங்களினதும் மீது அறிக்கையிடுவது பற்றி பிராந்திய நிருபர்களுக்கான பயிற்சியானது சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் அதிக உருப்படியான முழு அடக்கத்தின் பாரிய தொகையைத் தோற்றுவிக்கும் அதேவேளை, மறுபுறத்தில் அவர்களது திறன்களை அது மேம்படுத்துவதுடன், சிறந்த வேதனத்திற்கும் இட்டுச் செல்லும். இது ஏதாவது விழிப்பியல் இயக்கத்தின் முக்கியமானதொரு அம்சமாக விளங்கும். உதாரணமாக, சுடுகலன்கள் தொடர்பிலான வழக்குகளுக்கு தண்டனை வழங்குவது குறித்து ஊடகங்களின் பிரச்சாரம், சட்டத்தினதும், சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் சட்டவிரோதமாக வைத்திருப்பதற்கும், துஷ்பிரயோகம் செய்வதற்குமான பொதுசன விழிப்பியலின் தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடும்.

## இருப்புக் குவியலின் முகாமைத்துவம்

17,000 ஆயுதங்களைச் சேகரித்து, அவற்றை பகிரங்கமாக 2005 ஜுலை 8 அன்று சுதந்திரச் சதுக்கத்தில் அழித்தமையானது சிறு ஆயுதங்களுடன், இலகு ஆயுதங்களுடன் இணைந்துள்ள பிரச்சினையைக் கவனத்தில் எடுப்பதற்கான அதன் விருப்பத்தின் உறுதியான அரசாங்க எடுத்துக்காட்டாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள ஆயுத இருப்புக் குவியலின் பாரிய எண்ணிக்கை பற்றிய விழிப்பியலை உயர்த்தும் வழிவகைகளாக இந்நிகழ்வு விளங்குகின்றது.

மாவட்டச் செயலகத்தில் உள்ள நிலவறைகளுக்கு ஆகக்குறைந்த நேர காலமொன்று தாபிக்கப்பட்டு, அதன் பின்னர் ஆயுதங்கள் அழிக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும். அதன் அமைவிடமும், வலுவான கதவும், இரட்டைபூட்டு முறைமையும் சார்புரீதியில் பாதுகாப்பான களஞ்சிய வசதியாக நிலவறையை விளங்க வைக்கின்ற போதும், கிரமமாக ஆயுங்களை அழிப்பதை உத்தரவாதமளிக்கும் முறைமை உள்ள போது அது ஆயுதங்கள் கையாடப்படுவதனாலும், அபாயகரமான ஆயுதங்கள் தேவையற்ற விதமாக தேங்கிக் கிடப்பதனாலும் ஏற்படுகின்ற ஆபத்தை மேலும் குறைக்கும்.

பெரிதும் வலுவானதும், இரட்டை பூட்டிலானதுமான கதவுகளுடன் பொருத்தப்பட்ட ஆயுதக் களஞ்சியங்களை உறுதிப்படுத்துவதன் மூலம், பொலிஸ் ஆயுதக் கையிருப்புக்களின் பாதுகாப்பினை மேம்படுத்துவது விரும்பத்தக்கதாகும். பாவனையில் இல்லாத ஆயுதங்கள் ஆயுதக் கிடங்கில் பார்வைக்குத் தெரியாத விதமாக கிரமமாக களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

பொலிஸ் பாதுகாப்பில் உள்ள மிதமிஞ்சிய சிறு ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் ஆகியன பற்றி அதிக கிரமமான மதிப்பாய்வுகள் செய்யப்பட வேண்டும் என்றும் (சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் சகல அரசாங்க முகவராண்மைகள் கொண்டிருக்க வேண்டும்) அவற்றை அழிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் விதந்துரைக்கப்படுகின்றது. பெருந்தாக்குதல், கொள்ளை, சிவில் கிளர்ச்சி நடந்தால் அல்லது பொலிஸ் நிலையமொன்றில் தனிப்பட்ட அடாத காரியம் நடந்தால் இத்தகைய ஆயுதங்கள் தொலையும் போது, அது பொதுசனப் பாதுகாப்புக்கு மிகவும் பாரதூரமான பின்விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடும்.

வன வாழ்வுத் திணைக்களத்தினுள் ஆயுதங்களின் களஞ்சிய நிலைமைகள் மோசமானதாக இருந்ததாக அளவீட்டுக் குழாம் அவதானித்ததுடன், இது அனேகமாக வன திணைக்களத்திற்குப் பொருத்தமானதாகும். எதிர்காலத்தில் ஆயுதங்கள் தொலைந்து போவதற்கு எதிரான பொதுவான முன்னெச்சரிக்கையாக, கடல் மட்டத்திற்கு மேல் உள்ள அமைவிடங்களில் மட்டும் ஆயுதக் கிடங்குகள் அமைக்கப்பட வேண்டும் என்பதையும், மிகவும் வலுவான கதவுகளுடனும், இரட்டைப் பூட்டுக்களுடனும், ஆயுதங்களுக்கும், ரவைகளுக்கும் புறம்பான களஞ்சியப்படுத்தலுடனும் சிறந்த முறையில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் என்பதையும் ஆலோசனைக்கு எடுப்பது பெறுமதியானதாகும்.

ஆயுதப் படைகளினால் தொழிற்படுத்தப்படும் இருப்புக் குவியல் பாதுகாப்பு நடைமுறைகளை மதிப்பிடுவதற்கு அளவீட்டுக் குழாமினால் சாத்தியப்படவில்லை. ஏனெனில் இது தேசிய பந்தோபஸ்தின் விடயமொன்றாகக் கருதப்பட்டது.

சகல அரசாங்க முகவராண்மைகளிலும் ஆயுதங்களைக் கணக்கெடுப்பதற்கான நடைமுறைகள் சிறப்பாக இருந்ததாகத் தோன்றுகின்றது. இது சட்டவிரோதமான சந்தையினுள் ஆயுதங்கள் எவ்வாறு தனது வழியைக் கண்டறிந்துள்ளன என்ற மேலதிக கேள்விகளை முன்வைக்கின்றது.

### தகவலும், கண்காணித்தலும்

சகல அரசாங்க உடமைகளினதும், கணக்கிடப்படாத ஆயுதங்களினதும் செம்மையான இலத்திரனியல் தரவுத்தளம் தொடர்ந்தும் இல்லாதிருப்பது பின்வருவனவற்றுக்கு ஒரு தடையாகும்:

- பொறுப்பான உத்தியோகத்தர் மத்தியில் அறிவினதும், கொள்கைப் பதிலிறுப்புக்களினதும் முன்னேற்றம்,
- ஆளணியினர் மாறுகின்ற போது நிறுவனரீதியிலான ஞாபகார்த்தத்தின் இழப்பினைத் தடுத்தல், அத்துடன்
- கையினாலான பதிவு வைத்திருத்தலுடன் இணைந்துள்ள தொழிலின் சுமையைக் குறைத்தல்.

அரசாங்கச் சேவையாளர்கள் கொண்டுள்ள சகல ஆயுதங்களையும், ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னர் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்டு, கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படா ஆயுதங்களையும் சுற்றியுள்ள ஒளிவு மறைவின்மையின் மட்டுப்படுத்தல்கள் அரசாங்கம் வழங்கிய ஆயுதங்களின் முகாமைத்துவம் தொடர்பிலான முக்கிய பிரச்சினைகளின் தெளிவான படத்தின் முன்னேற்றத்திற்கு குறிப்பிட்ட தடைகளாகும். இது தொடர்பான பிரச்சினை பகுப்பாயப்பட்டு, மிகவும் ஒளிவு மறைவற்ற விதத்தில் பேசி முடிவு எடுக்கப்படுவது விரும்பத்தக்கதாகும்.

சுகாதார அமைச்சினால் அல்லது பொலிசாரினால் சரிவர அமுல்படுத்தப்பட்டால், ஆயுத வன்முறைக் காயங்கள் மீதான தரவுகளைத் தொகுப்பதற்கும், பகுப்பாய்வதற்குமான முறைமையொன்று ஆயுத வன்முறையின் பிரச்சினை எங்கு செறிந்துள்ளது, அது யாரை மிகவும் பாரதூரமாகப் பாதித்துள்ளது என்பனவற்றையிட்டு கொள்கை வகுப்போருக்கு தகவலின் பெறுமதிமிக்க மூலத்தை வழங்கும். ஆதலினால், தலையீடுகளைத் திட்டமிடுவதற்கு இது முக்கியமானதொரு அடிப்படையாக விளங்கும். சட்டவிரோதமான சிறு ஆயுதங்கள் பல்கிப் பெருகுவதையும், வன்முறையிலான நடவடிக்கையை அவற்றின் உபயோகத்தையும் சமாளிப்பதற்கு ஏதாவது முன்னெடுப்புக்களின் செயற்திறனை எடுத்துக் காட்டுவதற்கு கண்காணித்தல் பொறிநுட்பத்தின் மையத்திலேயே இது தங்கியுள்ளது. இவ்வகையிலான தரவு திரட்டுதல் முறைமைகள் காயங்களைத் தடுப்பதற்கான WHO திணைக்களம், நெருக்கடி நிலையைத் தடுப்பதற்கும், மீட்பித்தலின் இணை ஆயுத வன்முறைத் தடுப்புத் திட்டத்திற்குமான UNDP பணியகம் ஆகியவற்றினால் வெளிப்படையாக உயர்வளிக்கப்படுகின்றன. ஆதலினால், தனது ஏலவேயுள்ள சுகாதார/பொலிஸ் தகவல் முறைமையினுள் ஆயுத வன்முறையின் கண்காணித்தலைக் கட்டியெழுப்புவதற்கு நன்கொடையாளர் ஆதரவைக் கண்டறிவதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடும்.

மேலும், பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களையும், தேவைப்படும் சந்தேக நபர்களையும், மற்றும் காணாமல் போன ஆட்களையும் கொண்ட தரவுத் தளங்கள் முறையே சட்டவிரோதமான ஆயுதங்களை, குற்றவியல் விசாரணைப் பணியை அல்லது பாதிக்கப்பட்டவரை அடையாளங் காணுதல் ஆகியவற்றை கண்டுபிடிப்பதற்கான சாத்தியமான வசதியைக் கொண்டிருக்கும்.

## 1. அறிமுகம்

### நோக்கெல்லையும், சம்பந்தமும்

சகல அதன் அம்சங்களிலும் சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் சட்டவிரோத வர்த்தகத்தைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும், ஒழிப்பதற்குமான நடவடிக்கையின் ஐக்கிய நாடுகள் திட்டத்தின் (UNPoA) கீழ் தேசிய மட்டத்தில் எடுக்கப்பட்ட சிறு ஆயுதங்கள்-தொடர்பான பிரச்சினைகளுக்கான அணுகுமுறையை ஒருங்கிணைப்பதற்காக தேசிய ஆணைக்குழுக்களைத் தாபிப்பதற்கு அரசாங்கங்கள் உடன்பட்டன. இதன் பிரகாரம், தேசிய சட்டவிரோத சிறு ஆயுதங்கள் பல்கிப் பெருகுதலுக்கு எதிரான ஆணைக்குழு (NCAPISA) 2004 ஒக்ரோபரில் இலங்கையின் ஜனாதிபதியினால் தாபிக்கப்பட்டது. 2005 நொவம்பர் தேர்தலில் ஜனாதிபதியின் மாற்றத்துடன், புதிய ஜனாதிபதியின் கட்டளையினால் 2006 பெப்ரவரியில் NCAPISA மீள் தாபிக்கப்பட்டது. வேறு பொறுப்புக்களின் மத்தியில், பின்வருவனவற்றுக்காக ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

- சட்டவிரோதமான சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் சேகரிப்பதற்காக செயல் திட்டமொன்றை வகுத்தமைத்தலும், அமுல்படுத்தலும்;
- சுடுகலன்கள் தொடர்பிலான குற்றங்களுக்கு பதிலிறுப்பதற்காக சட்ட மற்றும் நீதித்துறை வரைத்திட்டத்திற்கான மேம்படுத்தல்களைச் சுட்டிச்சொல்லுதல்;
- சட்டவிரோதமான ஆயுதங்களைத் தன்னிச்சையாக ஒப்படைப்பதற்காக மன்னிப்பொன்றை வகுத்தமைத்தல்;
- அரச சார்பற்ற தாபனங்களிலிருந்து உட்பட, ஏதாவது அவசியமான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்;
- சட்டவிரோதமான சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் விநியோகங்களின் மூலங்களை அடையாளங் காணுதலும், இத்தகைய கடத்தலைச் செயற்றிறனாகக் கட்டுப்படுத்தும் வழிவகைகளைச் சுட்டிச்சொல்லுதலும்.

NCAPISAஇன் கடப்பாட்டினுள் இந்த முக்கிய விடயங்களை நிறைவேற்றுவது மீது உருப்படியான முன்னேற்றத்தை தற்போதைய அளவீடு பிரதிநிதிப்படுத்துகின்றது. சிறு ஆயுதங்களுக்கும், இலகு ஆயுதங்களுக்கும் தென் கிழக்கு ஐரோப்பிய அப்புறப்படுத்தல் நிலையத்தினால் (SEESAC) உள்ளடக்கப்பட்டுள்ள நாடுகளில் சிறு ஆயுதங்கள் மற்றும் இலகு ஆயுதங்கள் தொடர்பில் தேசிய பிரச்சினைகளை உள்ளடக்கும் ஆராய்ச்சி அறிக்கைகளில் சேபர்வோர்ல்டினால் (Saferworld) உருவாக்கப்பட்ட முறைமையியலுக்கான தொடர்புடன் இது தொகுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சட்டவிரோதமான சிறு ஆயுதங்கள் மற்றும் இலகு ஆயுதங்கள் குறித்த பிரச்சினைகள் மீது மட்டுப்படுத்தப்பட்ட நேர காலமொன்றிலும், விரிவான தேசிய அளவீடொன்றில் முன்னோடிக் கட்டமாகவும் அளவீடு நடத்தப்பட்டுள்ளது. ஆகவே, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மீதான குறிப்பான நோக்குடன் சிறு ஆயுதங்களையும், சனசமூகப் பாதுகாப்பினையும் இது விசாரிப்பதுடன், பின்வருவன தொடர்பில் தகவலையும் சமர்ப்பிக்கின்றது:

- மாவட்டத்தில் சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் பங்கீடு;
- சிறு ஆயுதங்கள், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியன தொடர்பில் பொதுசன முன்னுணர்வுகளுக்கான குறிப்பிட்ட தொடர்புடன் சமூகம் மீது அவற்றின் தாக்கங்கள்;
- அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகளைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினதும், வேறு செயற்பாட்டாளர்களினதும் ஆற்றலளவு மற்றும் முன்னுணரக்கூடிய எதிர்காலத்திற்கு மாவட்டத்தில் சட்டவிரோதமான சிறு ஆயுதங்களைக் கட்டுப்படுத்துதல்;
- அளவீட்டு முடிவுகளின் அடிப்படையின் மீது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூழ்நிலையை முன்னேற்றுவதற்கு சாத்தியமான நடவடிக்கைகள்.

## முறைமையியல்

நான்கு முறைகளைப் பயன்படுத்தி இவ்வளவீட்டுக்கான தகவல் திரட்டப்பட்டது:

- **பட்டியல் மதிப்பாய்வு:** இத் துறையில் முன்னைய வெளியீடுகளின் விஸ்தாரமான மதிப்பாய்வினை அளவீடு கவனத்திற்கெடுக்கின்றது.
- **நோக்குக் குழுக் கருத்துப்பரிமாறல்கள்:** சிறு ஆயுதங்கள், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியன தொடர்பில் உள்ளூர் மக்களின் முன்னுணர்வினுள் விரிவான பண்பறிதல் உள்நோக்கத்தினை ஈட்டுவதற்காக 90 நிமிடங்களுக்கும், 180 நிமிடங்களுக்கும் இடையில் நீடிக்கும் ஆறு நோக்குக் குழு கருத்துப்பரிமாறல்கள் பொறுப்பேற்கப்பட்டன. கிராமிய ஆண்கள், கிராமியப் பெண்கள், வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், சிறுபான்மை நகர ஆண்கள், மற்றும் நகரப் பெண்கள் ஆகியோரை குழு அடக்கியிருந்தது.
- **ஊடகப் பகுப்பாய்வு:** ஹம்பாந்தோட்டை மாவட்டம் தொடர்பிலான சிறு ஆயுதங்கள், மற்றும் இலகு ஆயுதங்கள் பிரச்சினைகள் மீது ஊடக அறிக்கைகளின் பகுப்பாய்வொன்று பொறுப்பேற்கப்பட்டது. அளவீட்டுக்கு முன்னரான ஒரு வருடத்தைக் கொண்ட காலத்திற்கு ஆறு செய்திப்பத்திரிகைகளில்[4] குறிப்பிட்ட முக்கிய செய்திகளை அடக்கியுள்ள சகல அறிக்கைகளையும் பகுப்பாய்வு கவனத்திற்கெடுத்தது.
- **முக்கிய தகவலளிப்பவர் நேர்முகங்காணல்கள்:** சம்பந்தப்பட்ட தகவலையும், புள்ளிவிபரங்களையும் திரட்டுவதற்கும், மாவட்டத்தில் சட்டவிரோதமான சிறு ஆயுதங்களின் கட்டுப்பாடு தொடர்பிலான சான்றினையும், உட்கட்டமைப்பையும் சோதிப்பதற்கும் சட்டவிரோதமான சிறு ஆயுதங்களின் கட்டுப்பாட்டில் பங்குதாரர்களின் கருத்துக்களை மதிப்பிடுவதற்காக முக்கியமான தகவலளிப்பவர்களுடன் 40க்கு மேற்பட்ட நேர்முகங்காணல்கள் நடத்தப்பட்டன.

குடித்தனக் கேள்விக்கொத்து இன்மையே குறிப்பிடத்தக்கதாகும். இது விருப்புரிமையாக, இவ் வகையான ஆராய்ச்சியை நடத்தும் போது தரவைத் திரட்டுவதற்காக சேபர் வேர்ல்டினால் வழமையாகப் பயன்படுத்தப்படும். இறுக்கமான காலச் சட்டம் அசாத்தியமாக்கி இருக்காவிட்டால், இந்த அம்சத்தை முறைமையியல் உள்ளடக்கியிருக்கும். இத்தகையதொரு கேள்விக்கொத்தை திட்டமிடப்பட்ட தேசிய அளவீடு உள்ளடக்க வேண்டும்.

## சம்பந்தத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டம்

இலங்கையின் தெற்குக் கரையோரத்தின் வழியே அமைந்துள்ள ஹம்பாந்தோட்டை மாவட்டம் 2,609 சதுர கிலோ மீட்டர்கள்[5] கொண்ட பகுதியொன்றை உள்ளடக்குகின்றது. இது 525,370[6] கொண்ட சனத்தொகையைக் கொண்டுள்ளது. இதில் பெரிதுமே அச்சொட்டாக 50 சதவீதத்தினர் பெண்களாவர்.[7] மாவட்டத்தில் தொழிலின்மையின் வீதம் அண்ணளவாக 11 சதவீதமாகும்.[8] ஒரு மூலத்தின் பிரகாரம், இலங்கையின் 25

---

[4] நாளாந்த மற்றும் ஞாயிறு லங்காதீப (சிங்களம், தனிப்பட்டரீதியில் உரிமையானது); தினமின மற்றும் சிலுமின (சிங்களம், அரசாங்கக் கட்டுப்பாட்டிலான லேக் ஹவுஸுக்கு உரிமையானது); த ஐலன்ட் மற்றும் சன்டே ஐலன்ட் (ஆங்கிலம், தனிப்பட்டரீதியில் உரிமையானது).

[5] சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், ஹம்பாந்தோட்டையை மீள வழமைக்குக் கொண்டு வருதல்: தென்னிலங்கையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு சுனாமிக்குப் பின்னரான ஜீவனோபாய தேவைகள் மதிப்பீடு http://www.iwmi.cgiar.org/TSUNAMI/pdf/தளக்கோளத்திலான இறுதி சுனாமி அறிக்கை 30.03.2005. pdf, பக்கம் 2.

[6] 2001 குடிசன கணக்கெடுப்பிலிருந்து தரவுகள் மீதான அடிப்படை: பார்க்க இலங்கை அரசாங்கம் குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 'சனத்தொகைப் புள்ளிவிபரங்கள்', http://www.statistics.gov.lk/population/index.htm மற்றும் http://www.statistics.gov.lk/population/tables.pdf இல் உள்ள இணைந்துள்ள அட்டவைணப்படுத்தப்பட்ட தரவுகள், 2006 ஜூன் 2இல் கையகப்படுத்தப்பட்டது.

[7] சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், ஹம்பாந்தோட்டையை மீள வழமைக்குக் கொண்டு வருதல்: தென்னிலங்கையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு சுனாமிக்குப் பின்னரான ஜீவனோபாய தேவைகள் மதிப்பீடு http://www.iwmi.cgiar.org/TSUNAMI/pdf/தளக்கோளத்திலான இறுதி சுனாமி அறிக்கை 30.03.2005. pdf, பக்கம் 2.

[8] வறுமை செய்தித் திரட்டு, குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்.

மாவட்டங்களில் மூன்றாவது வறுமைப்பட்ட மாவட்டமாக ஹம்பாந்தோட்டை திகழ்வதுடன், அதன் சனத்தொகையின் 32 சதவீதத்தினர் ஏழைகளாக[9] வகைப்படுத்தப்பட்டுள்ளனர். சிங்களவர் 97 சதவீதத்தினர், முஸ்லிம்கள் 2 சதவீதத்தினர், தமிழர் 1 சதவீதத்தினர் என மாவட்ட சனத்தொகையை உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.[10]

வரலாற்றுரீதியில், இலங்கையின் தென் பகுதியானது மார்க்ஸியவாத மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கட்சியின் ஆரம்பநிலையிலான ஆதரவுத் தளமாக பலரினாலும் நோக்கப்படுகின்றது. 1971இல் ஆரம்பக் கிளர்ச்சியை கட்சி ஆரம்பித்த போது, நாடுபூராவிலுமான வன்முறைக்கு தமது பங்கினை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள பட்டினங்கள் சான்றுபகிர்ந்தன. இங்கு 8,000 முதல் 10,000 வரையிலான உயிர்கள் மடிந்ததாக மதிப்பிடப்படுகின்றது.[11] 1987இல் ஆரம்பமாகி, 1989இல் முடிவடைந்த ஜே.வி.பி. இனால் ஆரம்பிக்கப்பட்ட மேலும் ஒரு கிளர்ச்சி 60,000 வரையிலான மரணங்களை விளைவித்துள்ளது. ஆகவே, இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் (எல்.ரி.ரி.ஈ.) இடையில் நீண்ட கால முரண்பாட்டினால் சார்புரீதியில் தொந்தரவைக் கொண்டிருக்காத போதிலும், அரசியல்ரீதியில் செயல்நோக்கமளிக்கப்பட்ட ஆயுத வன்முறையினால் வரலாற்றுரீதியில் ஹம்பாந்தோட்டை மாவட்டம் பாதிப்படைந்துள்ளது.

2004 டிசம்பர் 26 அன்று இலங்கையின் அதிகளவு கரையோரத்தை அழித்த சுனாமியினால் மாவட்டம் மோசமாக பாதிப்படைந்தது. இலங்கை அரசாங்கத்தின் எண்ணிக்கைகளின் பிரகாரம், சுனாமியினால் மாவட்டத்தில் அண்ணளவாக 4,500 பேர் கொல்லப்பட்டதுடன்,[12] மேலும் 46,998 பேர் இடம்பெயர்ந்தனர் (பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் மத்தியில் ஐந்தாவது பாரிய எண்ணிக்கை).[13] அது முதல் பெருமளவு புதிய வீடுகளின் விரைவான மீள் நிருமாணத்துடனும், உல்லாசப்பயண மற்றும் வேறு உட்கட்டமைப்பின் புனருத்தாபனத்துடனும் அது பழைய நிலையை பலமான நிலையில் அடைந்துள்ளது.[14]

## 2. பங்கீடு

ஆராய்ச்சி குழாமுக்கு கிட்டுகின்ற தகவலைப் பொறுத்தளவில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சகல செயற்பாட்டாளர்களின் சட்டபூர்வமானதும், சட்டவிரோதமானதுமான சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் உடமைகளை இப்பகுதி விபரிக்கின்றது.

### சட்டபூர்வமான சிவிலியன் உடமைகள்

2006 மே இல் உள்ளவாறு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பயிர்களையும், விலங்கு வேளாண்மையையும் பாதுகாப்பதற்காக அல்லது ஆயுதக் கொள்ளையிலிருந்து வங்கியைப் பாதுகாப்பதற்காக 774 சுடுகலன்கள் உத்தரவுப்பத்திரங்கள் தக்க வைக்கப்பட்டிருந்தன.[15] தக்கவைக்கப்பட்டுள்ள சுடுகலனுக்கு ஒரு உத்தரவுப்பத்திரம்

---

[9] சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், ஹம்பாந்தோட்டையை மீள வழமைக்குக் கொண்டு வருதல்: தென்னிலங்கையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சுனாமிக்குப் பின்னரான ஜீவனோபாய தேவைகள் மதிப்பீடு http://www.iwmi.cgiar.org/TSUNAMI/pdf/தளக்கோளத்திலான இறுதி சுனாமி அறிக்கை 30.03.2005. pdf, பக்கம் 2.

[10] ஹம்பாந்தோட்டையில் மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2005 செப்ரெம்பர் 01 திகதியிடப்பட்டது.

[11] குணரட்ன, ஆர்., இலங்கை: ஒரு தொலைந்த புரட்சி, (கண்டி, அடிப்படை ஆய்வுகள் நிறுவனம், 1990 (3 e, 2001), பக்.105.

[12] இலங்கை அரசாங்கம், சுகாதார இணைய தளம், 9.0 சுனாமி: 2004 அழிவு http://203.94.76.60/tsunami/links/figures.html 2006 மே 22இல் கையகப்படுத்தப்பட்டது. சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், 'ஹம்பாந்தோட்டையை மீள வழமைக்குக் கொண்டு வருதல்: தென்னிலங்கையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு சுனாமிக்குப் பின்னரான ஜீவனோபாய தேவைகள் மதிப்பீடு', (2005), பக்கம் 6இல் மாற்று எண்ணிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இது 3,067 மக்கள் உறுதியாக இறந்தனர் என்றும், 361 பேர் காயமடைந்தனர் என்றும் 363 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் குறிப்பிடுகின்றது (மாவட்ட அழிவு முகாமைத்துவ குழுவை குறிப்பிடுகின்றது, 2005).

[13] இலங்கை அரசாங்கம், சுகாதார இணைய தளம், அதேவாறு.

[14] சுனாமியின் பின்னர் 2,733 வீடுகள் சேதமடைந்தன. இவற்றில் பெரும்பாலானவை தங்காலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகப் பிரிவுகளில் சேதமடைந்தன. சுனாமியின் பின்னர் பகுதியளவிலான பழுதுபார்த்தலுக்கு, அல்லது முழுமையான மீள்நிருமாணத்திற்கு வாக்களிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 4,514 ஆகும். 2005 செப்ரெம்பர் 01இல் உள்ளவாறு வாக்களிக்கப்பட்ட வீடுகளில் 2,231 வீடுகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. 2005 செப்ரெம்பர் 01 திகதியிடப்பட்டவாறு ஹம்பாந்தோட்டையில் மாவட்டச் செயலகத்திலிருந்து புள்ளிவிபரங்கள் பெறப்பட்டன.

[15] ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல், 2006 மே 15.

வழங்கப்படும் என்றவாறு உள்ளூர் மட்டத்தில் இத்தகைய உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.[16] உத்தரவுப்பத்திரங்களின் கீழ் தக்கவைக்கப்பட்டுள்ள 774 சுடுகலன்கள் அட்டவணை 01இல் வகைப்படுத்தலினால் பிரிக்கப்பட்டுள்ளது.[17]

| **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| பயிர் பாதுகாப்பும், விலங்கு வேளாண்மையும் | 703 |
| மக்கள் வங்கி | 35 |
| இலங்கை வங்கி | 31 |
| தேசிய சேமிப்பு வங்கி | 05 |
| மொத்தம் | 774 |

**அட்டவணை 01 - மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரங்களின் எண்ணிக்கை**

உதாரணமாக, மாவட்டத்தில் உத்தரவுப்பத்திரம் பெற்ற ஆயுதங்களின் உரித்துரிமை எங்கு செறிந்துள்ளது, தக்கவைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் வகை அல்லது உரிமையாளர்களின் வயது மற்றும் பால்நிலை ஆகியனவற்றை கிட்டிய தகவல் எடுத்துக்காட்டவில்லை. மாவட்ட மட்டத்தில் உத்தரவுப்பத்திரங்களை வழங்குவதற்கு பொறுப்பான உத்தியோகத்தரின் கூற்றுப்படி, ஹம்பாந்தோட்டையில் உத்தரவுப்பத்திரம் பெற்றவர்களினால் தக்கவைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் ரவைத் துப்பாக்கிகளையும், 'ரிப்பீட்டர்' ரவைத் துப்பாக்கிகளையும் மற்றும் நீண்ட குழல் துப்பாக்கிகளையும் உள்ளடக்குகின்றன. தயாரிப்பாளர்களின் உதாரணங்கள் பைகால், ஸ்ரீவன்சன் மற்றும் சவேஜ் ஆகியனவற்றை உள்ளடக்குகின்றன.[18]

பயிர் பாதுகாப்புக்கு அல்லது விலங்கு வேளாண்மைக்கு ஆயுதங்களை வைத்திருப்ப தற்கான சட்டபூர்வமான தேவையைக் கொண்டுள்ளவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கமக்காரர்கள் அதிகாரவர்க்கத்திற்குரிய நடைமுறையின் பொதுவான நிந்திப்பின் காரணமாக முறைமையாக தமது துப்பாக்கிகளுக்கு உத்தரவுப்பத்திரம் பெறுவதற்கு சில சந்தர்ப்பங்களில் தயக்கம் காட்டுவதற்காக கூறப்படுகின்றது.[19] ஆகவே, சட்டபூர்வ கட்டுப்பாட்டினுள் இத்தகைய ஆயுதங்களையும், செயற்பாடுகளையும் கொண்டு வருவதற்கு இலக்குபடுத்தப்பட்ட விழிப்பியல் முன்னெடுப்பு ஒன்றுக்கான அவசியமொன்றுள்ளது.

## உத்தரவுப்பத்திரம் பெறாத சிவிலியன் உடமைகள்

மாவட்டத்தின் அதிக சார்புரீதியில் பாதுகாப்பான பகுதிகளில் வாழும் பொதுசன உறுப்பினர்களினால் பொதுவான இடமாக துப்பாக்கியை வைத்திருத்தல் உணரப்படவில்லை. ஆனால், திட்டமான செயல்நோக்கத்திலான உபயோகிப்பாளர்களின் செயற்பாடுகளுடன் தொடர்பினைக் கொண்டுள்ளதுடன், சில அமைவிடங்களில் விஸ்தாரமாகப் பரந்துள்ள செயற்பாடுகளுக்கு தொடர்பினைக் கொண்டுள்ளது.[20] உத்தரவுப்பத்திர முறைமைக்கு விலகியுள்ள, ஆனால் வேட்டையாடுதல், பூச்சிக் கட்டுப்பாடு போன்ற சட்டபூர்வமான நோக்கங்களுக்காக துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள், திருட்டுத்தனமாக வேட்டையாடுபவர்கள், சட்டவிரோதமாக மரங்களைத் தறிப்பவர்கள், விறகுகளைச் சேகரிப்பவர்கள், தனிப்பட்ட குற்றவாளிகள், ஒழுங்கு செய்யப்பட்ட குற்றத்தில் சம்பந்தப்படடுள்ள கோஷ்டிகள் மற்றும் கூட்டுக் குழுக்கள் (கொள்ளை, ஒப்பந்தக்

[16] அதேவாறு
[17] அதேவாறு
[18] அதேவாறு
[19] ஹம்பாந்தோட்டை கமத்தொழில் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல், 2006 மே 24.
[20] நகரப் பெண்களுடன் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்.

கொலைகள் மற்றும் கஞ்சாச் செடி செய்கை போன்ற), தேர்தல் அல்லது அரசியல் பயமுறுத்தல் மற்றும் வன்முறை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் உத்தியோகபூர்வ உபயோகத்திற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட ஆயுதங்களை மீள வழங்காமல் வைத்திருப்பவர்கள் ஆகியோரை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள சட்டவிரோதமான உரிமையாளர்கள் உள்ளடக்குகின்றனர்.

இப் பட்டியலுக்கு சட்டவிரோதமாக துப்பாக்கிகளை உற்பத்தி செய்பவர்களை சேர்த்துக் கொள்ள முடியும். இலங்கையில் சுடுகலன்களைத் தயாரிப்பதற்கு எவருமே அங்கீகரிக்கப்படாத போதிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ளூரில் உற்பத்தியாகும் சுடுகலன்கள் அல்லது 'கல்கட்டாஸ்' ஆகியன தொடர்பில் சிறிதளவு பிரச்சினைகள் உள்ளன.

2005இல் SASA-Net Sri Lankaஇனால் நடத்தப்பட்ட சிவில் சமூக உசாவுகையின் அங்கமாக ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற கருத்துப்பரிமாறலில் மாவட்டத்தின் உட்பகுதிகளில் சட்டவிரோதமான ஆயுதத் தயாரிப்பாளர்கள் உள்ளார்கள் என்ற கோரல் உள்ளடக்கப்பட்டிருந்தது.[21] இம்முடிவானது நோக்குக் குழு கருத்துப்பரிமாறல் பங்கெடுப்பாளர்களினால் மீட்டுரைக்கப்பட்டது. அவர்கள் இத்தகைய தயாரிப்புக்கு அறியப்பட்ட அமைவிடங்களாக ஹக்மன, பெலியத்தை, மற்றும் வலஸ்முல்ல ஆகியன விளங்குகின்றன எனக் குறிப்பிட்டார்.[22] நீண்ட குழல் துப்பாக்கிகள் பழுதுபார்க்கப்பட்டு, உள்ளூர் கொல்லர்களினால் ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்யப்பட முடியும் என நேர்முகங்காணப்பட்ட ஒருவர் குறிப்பிட்டார்.[23] 2003-2004இல், சூரியவெவ, வீரகெட்டிய மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகியவற்றில் மூன்று சட்டவிரோதமான ஆயுத உற்பத்தியாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட அதேவேளை, தங்காலை, வலஸ்முல்ல மற்றும் கதிர்காமம் ஆகியவற்றில் (ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் வடக்கில்) வெடிமருந்து உற்பத்தியாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.[24]

'கல்கட்டாஸ்' குழல்களுக்கு, ஒன்றில் வேறு துப்பாக்கிகளின் பாகங்களை (சில சந்தர்ப்பங்களில் குறுக்கப்பட்ட குழலை வெட்டுவதன் மூலம்), அல்லது பொதுவாகக் கிட்டுகின்ற நீர்க்குழாய்களை, அத்துடன் பழைய மொரிஸ் மைனர் வாகனங்களின் 'ஸ்ரியரிங்வீல்' தண்டை கொல்லர்கள் பயன்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.[25] பெரிதுமே தயாராகக் கிட்டுகின்ற ஏதாவது ரவையைச் சுடுவதற்காக 'கல்கட்டாஸ்' வடிவமைக்கப்படுகின்றது. ஆதலினால், 12 துளை அல்லது 16 துளை - துப்பாக்கி ரவைகளையும் சுடுகின்ற உள்ளூர் துப்பாக்கிகளும், அத்துடன் அதிகரித்தளவில் T-56 தாக்குதல் துப்பாக்கி ரவைகளும் மாவட்டத்தில் இருப்பதற்கான உதாரணங்கள் உள்ளன.[26] 'T கட்டாஸினால்' (T-56 ரவைகளைச் சுடும் 'கல்கட்டாஸ்') 'கல்கட்டாஸ்' அதிகரித்தளவில் தற்காலப் போக்கிற்கு ஒவ்வாததாக்கியுள்ளதாக மித்தெனியாவுக்கு அருகில் இருந்த இளைஞர்கள் தெரிவித்தனர். இது T-56 ரவை இலகுவாகக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதாகத் தெரிகின்றது.[27] சீன வகையிலான T-56 தாக்குதல் துப்பாக்கி ரவையை (AK-47இன் திரிபுபடுத்தப்பட்ட) சாயல்படுத்தும் ஆற்றலளவை பகுதியில் உள்ள சில உள்ளூர் ஆயுத உற்பத்தியாளர்கள் உருவாக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.[28]

---

[21] SASANet சிவில் சமூக உசாவுகை நடைமுறையிலிருந்து தென் மாகாணத்திற்கான கண்டுபிடிப்புக்கள், 2005.

[22] நகரப் பெண்களுடன் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்.

[23] 2006 மே 16இல் தங்காலை சிறைச்சாலையில் சிறைக் கைதியொருவருடன் நேர்முகங்காணல். நகர ஆண்கள், நகரப் பெண்கள் மற்றும் கிராமிய ஆண்கள் ஆகியோருடனான நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்களில் 'கல்கட்டாஸை' உற்பத்தி செய்யும் கொல்லர் பற்றி கவனத்திற்கெடுக்கப்பட்டது.

[24] 2006 மே 30இல் MoDPSLO சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[25] 2006 மே 24இல் மித்தெனியவுக்கு அருகில் இளைஞர்களுடன் நேர்முகங்காணல்,

[26] கிராமிய ஆண்களுடன் நோக்குக் குழு கருத்துப் பரிமாறலில் T-56 ரவையுடனான ஒத்ததன்மை பற்றி பரந்தரீதியில் குறிப்பிடப்பட்டது.

[27] 2006 மே 24இல் மித்தெனியவுக்கு அருகில் இளைஞர்களுடன் நேர்முகங்காணல்.

[28] 2006 மே 17இல் பெலியத்தை பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

இரு ஜே.வி.பி. கிளர்ச்சியின் மரணச்சாசனமாக மாவட்டத்தில் உள்ள சில சட்டவிரோதமான சுடுகலன்கள் வைத்திருக்கப்படுவதாகக் தோன்றுகின்றது. 1965-1969 வரை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் (கிரிந்தவில் லிட்டில் பாசஸஸ் வெளிச்ச வீட்டின் கண்ணுக்கெட்டிய தூரத்தில்) ஆரம்ப ஜே.வி.பி. உறுப்பினர்களினால் செயற்படுத்தப்பட்ட கோழிப் பண்ணை ஒன்றின் ஊடாக இலங்கையினுள் ஆயுதங்களின் சில கடத்தல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்பதை ஜே.வி.பி. கிளர்ச்சிக்காரர்களின் விரிவான கூற்றிலிருந்து தெரியவருகின்றது.[29] ஜே.வி.பி. கிளர்ச்சியினால் உருவாக்கப்பட்ட ஆயுதங்களுக்கான கிராக்கிக்கு உற்பத்தி செய்வதில் உள்ளூர் கொல்லர்களின் திறமை விருத்தி செய்யப்பட்டதாக நேர்முகங் காணப்பட்ட சிலர் குறிப்பிட்டனர்.[30] சுரிகைகளுடனான துப்பாக்கிகள் மீது நோக்கினைக் கொண்டும், குண்டுகளையும், சுடுகலன்களையும் உள்நாட்டிலேயே விருத்தி செய்தும் 1969இல் ஆர்வத்தில் ஆயுதாரிகளாவதற்கு ஆரம்பித்ததையும் வழங்குகையில், இது சாத்தியமானதாகும்.[31] 1970இன் பிற்பகுதியில், 3,000 அடிப்படைக் குண்டுகளைக் கொள்வனவு செய்த ஜே.வி.பி. நாடுபூராவும் கிளர்ச்சிக்காரர்களினால் குண்டு உற்பத்தியில் பயிற்சியை ஒழுங்குபடுத்தியது.[32] 1971இன் ஆரம்பத்தில், 100,000க்கு மேற்பட்ட உறுப்பினர்களை ஜே.வி.பி. கொண்டிருந்ததுடன், அவர்கள் யாவரும் தாமாகவே ஆயுததாரிகளாக இருக்க வேண்டுமென பகிரங்கமாகக் கட்டளையிடப்பட்டது.[33] இவ்வாறாக இருந்த போதிலும் 100,000க்கு மிகவும் குறைவான சிறு ஆயுதங்களையே கட்சி கொண்டிருந்தது. 1971 கிளர்ச்சி ஒரு சிறு தொகையிலான நவீனமயமற்ற சுடுகலன்களினால் மேலோங்கியது. இவை ‘கல்கட்டாஸ்’, 12 துளை அல்லது 16 துளை ரவைத் துப்பாக்கிகள்,[34] கைக்குண்டுகள்,[35] அடிப்படையான குண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் ரிவோல்வர்கள்[36] ஆகியனவற்றை உள்ளடக்குவதாகத் தோன்றுகின்றது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இந்நேரத்தில் எத்தனை ஜே.வி.பி. ஆயுதங்கள் தக்கவைக்கப்பட்டிருந்தன அல்லது அதைத் தொடர்ந்து இருந்தன என்பது தெளிவில்லை.

1987-1989 ஜே.வி.பி. கிளர்ச்சி பெரிதும் அதிகமாய் ஆயுதபாணியிலாகவே இருந்ததாகத் தோன்றுகின்றது. இக் காலத்தின் போது உள்ளூர் கிளர்ச்சிகள் T-56க்கள் மற்றும் கைத்துப்பாக்கிகள் ஆகியவற்றுடன் ஆயுதபாணியிலாக விளங்கியதாக (இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே இவற்றுக்கு மூலகாரணமாக நம்பப்படுகின்றது)[37] என நேர்முகங்காணப்பட்ட ஒருவர் தெரிவித்தார். ஜே.வி.பி. கிளர்ச்சியின் போதும், 1989இல் அது முடிவடைந்த பின்னரும் பொலிஸாரின் பாதுகாவலுக்கு 1,000க்கு மேற்பட்ட ஆயுதங்கள் வந்ததாக மாவட்டச் செயலகத்தில் பணியாற்றிய உத்தரவுப்பத்திரமளிக்கும் முன்னாள் உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.[38] இவை கைத்துப்பாக்கிகள், பிஸ்டல்கள், ஒற்றை, இரட்டைக் குழல் ரவைத் துப்பாக்கிகள் மற்றும் ‘கல்கட்டாஸ்’ ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. அத்தருணத்தில் T-56கள் சேகரிக்கப்படவில்லை.[39] ஒன்றில் இராணுவ மாதிரியான ஆயுதங்களைக் கையளிப்பதற்கு தீவிரபோக்கிலான கிளர்ச்சிக்காரர்கள் அதிகளவு

---

[29] குணரட்ன ஆர்., இலங்கை: ஒரு தொலைந்த புரட்சி, (கண்டி, அடிப்படை ஆய்வுகள் நிறுவனம், 1990 (3 e, 2001), பக்.106.

[30] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[31] குணரட்ன, ஆர்., இலங்கை: ஒரு தொலைந்த புரட்சி, (கண்டி, அடிப்படை ஆய்வுகள் நிறுவனம், 1990 (3 e, 2001), பக்.107

[32] அதேவாறு, பக்கங்கள் 87-88.

[33] அதேவாறு, பக்கம் 9.

[34] 2006 மே 10இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[35] ‘எம்மிடம் பணமிருந்த போதிலும் போதியளவு துப்பாக்கிகளை அல்லது கைத்துப்பாக்கிகளை வாங்குவதற்கு வழி இருக்கவில்லை. துப்பாக்கிகளை அல்லது கைத்துப்பாக்கிகளை வாங்குவதற்கு எங்களால் உத்தரவுப்பத்திரங்களைப் பெறமுடியவில்லை. இடையிடையே ஒரு அல்லது இரு சட்டவிரோதமான துப்பாக்கிகளை வாங்குவதற்கான வாய்ப்பினை நாம் கொண்டிருந்ததுடன், எமது தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அது போதுமானதாகவிருக்கவில்லை (……) கைக்குண்டுகளுடன் தொழிற்சங்க தீவிரப்போக்காளர்களை ஆயுதபாணியாக்குவது என நான் தீர்மானித்தேன்.’ வி.ஜவன், 71 புரட்சி (71 கரல்ல), கொழும்பு, துர்க்கா பப்ளிஷேர்ஸ், 1979 மீள்பதிப்பு 2000), பக்கம் 118.

[36] குணரட்ன, ஆர்., இலங்கை: ஒரு தொலைந்த புரட்சி, (கண்டி, அடிப்படை ஆய்வுகள் நிறுவனம், 1990 (3 e, 2001), பக்கங்கள் 87-88.

[37] 2006 மே 10இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[38] ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் சுடுகலன்கள் உத்தரவுப்பத்திர உத்தியோகத்தருடனான நேர்முகங்காணல்.

[39] அதேவாறு

பயந்தார்கள் அல்லது விரும்பவில்லை அல்லது அத் தருணத்தில் மாவட்டத்தில் இத்தகைய ஆயுதங்கள் விநியோகத்தில் இருக்கவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. கிளர்ச்சியிலிருந்து சட்டவிரோதமான ஆயுதங்கள் மாவட்டத்தில் சட்டவிரோதமான விநியோகத்தில் இன்னுமே இருக்க வேண்டும் என சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நம்புகின்றார். ஏனெனில், சட்டவிரோதமான நோக்கங்களுக்காக ஆயுதங்களை வைத்திருந்தவர்களிடம் இருந்து ஒரு போதுமே செயற்றிறனாக ஆயுதங்கள் களையப்படவில்லை.[40]

அரசியல்வாதிகளுக்கும், மற்றும் வேறு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட சுடுகலன்களை அடைதல் சாத்தியப்படவில்லை. இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சி வேளையில், இவை நாடுபூராவும் அண்ணளவாக 11,000 என்ற எண்ணிக்கையென சொல்லப்படுகின்றது.[41] சட்டவிரோதமான ஆயுதங்கள் பற்றிய ஒளிவுமறைவின்மை விளங்க வேண்டிய இப்பகுதியே அதன் பலவீனத்தில் உள்ளதாகக் கண்டறியப்பட்டது. எனினும், உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பின்னர் அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிய ஆயுதங்களின் ஓர் உதாரணமாக அளவீட்டுக் குழாமுக்கு பின்வரும் தகவல் சுட்டிக்காட்டப்பட்டது: 1989-1991 வரை 53 மாகாண சபை உறுப்பினர்களுக்கு .38 ரிவோல்வர்கள், அல்லது 9 மி.மி. பிஸ்டல்கள் ஆகியன வழங்கப்பட்டதுடன், இவற்றில் 24 இன்னுமே திருப்பி வழங்கப்படவில்லை.[42] தமது நெருங்கிய ஆதரவாளர்களுக்கு ஆயுதங்களை அரசியல்வாதிகள் வழங்கிவிட்டார்கள் என்று பொதுமக்களின் சில உறுப்பினர்களின் மத்தியில் மனவுணர்வொன்றுள்ளது.

மாவட்டத்தில் இருந்த சட்டவிரோதமான இராணுவ-மாதிரியிலான ஆயுதங்களை, குறிப்பாக T-56 துப்பாக்கிகளை சிவிலியன்கள் வைத்திருந்தமை பாதுகாப்புப் படைகளின் முன்னாள் ஆளணியினருடன் தொடர்பினைக் கொண்டுள்ளனர் என்ற கருத்தினை சில விதிவிலக்குகளுடன் பெருமளவு முக்கிய தகவலளிப்பவர்களும், நோக்குக் குழு பங்கெடுப்பாளர்களும் வெளிப்படுத்தினர்.[43]

ஆயுதப் படைகளின் ஆயுதங்கள் குறித்து அரசாங்கக் கட்டுப்பாடு இருப்பது நல்லது, ஆனால், சிறிதளவு நேரடியான சான்றினைப் பெற்றுக் கொள்ள முடிகின்ற போதிலும், எல்.ரி.ரி.ஈ. இடமிருந்து யுத்த முனையிலிருந்து கைப்பற்றப்பட்ட இராணுவ மாதிரியிலான ஆயுதங்களை முழுவதுமாகக் கட்டுப்படுத்த முடியாது என நேர்முகங்காணப்பட்ட பெரும்பாலானோர் ஒத்துக்கொண்டனர்.[44] உள்ளூரில் கைப்பற்றப்பட்ட சில T-56க்களின் வாய்ப்பகுதியின் அந்தத்தில், குழாயின் முடிவுப்பகுதியின் ஓரத்தில் வெட்டப்பட்டு, அவற்றின் தொடர் இலக்கங்கள் அழிக்கப்பட்டிருந்ததை இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஞாபகப்படுத்தினார்கள்.[45] பின்புறம் தாக்கப்படுவதைக் குறைப்பதற்காக இவ்வழியான ஆயுதங்களை எல்.ரி.ரி.ஈ. திரிபுபடுத்துவதாகக் கூறப்படுவதன் காரணமாக அவர்கள் எல்.ரி.ரி.ஈ. இனால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை எடுத்துக் காட்டுவதற்காக உத்தியோகத்தர்கள் இதை முன்வைத்தார்கள். இந்த ஆயுதங்களே இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் ஊடாக சட்டவிரோதமான சந்தைக்குள் பிரவேசித்து, ஒன்றில் தப்பியோடியவர்கள் மூலமாக அல்லது பாதாள வலைப்பின்னல்கள் மூலமாக ஹம்பாந்தோட்டையை அடைவதாகவே பொதுவாக எண்ணப்படுகின்றது.[46] லீவின் போது

---

[40] 2006 மே 19இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடனான நேர்முகங்காணல்.

[41] ஸ்மித் சி, ‘யுத்த நிறுத்தமொன்றின் நிழலில்: இலங்கையில் சிறு ஆயுதங்களின் கிட்டுந்தன்மையினதும், துஷ்பிரயோகத்தினதும் தாக்கங்கள்’ (சிறு ஆயுதங்கள் அளவீட்டு இடையீந்த கட்டுரை 11, ஒக்டோபர் 2003), பக்கம் 18.

[42] 2006 மே 30இல் MoDPSLO சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[43] 2006 மே 16இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடனும், 2006 மே 17இல் பெலியத்தை பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடனும் மற்றும் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை சிரேஷ்ட உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள். நகர ஆண்கள், சிறுபான்மையினர், கிராமிய ஆண்கள் மற்றும் வியாபார சனசமூகத்தினர் ஆகியோருடன் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்கள்.

[44] 2006 மே 17இல் அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலைய பிரதிநிதிகளுடனும், 2006 மே 10இல் நன்கொடை உசாவலர்களுடனும் நேர்முகங் காணல்கள். நகர ஆண்களுடன் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்கள்.

[45] 2006 மே 17இல் அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.

[46] 2006 மே 10இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல், கிராமிய ஆண்களுடன் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்கள்.

இராணுவச் செயற்பாட்டுப் பகுதிகளை விட்டு தரை வழியாகப் படை ஆளணியினர்கள் பிரயாணம் செய்யும் போது முழுமையாக போதியளவு சோதிக்கப்படாததினால், அவர்களினாலேயே ஆயுதங்கள் கொண்டு வரப்படுகின்றன என்ற கருத்தினை நேர்முகங்காணப்பட்ட ஒருவர் கொண்டிருந்தார்.[47]

அரசாங்கப் பாதுகாப்புப் படைகளிலிருந்து ஆயுதங்களின் கட்டுப்பாடு மீதான புள்ளிவிபரங்களையிட்டு நேர்முகங்காணப்பட்ட ஏனையோர் கேள்வி எழுப்பினர். எல்.ரி.ரி.ஈ. இடமிருந்து அல்லது வடக்கு, கிழக்கில் உள்ள அரசாங்க இருப்புக்களிலிருந்து பெறப்பட்ட ஆயுதங்களையே உள்ளூர் குற்றவாளிகள் பயன்படுத்துகிறார்கள் என்ற கருத்தினை இவர்கள் கொண்டுள்ளனர்.[48] இது தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வார்த்தைகள் குறிப்பிடத்தக்கதாகும்.

> (.........) தொண்ணூறுகளின் இறுதிப் பகுதியில் சீர்கேடடைந்த பாதுகாப்பு நிலைமைக்கு முகம் கொடுத்த அரசாங்கம் அதன் இராணுவ மற்றும் பொலிஸ் ஆளணியினரின் எண்ணிக்கையை அதிகரித்தது. ஆட்சேர்க்கப்பட்ட சிலர் தமது ஆயுதங்களுடன் தப்பியோடி, இலாபத்திற்காக அங்கீகாரமற்ற சிவிலியன்களுக்கு, பெரிதும் அடிக்கடி குற்றவாளிகளுக்கு இந்த ஆயுதங்களைக் கையளித்தனர்.[49]

பெலியத்தையில் இருந்து குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட இராணுவ மாதிரியிலான ஆயுதங்கள் தொடர் இலக்கம் அகற்றப்பட்டிருந்தமையினால், அவற்றைக் கண்டறிவதற்கு கஷ்டமாக இருந்தது.[50] எனினும், 2005இல் மித்தெனிய பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட ஆயுதமொன்று வவுனியாவில் உள்ள இராணுவ முகாமொன்றைச் சேர்ந்தது எனக் கண்டறியப்பட்டது.[51]

1985இலிருந்து பொலிஸ் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் கட்டுப்பாட்டிலிருந்து இழக்கப்பட்டதனால் அவை சட்டவிரோதமான ஆயுதங்களின் மூலங்களாக விளங்குகின்றதென நேர்முகங் காணப்பட்ட சிலரினால் குறிப்பிடப்பட்டது.[52] உயர் தரத்திலான ஆயுதங்களின் மூலங்களாக ஆயுதப் படைகளினால், அல்லது பொலிஸ் ஆளணியினரினால் வாடகைக்கு விடப்படும் ஆயுதங்கள் விளங்குவதாக ஏனையோர் சுட்டிக்காட்டினர். எனினும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொலிஸிலிருந்து அல்லது விமானப் படையிலிருந்து நேர்முகங்காணப்பட்ட பிரதிநிதிகளினால் இந் நடைமுறை எதிர்நோக்கப்படவில்லை.[53]

---

[47] 2005 மே 26இல் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடன் கருத்துப் பரிமாறல்.

[48] 2006 மே 17இல் பெலியத்தை பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடனும், 2005 மே 26இல் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.

[49] ‘இலங்கையில் ஆயுதங்களின் பல்கிப் பெருகுதலின் பின்னணியும், ஆயுதக்களைவும்’, பொலிஸ் உசாவுகைக் கூட்டம், 2005 செப்ரெம்பர்.

[50] 2006 மே 17இல் பெலியத்தை பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[51] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்,

[52] 2006 மே 16இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்,

[53] 2006 மே 16இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடனும், 2006 மே 15இல் வீரவில விமானத்தள சிரேஷ்ட உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்.

இந்த அறிக்கைக்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட காலத்தின் போது, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சந்தேகிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ. போராளிகளின் கைது பற்றி சில அறிக்கைகள் இருந்த போதிலும்,[54] 2005இலும், 2006இலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிளர்ச்சி தொடர்பில் நாசச் செயல்கள் அறிவிக்கப்படவில்லை.[55]

ஆகக் குறைந்தது கடைசி ஐந்து வருடங்களில் மாவட்டத்தின் கரையோரத்திற்கு அப்பால் கடத்தல் குறித்து அறியப்பட்ட சம்பவங்கள் இருக்கவில்லை என இலங்கைக் கடற்படையின் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார். காலியிலிருந்து மேற்கு வரை, ஹம்பாந்தோட்டையை சுற்றி கரையோரத்தில் ரோந்துகள் நடத்தப்படுகின்றன. எனினும், கட்டுப்பாடு இன்மையை நேர்முகங்காணப்பட்ட இன்னொருவர் குறிப்பிட்டதுடன், தென் கரையோரத்தில் சட்டவிரோதமான கடத்தல் முயற்சிக்கப்பட்டால், அது கண்டுபிடிக்கப்படும் என்பது அசாத்தியமே எனத் தெரிவித்தார்.[56]

வடக்கு, கிழக்கில் ஊர்காவல் படையினராக சிவிலியன்களுக்கு ஆயுதங்களை வழங்கும் நடைமுறை பற்றி நேர்முகங்காணப்பட்ட சிவில் சமூகத்தினரிடம் உத்தியோகத்தர்களும் கரிசனை கொண்டிருந்தனர். இது உத்தேசரீதியில் நாட்டில் வேறு எங்கினும் வழங்கப்பட்ட ஆயுதங்கள் விற்கப்படுவதற்கு இட்டுச் செல்லும் என அவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.[57] கதிர்காமத்தில் (ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு சற்று வெளியே) இத்தகையதொரு ஆயுதம் விற்பனை செய்யப்பட்டதற்கான அறிவை தாம் கொண்டிருப்பதாக தகவலளிக்கும் ஒருவர் உரிமை கொண்டாடினார்.[58] சட்டவிரோதமான விநியோகத்தினுள் இத்தகைய ஆயுதங்கள் பிரவேசித்து, அதனால் இலங்கை முழுவதும் எதிர்காலச் சந்ததியினருக்கு பயங்கரமான மரபுரிமை உருவாக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு உறுதியாகவே உள்ளது. இத்தகைய ஆயுதங்களின் விநியோகம் சிவிலியன்களுக்கும், போராளிகளுக்கும் இடையிலான எல்லைகளைக் களங்கப்படுத்துவதுடன், வன்முறைக்கு எதிர்தாக்குதல் நடத்துவதற்கு தயார்நிலையில் இருக்காத மோசமான விதத்தில் பயிற்சி பெற்ற சிவிலியன்களை வன்முறைக்கு உட்படுத்தும் என்பதைக் கவனத்திற்கு எடுக்க வேண்டும். ஓர் இனத்துவக் குழுவை ஆயுததாரியாக்கும் போது தமது அயலவர்களின் பலத்தின் காரணமாக தாம் காட்டிக்கொடுக்கப்படுவோம் என அவர்கள் உணர்வதனால், அது ஏனைய இனங்கள் மத்தியில் ஆயுதங்களுக்கான கிராக்கியைத் தோற்றுவிக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.[59] சிவிலியன்களுக்கு ஆயுதங்களின் 'கேந்திர முக்கியத்துவமான' விநியோகமானது, நீண்ட காலத்திற்கு பாதுகாப்பினதும், அபிவிருத்தியினதும் மீதான எதிரான விளைவுகளைக் கொண்டிருந்த வேறு நாடுகளில் இருந்து கிட்டுகின்ற உதாரணங்கள் பரந்தரீதியலானவை என்பதுடன், முன்னாள் யுகோஸிலாவியா, அல்பேனியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியன இவ்வுதாரணங்களில் உள்ளடங்குகின்றன.

---

[54] சிறைச்சாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[55] தென் ஆசிய பயங்கரவாத இணைய தளம் 'துர்மரணங்கள் மாவட்டரீதியாக, 2005', http://www.satp.org/sattporgtp/countries/shrilanka/database/FatilitiesDistrictwise_2005.htm. 2006 ஜூன் 03இல் கையகப்படுத்தப்பட்டது. தென் ஆசிய பயங்கரவாத இணைய தளம் 'துர்மரணங்கள் மாவட்டரீதியாக 2006', http://www.satporgtp/countries/shrilanka/database/FatilitiesDistrictwise_2005.htm, 2006 ஜூன் 03இல் கையகப்படுத்தப்பட்டது.

[56] 2006 மே 25இல் வீரவில விமானத் தள சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[57] 2006 மே 13இல் சிறு ஆயுத, இலகு ஆயுத சுதந்திரமான ஆராய்ச்சியாளருடனும், 2006 மே 10இல் நன்கொடை உசாவலருடனும், 2006 மே 16 மற்றும் 19இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.


[58] 2006 மே 13இல் சுதந்திரமான சிறு ஆயுத, இலகு ஆயுத ஆராய்ச்சியாளருடன் நேர்முகங்காணல்.

[59] 2006 மே 16இல் தங்காலைப் பிரிவு பொலிஸ் சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

| | நீண்ட குழல் துப்பாக்கி | ரவைத் துப்பாக்கி | 'கல்கட்டாஸ்' | பொறித் துப்பாக்கி | T-56 | T-81 | இரட்டைக் குழல் ரவைத் துப்பாக்கி | சுய திணித்தல் துப்பாக்கி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொலிஸ் நிலையம் | | | | | | | | | |
| லுணுகம்வெஹர | 11 | 24 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 37 |
| கதிர்காமம் | 9 | 13 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 22 |
| சூரியவெவ | 3 | 1 | 7 | 2 | 0 | 0 | 0 | 0 | 13 |
| திஸ்ஸமஹரகம | 6 | 1 | 4 | 0 | 1 | 0 | 0 | 0 | 12 |
| ஹம்பாந்தோட்டை | 7 | 3 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 11 |
| வலஸ்முல்ல | 1 | 1 | 7 | 0 | 0 | 0 | 0 | 0 | 9 |
| மித்தெனிய | 3 | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 6 |
| தங்காலை | 1 | 1 | 4 | 0 | 0 | 0 | 0 | 0 | 6 |
| அங்குணகொலபெலஸ்ஸ | 3 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 6 |
| கட்டுவான | 5 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 5 |
| வீரகெட்டிய | 2 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 1 | 5 |
| அம்பலாந்தோட்டை | 2 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 |
| ஹுங்கம | 0 | 1 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 3 |
| பெலியத்தை | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| மொத்தம் | 54 | 50 | 29 | 3 | 2 | 1 | 1 | 1 | 141 |

**அட்டவணை 02 - தங்காலைப் பிரிவில் உள்ள பொலிஸ் நிலையங்களினால் பதிவுசெய்யப்பட்ட சட்டவிரோதமான சுடுகலன்கள், 2005 மற்றும் 2006 ஜனவரி - மே**

**2.1 தங்காலைப் பிரிவினால் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களின் வகை (2005 மற்றும் 2006 ஜனவரி - மே)**



மாவட்டத்தில் சட்டவிரோதமாக வைக்கப்பட்டு பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் பொதுவான சுடுகலன்களின் வகைகள் பொலிஸ் திணைக்களத்தினால் கிட்டச் செய்யப்பட்ட புள்ளிவிபரங்களில் சித்தரிக்கப்படுகின்றன. மாவட்டத்தில் நீண்ட குழல் துப்பாக்கிகள், ரவைத்துப்பாக்கிகள், மற்றும் பொறித் துப்பாக்கிகள் ஆகியவற்றின் ஆதிக்கத்தை அட்டவணை காட்டுகின்றது. அபூர்வமாகவே பறிமுதல் செய்யப்பட்டுள்ள போதிலும் AK-47இன் திரிபுபடுத்தப்பட்ட T-56 தாக்குதல் துப்பாக்கி பாரதூரமான குற்றங்களுக்கு தெரிவிலான ஆயுதம் என முக்கிய தகவலளிப்பவர்களின் பெரும்பான்மையானோர் குறிப்பிட்டனர். ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றம்புரியும் கோஷ்டிகளின் ஆயுதங்களைக் பறிமுதல் செய்வது பொலிஸாருக்கு கஷ்டமாக விளங்குகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் இராணுவப் பயிற்சியைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. ஆகவே, முழுமையான சட்டவிரோதமான சிறு ஆயுதங்களின் உடமையின் மத்தியில் T-56க்களின் சதவீதமானது பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் மத்தியில் உள்ள T-56க்களின் சதவீதத்தை விட பாரியதாக உள்ளது.

மாத்தறை வைத்தியசாலையைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரின் கூற்றினால் இந்த மதிப்பீடு ஆதரவளிக்கப்படுகின்றது. அவர் பரிசோதனை செய்த சுடுகலன்கள் தொடர்பிலான மரணங்களில் பெரும்பான்மையானவை உயர் விசை ஆயுதங்களை, பிரதானமாக T-56க்களை சம்பந்தப்படுத்துகின்றன.[60] மிகச் சில சம்பவங்கள் ‘கல்கட்டாஸ்’ அல்லது கைத்துப்பாக்கிகளை சம்பந்தப்படுத்தின என அறிவித்துள்ள அவர் 2001இல் மாத்தறையில் சம்பவங்களைக் கையாள்வதை அவர் ஆரம்பித்தது முதல் கல்கட்டாஸிலிருந்து T-56 கொலைகளுக்கான நகருதலைக் குறிப்பிட்டார்.[61] திஸ்ஸமஹரகம மற்றும் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலைகளினால் கையாளப்பட்ட மரணங்களிலும், காயங்களிலும் குறைந்தளவில் T-56களினால் காயங்கள் விளைவிக்கப்படுகின்ற போதிலும், விநியோகத்தில் T-56க்கள் அதிகரித்தளவில் உள்ளதை இது சுட்டிச்சொல்கின்றது.[62]

மாவட்டத்தின் சுடுகலன்கள் தொடர்பிலான சம்பவங்களின் எஞ்சியவற்றுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்ற அல்லது சட்டரீதியாகப் பரிசோதனை செய்யப்படுகின்றது. குற்றவாளிகள் மத்தியில் ரவைத்துப்பாக்கியிலிருந்து T-56க்கு நகரும் தன்மையொன்றை சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அவதானித்தார். ஹம்பாந்தோட்டையில் 25-30 T-56க்கள் இருப்பதாக அவர் மதிப்பிட்டதுடன், ஆயுதங்களுக்கான மூலகாரணிகள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே என அவர் நம்புகின்றார்.[63] T-56இனால் ஏற்றப்பட்ட காயங்கள் மாத்தறை வைத்தியசாலையில் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளதுடன் (வழமையாக பெலியத்தை, வீரகெட்டிய, வலஸ்முல்ல அல்லது தங்காலை ஆகியவற்றிலேயே இடம்பெறுகின்றது),[64] ஹம்பாந்தோட்டையில் ஒரு சிறு தொகையே வந்திறங்குவதுடன், திஸ்ஸமஹரவில் ஒன்றுமே வருவதில்லை என்ற உண்மையானது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள இந்த அதிக தொந்தரவான அமைவிடங்களுக்கே பெரிதுமே கட்டுப்பட்டுள்ளது. பகுதியில் சட்டவிரோதமான T-56கள் உள்ளதை சூரியவெவவில் நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் உறுதிப்படுத்தினர்.[65]

---

[60] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[61] அதேவாறு
[62] 2006 மே 25இல் திஸ்ஸமஹரகம வைத்தியசாலை சிரேஷ்ட உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.
[63] 2006 மே 16இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[64] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[65] கிராமிய ஆண்களுடனும், கிராமியப் பெண்களுடனும் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்கள்.

| தகவல் மூலம் | விடயம் | சந்தை விலை | கிட்டுந் தன்மை |
|---|---|---|---|
| தங்காலை சிறைச் சாலையில் கைதி | ரவை துப்பாக்கி ரவை | 200 | உத்தரவுப் பத்திரம் பெற்ற சுடுகலன் உரிமையாளர்களிடமிருந்து |
| உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர், தங்காலை | 'கல்கட்டாஸ்' | 3,000 | கொல்லர்களிடமிருந்து |
| சந்தேகிக்கப்படும் சுடுகலன் தயாரிப்பாளர் | 'கல்கட்டாஸ்' | 1,500 முதல் | கொல்லர்களிடமிருந்து |
| மித்தெனியவுக்கு அருகிலுள்ள இளைஞர்கள் | 'கல்கட்டாஸ்' | 2,000 | பரந்தரீதியான கொல்லர்களிடமிருந்து |
| நோக்குக் குழு- கிராமிய ஆண்கள் | பிஸ்டல் | 50,000 | ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவாளிகள் அல்லது இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் |
| நோக்குக் குழு- நகர ஆண்கள் | T-56 | 56,000 | இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களிடமிருந்து |

**அட்டவணை 03- சட்டவிரோதமான சிறு ஆயுத, இலகு ஆயுத சந்தை விலைகளும், கிட்டுந்தன்மையும்**

மாவட்டத்தில் நீண்ட குழல் துப்பாக்கிகள் 'கல்கட்டாஸ்' மற்றும் பொறித் துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களே பொதுவாக கிட்டுவதாக மித்தெனியாவுக்கு அருகில் உள்ளூர் இளைஞர்களுடனான முறைசாராக் கருத்துப் பரிமாறலின் போது அளவீட்டுக் குழாமுக்கு அறிவிக்கப்பட்டது.[66] T-56க்கள் அநேகமாக பார்ப்பதற்கு இருக்கவில்லை என்ற அதேவேளை, சரியான விலைக்கு சூழவுள்ள பகுதியில் அவர்களால் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், T-56 ஒன்றைச் சுடும் நேரடியான தனிப்பட்ட அனுபவத்தைச் சுட்டிச்சொல்லும் விபரங்களை இளைஞர்களில் ஒருவர் வழங்கினார்.[67] உள்ளூரில் T-56க்களை வாங்குவது சாத்தியம் என குழுக் கருத்துப் பரிமாறலின் போது நகர ஆண்கள் அறிவித்தனர்.[68]

கொலைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் வகை பற்றி சில தகவலளிப்பவர்கள் உறுதியற்றிருந்தனர். T-'கட்டாஸ்' வளர்ச்சியடைந்திருப்பதனால், குற்றமொன்றில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை நிர்ணயிப்பது கஷ்டமாகவுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.[69] எனினும், சம்பந்தப்பட்ட துப்பாக்கியின் வகைகளினால் விளைவிக்கப்பட்ட காயங்களை வேறுபடுத்தக்கூடிய நிலையில் சட்ட வைத்தியர்கள் இருப்பதாகத் தோன்றுகின்றது.[70]


நாடுபூராவும், 2004 ஜனவரி 01இலிருந்து 2006 மே 26 வரை குற்றவியல்புள்ள விசாரணைகள் மற்றும் வழக்கு தாக்கல் செய்தல் ஆகியன தொடர்பில் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுடுகலன்களின் குற்றவியல்புள்ள உபயோகம் மீது கொண்ட சுடுகலன்கள், ரவைகள், அல்லது சான்று ஆகியவற்றின் 1,435

---

[66] 2006 மே 24இல் மித்தெனியவுக்கு அருகில் இளைஞர்களுடன் நேர்முகங்காணல்.
[67] அதேவாறு
[68] நகர ஆண்களுடன் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்கள்.
[69] 2006 மே 17இல் பெலியத்தை பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[70] 2006 மே 25இல் திஸ்ஸமஹரகம வைத்தியசாலை சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

தடயப்பொருட்கள் இருந்தன. இவற்றில் 183 தடயப்பொருட்கள் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள நீதிவான மன்றிலிருந்து வந்தன. ஆதலினால், தேசியரீதியிலான மொத்தத்தில் 12 சதவீதத்திற்கு ஹம்பாந்தோட்டை கணக்கு காட்டுகின்றது. தேசிய சனத்தொகையில் வெறுமனே 2.70 சதவீதத்திற்கு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சனத்தொகை கணக்கு காட்டுகின்றது என கருதப்பட்டால், இது குறிப்பிடத்தக்கதாகும்.[71]

**2.2 அரசாங்க பகுப்பாய்வாளருக்கு ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆயுதங்களின் வகை 2004 ஜனவரி 01- 2006 மே 26**





கடந்த பத்து வருடங்களின் போது, தங்காலை பிரிவிலும், நாடு பூராவிலும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களின் வகையைக் காட்டுகின்ற எண்ணிக்கைகளும் அளவீட்டுக் குழாமுக்கு புறம்பாக வழங்கப்பட்டன. 1995-2004 வரை குறிப்பிடப்பட்ட வகைகளுக்கான ஆயுதங்களைப் பொறுத்தளவில் நாடுபூராவும் சேகரிக்கப்பட்ட மொத்தமான 4,574இல் அல்லது 11 சதவீதத்தில் 504 ஆயுதங்கள் தங்காலை பொலிஸ் பிரிவிலிருந்து மீளப்பெறப்பட்டுள்ளன (மேலும், தேசிய சனத்தொகையில் மாவட்டத்தின் பங்கை விட கணிசமானளவு கூடுதலானதாகும்).[72] சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களின் வகைகளின் கவனத்தைக் கட்டியெழுப்புவதற்கு எண்ணிக்கைகள் மேலும் உதவுகின்றன. 2004 எண்ணிக்கைகள் அவ்வருடத்தின் ஆரம்பத்தை மட்டுமே குறிப்பிடுகின்றன எனத் தோன்றுகின்றது.

---

[71] 525,370 என்ற ஹம்பாந்தோட்டை சனத்தொகையுடனும், 18,732,455 என்ற தேசிய சனத்தொகையுடனும் கணக்கிடப்பட்டது. பார்க்க: இலங்கை அரசாங்கத்தின் குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், ‘சனத்தொகைப் புள்ளிவிபரங்கள்’, http://www.statistics.gov.lk/population/index.htm மற்றும் http://www.statistics.gov.lk/population/tables.pdf இல் உள்ள இணைந்துள்ள அட்டவைணப்படுத்தப்பட்ட தரவுகள், 2006 ஜூன் 2இல் கையகப்படுத்தப்பட்டது.

[72] குறிப்பிடப்படாத வகையிலான மீட்கப்பட்ட விடயங்கள் தங்காலை பிரிவு மற்றும் தேசிய எண்ணிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தால், தேசியரீதியில் மீட்கப்பட்ட ஆயுதங்களின் 10 சதவீதத்தை அல்லது 10,009 கொண்ட தேசிய மொத்தத்தில் 1,009ஐ தங்காலைப் பிரிவு மீட்டுள்ளது.

**2.3 தங்காலைப் பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட சிறு ஆயுதங்களும் இலகு ஆயுதங்களும் 1995 - 2004, வகையினால்**





1995இலிருந்து 2003 மற்றும் 2004 வரை T-56க்கள் சிறிய எண்ணிக்கைகளில் தோன்றுவதற்கு ஆரம்பிக்கும் போது, மாவட்டத்தில் அவை கண்டு பிடிக்கப்படவில்லை என்பதை அட்டவணை சித்தரிக்கின்றது. 1999இலிருந்து கைக்குண்டுகளின் பறிமுதலில் எச்சரிக்கையூட்டும் அதிகரிப்பொன்றை அட்டவணை காட்டுகின்றது. 2002இல் 21 கைக்குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. 2005இல், மாவட்டத்தில் பொலிஸார் மேலும் ஒன்பது கைக்குண்டுகளைப் பறிமுதல் செய்ததுடன், 2006இன் முதல் ஐந்து மாதங்களில் மேலும் இரண்டை பறிமுதல் செய்துள்ளனர்.[73] மாவட்டத்தில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு வைத்திருந்தமைக்கான ஓர் அறிக்கையை அளவீட்டுக்காக நடத்தப்பட்ட ஊடகப் பகுப்பாய்வு கவனத்திற்கு எடுத்துள்ளதுடன்,[74] கட்டுவானவில் உள்ள வீடொன்றில் கொள்ளையின் போது ஆயுதபாணிகளான கொள்ளையர்கள் பயமுறுத்துவதற்காக கைக்குண்டுகளைப் பயன்படுத்தியுள்ளதாக இன்னொன்று குறிப்பிடுகின்றது.[75] தேசிய மட்டத்தில் இலங்கையின் கிராமியப் பகுதிகள் முழுவதும் அதிகரித்தளவில் கைக்குண்டுகள் கிட்டுகின்றன என நேர்முகங்காணப்பட்ட சிலரின் மத்தியிலான மனவுணர்வை இது ஊர்ஜிதப்படுத்துகின்றது.[76]

மேலும், வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவச் செயற்பாட்டுப் பகுதிகளே கைக்குண்டுகளுக்கான மூலம் என நம்பப்படுகின்றது. கைக்குண்டு வெடிப்புக்களில் கொல்லப்பட்ட பெருமளவு சடலங்களை காலியில் உள்ள கராபிட்டிய போதனா வைத்தியசாலையின் உத்தியோகத்தர் ஒருவர் பரிசோதித்துள்ளதுடன் (ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து என்ற அவசியமில்லை), இலங்கை அரசாங்கப் படைகள் வசமுள்ள சிங்கப்பூரில் தயாரிக்கப்படும் வகையொன்றாகவே கைக்குண்டுகளை அவர் அடையாளங் கண்டுள்ளார்.[77] ஒரு சம்பவத்தில் கைக்குண்டுகளின் பயமுறுத்தலிலான உபயோகத்தினை அளவீட்டுக் குழாம் கவனத்திற்கு எடுத்துள்ள போதிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் குற்றச்செயலில் அவற்றின் உபயோகத்தின் இயக்காற்றலினுள் சில நுண் நோக்குகளை முக்கிய தகவலளிப்போர் வழங்க முடியும். உள்ளூர் கற்சுரங்கமொன்றிலிருந்து எடுக்கப்பட்ட

[73] 2006 மே 26இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[74] ஊடகப் பகுப்பாய்வு, லங்காதீப, 2005 நொவம்பர் 15, பக்கம் 1.
[75] ஊடகப் பகுப்பாய்வு, லங்காதீப, 2006 ஜனவரி 19, பக்கம் 6.
[76] 2006 மே 10இல் சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடனும், 2006 மே 10இல் NCAPISA உறுப்பினருடனும், மற்றும் நன்கொடை உசாவலருடனும் நேர்முகங்காணல்கள்
[77] 2006 மே 26இல் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடன் கருத்துப் பரிமாறல்.

வெடிபொருட்களுடன் தங்காலையிலும், ஹம்பாந்தோட்டையிலும் உள்ள உள்ளூர் மீனவர்கள் சில வேளைகளில் மீன்பிடித்தலை நடத்துவதாக அறிவிக்கப்படுகின்றது. ஆனால், இந் நடைமுறை நின்று போயுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.[78]

**2.4 தங்காலைப் பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட ஆயுதங்களின் வகை (1995 - 2004)**




## சட்டவிரோதமான ரவைகளின் மூலங்கள்

தங்காலை பிரிவுக்கான பொலிஸின் சிரேஷ்ட பிரதிநிதி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், தான் எதிர்நோக்கிய பெருமளவு 'கல்கட்டாஸ்' துப்பாக்கிகள் T-56 ரவையைச் சுடுவதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தினார்.[79] வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் ரவைகளை தமது உடைகளில் அல்லது தமது உடல்களில் மறைத்து வைத்து கொண்டு வருவதாகவும் அவர் உறுதிப்படுத்தினார்.[80] மாவட்டத்தில் 'கல்கட்டாஸ்' பயன்படுத்துபவர்கள் ரவையாக வெற்று ரவைத் துப்பாக்கி ரவைகளிலிருந்து மீள்நிரப்பப்பட்ட கூடுகளையே அனேகமாகப் பயன்படுத்துகின்றனர் என ஒரு தொகை மூலங்கள் சுட்டிக்காட்டின.[81] ஈய பந்துகள் முதல் நீர் வாளி கைபிடிகளிலிருந்து பெறப்பட்ட உலோகத்துண்டுகள் வரையிலான பலதரப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி ரவைகள் உருவாக்கப்படுகின்றன. வெடிபொருட்களாக சீனபட்டாசிலிருந்து கைத்தொழில் வெடிபொருட்கள் வரை பன்னிலையானவை பயன்படுத்தப்படுகின்றன. சுடுகலன்கள் உத்தரவுப்பத்திரம் பெற்றவர்களிடமிருந்து ரவைகள் கொள்வனவு செய்யப்பட முடியும் என தங்காலை சிறைச்சாலையில் உள்ள சுடுகலன்கள் குற்றவாளியொருவர் தெரிவித்தார்.[82]

---

[78] நகர ஆண்களுடனும், நகரப் பெண்களுடனும் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்.
[79] 2006 மே 26இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[80] அதேவாறு
[81] ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் சுடுகலன்கள் உத்தரவுப்பத்திர உத்தியோகத்தருடனான நேர்முகங்காணல்.
[82] 2006 மே 16இல் தங்காலை சிறைச்சாலையில் சிறைக் கைதியொருவருடன் நேர்முகங்காணல்.

### இராணுவ உடமைகள்

தங்காலையில் கடற்படைத் தளமொன்றை ஹம்பாந்தோட்டை மாவட்டம் கொண்டுள்ளது. இத்தளத்தின் வசமுள்ள ஆயுதங்களின் எண்ணிக்கையும், வகைகளும், அங்கு வதியும் படைத்தரப்பினரின் எண்ணிக்கையும் MOD PSLO பிரதிநிதிகளினால் 'கட்டுப்படுத்தப்பட்ட' தகவலாகக் கருதப்பட்டதனால் ஆராய்ச்சிக் குழாமுக்கு குறிப்பிடப்படவில்லை.

அதன் சொந்தப் பாதுகாப்புக்காக சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் மட்டுமே தங்காலையில் உள்ள கடற்படைத்தளம் கொண்டுள்ளது. ஏனெனில் ஏதாவது கப்பல்கள் நங்கூரமிடுவதற்கு இத் தளம் பயன்படுத்தப்படுவதில்லை.

ஆயுதங்களின் இருப்புக்களுடன் வீரவிலவில் உள்ள விமானத் தளமொன்றுள்ளது. தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்போதைய அறிக்கையில் இது விபரிக்கப்படவில்லை.

### பொலிஸ் உடமைகள்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை உள்ளடக்கும் பொலிஸ் சேவை தங்காலை பிரிவாகும். இது 14 பொலிஸ் நிலையங்களை அடக்குகின்றது. பலதரப்பட்ட நாளாந்த பொலிஸ் பணிகளுக்காக சாதாரண பொலிஸார் ஆயுதபாணிகளாக்கப்பட்டுள்ளனர். ஆனால், முதற்படியாக T-56க்களே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் சில ஏனையவற்றை விட மிகவும் அண்மையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. கண்ணீர் புகைக் குண்டுகளைச் சுடுவதற்காக பிஸ்டல்களையும், லோஞ்சர்களையும் பொலிஸார் கொண்டுள்ளனர். ஒரு பொலிஸ் நிலையம் கிரனைட்களைக் கொண்டிருந்தன. சில பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியங்களில் சுய திணிப்பு துப்பாக்கிகள் (SLR) தக்கவைக்கப்பட்டிருந்தன. சில சந்தர்ப்பங்களில் இவை 1980களில் இருந்து சேவையில் இருக்கவில்லை. ஒரு பொலிஸ் நிலையம் சப்-மெஷின் துப்பாக்கியொன்றைக் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட பொலிஸ் நிலையங்களில் எவ்வளவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியாற்றினார்கள் அல்லது தனிப்பட்ட களஞ்சிய ஆயுதங்களின் அறை ஆகியனவற்றின் விபரங்களை வழங்குவதற்கு பொலிஸார் தயக்கம் காட்டினார்கள். எனினும், இலங்கையில் முன்னைய ஆய்வுகளில் பொலிஸார் ஒருவர் பயன்படுத்திய மரபுரீதியிலான ஆயுதங்களைப் பயன்படுத்தி, மதிப்பிட முடியும். இதன்படி பிரிவில் உள்ள 1,140 உத்தியோகத்தர்களுடன், மாவட்டத்தில் உள்ள பொலிஸ் திணைக்களம் அண்ணளவாக 1,370 அலகுகளைக் கொண்ட சிறிய ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் கொண்டுள்ளது.[83]

தமது சொந்த ஆயுதங்களைக் கொண்டிருப்பதுடன், சட்டவிரோதமாக வைத்திருக்கப்படும் ஆயுதங்களையும், குற்றவியல்புள்ள நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுபவைகளையும் பறிமுதல் செய்து, அவற்றை ஆரம்ப விசாரணைகளின் போது நீதிவான் மன்றுகளில் ஒப்படைப்பதற்கான பொறுப்பினைப் பொலிஸார் கொண்டுள்ளனர். இதன் பின்னர், தகவல் வேண்டுகோள் ஒன்றுடன் சேர்த்து, அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு ஆயுதத்தை பொலிஸார் கைமாற்றக்கூடும். இதனால், ஆயுதம் பற்றிய சம்பந்தப்பட்ட சட்ட தகவல் குற்றவியல் விசாரணையொன்றில் பயன்படுத்தப்படுவதற்காக வழங்கப்பட முடியும். தங்காலை பொலிஸ் பிரிவினால் வழங்கப்பட்ட எண்ணிக்கைகள் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து இத்தகைய ஆயுதங்களின் எண்ணிக்கைகளை சித்தரிக்கின்றன. இவை ஒன்றில் பொலிஸ் தடயப்பொருள் அறைகளில், நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டவைகளாக அல்லது அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டவையாக இருக்கலாம்.

[83] ஸ்மித் சி, 'யுத்த நிறுத்தமொன்றின் நிழலில்: இலங்கையில் சிறு ஆயுதங்களின் கிட்டுந் தன்மையினதும், துஷ்பிரயோகத்தினதும் தாக்கங்கள்', (சிறு ஆயுதங்கள் அளவீட்டு இடையீந்த கட்டுரை 11, ஒக்டோபர் 2003), பக்கம் 16

| சிறு ஆயுத, இலகு ஆயுதங்களின் வகை | பொலிஸ் நிலைய தடயப் பொருள் அறைகள் | நீதிமன்றங்கள் | அரசாங்க பகுப்பாய்வாளர் |
|---|---|---|---|
| கல்கட்டாஸ்' | 0 | 50 | 13 |
| ரவைத் துப்பாக்கிகள் | 0 | 8 | 4 |
| T-56கள் | 0 | 1 | 1 |
| T-81கள் | 0 | 0 | 1 |
| நீண்ட குழல் துப்பாக்கிகள் | 0 | 51 | 4 |
| பொறித் துப்பாக்கிகள் | 0 | 2 | 0 |
| சுய திணித்தல் துப்பாக்கிகள் | 0 | 0 | 1 |
| மொத்தம் | 0 | 112 | 24 |

**அட்டவணை 04 - பறிமுதல் செய்யப்பட்ட/சான்றாக வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களின் எண்ணிக்கை**

நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட சகல ஆயுதங்களின் அச்சொட்டான அமைவிடம் எது என்பது தெளிவில்லை. நீதிவான் மன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆயுதங்களை தங்காலையில் பொலிஸார் வைத்திருந்ததாகவும், இது சுடுகலன்களை சக்திமிக்கதாக பெற்றுக் கொள்வதற்கான வழிவகையைக் கொண்டிருக்கவில்லை எனவும் பொலிஸின் சிரேஷ்ட பிரதிநிதியொருவர் குறிப்பிட்டார்.[84]

## வனவாழ்வுத் திணைக்களம்

நாடுபூராவும் அண்ணளவாக 500 சுடுகலன்களை வனவாழ்வுத் திணைக்களம் கொண்டுள்ளது. ஆனால், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதன் உடமைகளின் மட்டம் பற்றி தகவல் எதுவும் கிட்டவில்லை.[85]

## வனத் திணைக்களம்

சட்டவிரோமாக மரங்களைத் தறித்தலிலிருந்து வனங்களைப் பாதுகாப்பதற்காக நாடுபூராவும் 160 சுடுகலன்களை வனத் திணைக்களம் கொண்டுள்ளது.[86] காவல் உத்தியோகத்தர் மட்டத்திற்கு மேற்பட்ட சகல உத்தியோகத்தர்களுக்கும் ஆயுதமொன்று வழங்கப்படுகின்றது. மாவட்டத்திற்கான உடமைகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. [87]

| வகை | அளவு |
|---|---|
| பிஸ்டல்கள் (9 மி.மீ.) | 4 |
| ரவைத் துப்பாக்கிகள் | 10 |
| ரிபீட்டர் ரவைத் துப்பாக்கிகள் | 4 |
| மொத்தம் | 18 |

**அட்டவணை 05 - ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வன திணைக்கள உடமைகள்**

[84] 2006 மே 16இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[85] 2006 மே 30இல் MoDPSLO சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[86] அதேவாறு
[87] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

அளவீட்டுக் குழாமினால் விஜயம் செய்யப்பட்ட தனித்த காவல் அலுவலகத்தின் வசமுள்ள ஆயுதங்களின் எண்ணிக்கையிலிருந்து, மாவட்டத்தில் திணைக்களத்தின் உண்மையான உடமைகள் உத்தியோகபூர்மாகக் குறிப்பிட்டதை விட உயர்வானதாகத் தெரிகின்றது.

### மாவட்டச் செயலகம்

மாவட்டச் செயலகத்தின் ஆயுதக்கிடங்கு ஒரு நேரத்தில் சுமார் 2,000 ஆயுதங்களை முன்னர் தக்கவைத்திருந்தது.[88] தற்போது அது அண்ணளவாக 200 ஆயுதங்களையும், மேலும் 700 ஆயுதங்களின் பாகங்களையும் கொண்டுள்ளது.[89] பலதரப்பட்ட மூலங்களில் இருந்து சுடுகலன்கள் பெறப்பட்டிருந்தன. ஆயுதங்கள் இயங்காமல் இருந்ததனாலும், அவற்றின் உரிமையாளர்கள் இறந்ததனாலும், அவை மேலும் அவர்களுக்குத் தேவைப்படவில்லை அல்லது அவசியப்படாததன் காரணத்தினாலும் அல்லது நீதிமன்ற விசாரணைகளில் சான்று இருந்ததன் காரணத்தினாலும் (அழிக்கப்படுவதற்காக சில ஆயுதங்கள் கொழும்புக்கு நீதிமன்றத்தினால் நேரடியாக அனுப்பப்படுகின்ற போதிலும்) கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை அவை உள்ளடக்கின.[90] பெட்டகத்தின் ஒற்றை மற்றும் இரட்டைக் குழல் ரவைத் துப்பாக்கிகளுக்கு மேலதிகமாக உடமைகள் 'கல்கட்டாஸ்' மற்றும் துப்பாக்கிகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. ஆயுதக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களில் தொண்ணூறு சதவீதமானவை தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவையாகும்.[91] ஆயுதக்கிடங்கிற்கு அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட சுடுகலன்களில் அண்ணளவாக 80 சதவீதமானவை 12 துளை ரவைத் துப்பாக்கிளாக விளங்கின என்பதை அண்மைய வருடங்களுக்கான பதிவேடுகளை அளவீட்டுக் குழாம் சோதித்த போது கண்டறிந்தது.

### சிறைச்சாலைச் சேவை

ஹம்பாந்தோட்டையில் சிறைச்சாலை சேவையின் வசமிருந்த தொகைகள் உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் வித்தியாசமாக விளங்கியதனால், இது அரசாங்க முகவராண்மைகளின் வசமுள்ள சகல ஆயுதங்களையும் பதிவு செய்வதற்கான தனித்த விரிவான பொறிநுட்பமொன்றுக்கான சாத்தியமான ஓர் எடுத்துக்காட்டாகும். தங்காலை சிறைச்சாலையில், 18 T-56 தாக்குதல் துப்பாக்கிகளை சிறைச்சாலை கொண்டுள்ளதுடன், 9 மி.மீ. பிஸ்டல்களையும், ரிவோல்வர்களையும், ரிப்பீட்டர் ரவைத் துப்பாக்கிகளையும், மற்றும் கண்ணீர்புகை துப்பாக்கிகளையும் கொண்டிருப்பதாகவும் ஆராய்ச்சிக் குழாமுக்கு தெரியப்படுத்தப்பட்டது.[92] தேசிய மட்டத்தில், ஹம்பாந்தோட்டையில் சிறைச்சாலை சேவை 48 சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் கொண்டிருப்பதாகவும், இவற்றில் 6 எண்ணிக்கையிலான T-56க்கள் விளங்குவதுடன், எஞ்சியவை துப்பாக்கிகள், ரவைத் துப்பாக்கிகள், ரிப்பீட்டர் ரவைத் துப்பாக்கிகள் மற்றும் கண்ணீர்புகை துப்பாக்கிகள் ஆகும்.[93]

### தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள்

நாடுபூராவும் உள்ள 280 சட்டபூர்வமான தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில், ஆயுதங்களை வைத்திருப்பதற்கு 82 நிறுவனங்கள் மட்டுமே உத்தரவுப்பத்திரங்களைக் கொண்டுள்ளன.[94] அவற்றுக்கு இடையே, பிஸ்டல்கள், ரிவோல்வர்கள், ரவைத் துப்பாக்கிகள் மற்றும் ரிப்பீட்டர் ரவைத் துப்பாக்கிகள் ஆகியன உட்பட 752 சுடுகலன்களை அவை கொண்டுள்ளன.[95] அளவீட்டுக் குழாமின் அறிவுக்கு எட்டிய வரை ஹம்பாந்தோட்டை

---

[88] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் சுடுகலன்கள் உத்தரவுப்பத்திர உத்தியோகத்தருடனான நேர்முகங்காணல்.
[89] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[90] அதேவாறு
[91] அதேவாறு
[92] 2006 மே 16இல் தங்காலை சிறைச்சாலைப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[93] 2006 மே 30இல் MoDPSLO சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[94] அதேவாறு
[95] அதேவாறு

மாவட்டத்தில் தளத்தைக் கொண்ட உத்தரவுப்பத்திரம் பெற்ற பாதுகாப்பு நிறுவனங்கள் இருக்கவில்லை அல்லது அவை இயங்கவில்லை.

### 3. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் தாக்கங்கள்

அளவீட்டு அட்டவணைகளின் இப்பகுதி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் தாக்கங்களைக் கொண்டுள்ளது. பொலிஸ் வைத்தியசாலைகளிலிருந்தும், குற்றவியல் நீதிமன்ற மூலங்களிலிருந்தும், நோக்குக் குழுக் கருத்துப்பரிமாறல்களில் இருந்தும், முக்கிய தகவலளிப்பவர்களுடன் நடத்தப்பட்ட நேர்முகங்காணல்களில் இருந்தும் உள்ளூர் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட முன்னுணர்வுகளிலிருந்தும் கிட்டிய புள்ளிவிபரங்களை இது பெற்றுள்ளளது. கடைசி பன்னிரண்டு மாதங்களிலிருந்து ஊடக அறிக்கைகளினதும், சம்பந்தப்பட்ட தகவலை அடக்கியுள்ள வெளியீடுகளினதும் பகுப்பாய்வினால் மேலும் உள்நோக்குகள் வழங்கப்படுகின்றன.

பொலிஸாரினால் வழங்கப்பட்ட தங்காலைப் பிரிவுக்கான புள்ளிவிபரங்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுடுகலன்களுடன் இழைக்கப்பட்ட முக்கிய குற்றங்களின் எண்ணிக்கைகளின் மிகவும் பயனுள்ள கண்ணோட்டத்தை வழங்குகின்றது.


| பொலிஸ் நிலையம் | 2005 | | | | 2006 (மே 19 வரை) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொலைகள் | கடுமையான காயங்கள் | கொள்ளைகள் | வேறு குற்றங்கள் | கொலைகள் | கடுமையான காயங்கள் | கொள்ளைகள் | வேறு குற்றங்கள் | மொத்தம் |
| சூரியவெவ | 2 | 2 | 19 | 0 | 0 | 1 | 2 | 0 | 26 |
| பெலியத்தை | 2 | 0 | 8 | 0 | 4 | 0 | 8 | 0 | 22 |
| வலஸ்முல்ல | 0 | 0 | 11 | 0 | 2 | 2 | 5 | 0 | 20 |
| அம்பலாந்தோட்டை | 1 | 3 | 11 | 1 | 0 | 0 | 1 | 0 | 17 |
| வீரகெட்டிய | 3 | 2 | 11 | 0 | 0 | 0 | 0 | 0 | 16 |
| திஸ்ஸமஹரகம | 2 | 0 | 6 | 2 | 3 | 0 | 1 | 0 | 14 |
| ஹுங்கம | 1 | 2 | 9 | 0 | 0 | 0 | 1 | 1 | 14 |
| அங்குணகொலபெலஸ்ஸ | 7 | 1 | 0 | 0 | 1 | 0 | 2 | 1 | 12 |
| ஹம்பாந்தோட்டை | 3 | 0 | 2 | 3 | 0 | 0 | 2 | 1 | 11 |
| லுணுகம்வெகர | 1 | 1 | 2 | 1 | 1 | 0 | 3 | 1 | 10 |
| மித்தெனிய | 1 | 1 | 6 | 0 | 0 | 0 | 0 | 0 | 8 |
| தங்காலை | 1 | 0 | 3 | 0 | 1 | 0 | 2 | 0 | 7 |
| கதிர்காமம் | 1 | 0 | 3 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 |
| கட்டுவான | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 |
| மொத்தம் | 26 | 14 | 91 | 7 | 12 | 3 | 27 | 4 | 184 |

**அட்டவணை 06 - தங்காலைப் பிரிவில் சுடுகலன்களினால் இழைக்கப்பட்ட குற்றங்கள், 2005 - 2006**

சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் துஷ்பிரயோகம் தொடர்பில் மாவட்டத்தில் தொந்தரவிலான இடங்களாக உத்தியோகத்தர்களினாலும், பொதுமக்களின் உறுப்பினர்களினாலும் பெயரிடப்படும் பகுதிகளுடன் சுடுகலன் குற்றங்களுக்கான ஆகக்கூடுதலான எண்ணிக்கைகளுடனான பொலிஸ் நிலையங்கள் ஒத்துப் போகின்றன.[96] ஹுங்கம மற்றும் அம்பலாந்தோட்டை ஆகியவற்றுக்குப் புறம்பாக, சிறு ஆயுதங்களின் பிரச்சினைகளினால் மாவட்டத்தில் அதிகளவு பாதிக்கப்படும் இடங்களாக மதிப்பிடப்பட்ட உச்ச ஸ்தானத்திலான எட்டு பொலிஸ் நிலையங்கள் பற்றி எஞ்சிய இப்பகுதியில் மிகவும் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டையில் நான்கு நீதிவான் மன்றங்கள் உள்ளன. வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு, மேல் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு வழக்குகள் முதல் பார்வையாக விசாரிக்கப்படுகின்றன. அவை திஸ்ஸமஹரம, ஹம்பாந்தோட்டை, தங்காலை மற்றும் வலஸ்முல்ல ஆகியவற்றில் அமைந்துள்ளன. மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளில் அண்ணளவாக நான்கில் மூன்று வழக்குகள் வலஸ்முல்லவில் உள்ள நீதிவான் மன்றிலிருந்தே வருவதாக அளவீட்டுக் குழாமுக்கு அறிவிக்கப்பட்டது.[97] 2004 ஜனவரி முதல் 2006 மே வரையிலான காலத்திற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளர் பதிவேட்டிலிருந்து கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் நீதிவான் மன்றில் ஒவ்வொன்றினாலும் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வகையானதும் எத்தனை சுடுகலன் தடயப்பொருட்கள் சமர்ப்பிக்கப்பட்டன என்பதை அவை சித்தரிக்கின்றன. அட்டவணை காட்டுகின்றவாறு, 2004 முதல் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுடுகலன்களின் ஆரம்பநிலை மூலமாக வலஸ்முல்ல நீதிவான் மன்றம் விளங்கவில்லை. ஆனால், 2005இல் அது 3 T-56 தாக்குதல் துப்பாக்கிகளைச் சமர்ப்பித்துள்ளது.

**2.5 அரசாங்க பகுப்பாய்வாளருக்கு தடயப் பொருட்களின் உள்ளடக்கப்பட்ட ஆயுதங்கள், 2004 ஜனவரி 01 - 2006 மே 26**




2005 மே 01இலிருந்து 2006 ஏப்ரல் 30 வரையிலான காலத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறு ஆயுதங்கள் மற்றும் இலகு ஆயுதங்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட விடயப் பொருளாக அது நிர்வகித்த 30 புறம்பான சம்பவங்களைக் குறிப்பிடும் 33

---

[96] உதாரணமாக நோக்குக் குழு கருத்துப் பரிமாறலில் அட்டவணையிலுள்ள உயர்வான ஆறு அமைவிடங்களில் ஐந்தை நகரப் பெண்கள் குறிப்பிட்டனர். அவை சூரியவெவ, பெலியத்தை, வலஸ்முல்ல, வீரகெட்டிய, மற்றும் திஸ்ஸமஹரகம ஆகியனவாகும். பெலியத்தை, சூரியவெவ மற்றும் திஸ்ஸமஹரகம ஆகியவற்றை சிறுபான்மையினர் குறிப்பிட்டனர்.

[97] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மேல் நீதிமன்ற அரசாங்க சட்டத்தரணியுடன் நேர்முகங்காணல்.

கட்டுரைகளை அளவீட்டுக்காக நடத்தப்பட்ட ஊடகப் பகுப்பாய்வு கண்டறிந்தது. அமைவிடத்தைப் பொறுத்தளவில், தங்காலையே குறிப்பிடப்பட்ட மிகவும் பொதுவான இடப்பெயராகும் (ஒன்பது சம்பவங்களிலும், ஒரு நீதிமன்ற வழக்கிலும்). ஊடகப் பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்ட அமைவிடங்களின் பரவலாக்கம் பொலிஸாரினதும், மாவட்ட வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்தியர்களினதும் கூற்றுக்களிலிருந்து முரண்படுகின்றது. ஆனால், மாவட்டத்தில் சிறு ஆயுதங்கள் தொடர்பிலான பிரச்சினைகளின் ஊடக உள்ளடக்கப் பரப்பானது ஒன்றில் மிகவும் விஸ்தாரமானது அல்லது உண்மையான பிரச்சினையைப் பிரதிநிதிப்படுத்துகின்றது என்ற உண்மையை இது பெரிதுமே பிரதிபலிக்கின்றது. ஊடக அறிக்கைகளில் மிகவும் பொதுவாகக் குறிப்பிடப்பட்ட அடுத்த அமைவிடம் பெலியத்தை ஆகும். இதன்படி ஆறு புறம்பான சுடுகலன்கள் தொடர்பான சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு சம்பவங்கள் கொலைகளைச் சம்பந்தப்படுத்துபவையாகும். ஆண்டில் இரு அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் ஒவ்வொரு அமைவிடமாக அங்குனுபொலபலஸ்ஸவும், திஸ்ஸமஹரகமவும் விளங்குகின்றன. சுடுகலன்களிலிருந்து மொத்தமாக 30 மரணங்கள் விளைந்துள்ளதாக கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சுடுகலன்கள் மூலமான கொலை, ஒரு சுய பாதுகாப்புக் கொலை, இரு கொள்ளையர்களை பொலிஸார் மரணம் ஏற்படுத்தும் விதமாக சுட்ட ஒரு சம்பவம், மற்றும் விபத்து மரணத்தின் ஒரு சம்பவம் என 18 புறம்பான தருணங்களில் இவை நிகழ்ந்துள்ளன. ஊடக அறிக்கைகளிலிருந்து சம்பவங்களில் ஒரு கண்ணோட்டம் இணைப்பு ‘இ’இல் உள்ளடக்கப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

## சிறு ஆயுதங்கள் தொடர்பான கொலைகள்


பொலிஸாரினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களையும், மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட சனத்தொகை எண்ணிக்கையையும் பயன்படுத்துகையில், 2005க்கான சுடுகலன் கொலைகளின் வீதம் 100,000 சனத்தொகைக்கு 4.95 ஆகும்.[98] கீழேயுள்ள அட்டவணை சித்தரிக்கின்றவாறு, நாடுகளில் ஒன்று புறநீங்கலாக சகலவற்றிலும் கண்டறியப்பட்டதை விட இந்த வீதம் உயர்வானதாகும். இதற்கான தரவுகள் உலக சுகாதாரத் தாபனத்தின் (WHO) ‘World report on violence and health (2002)’ என்ற அறிக்கையில் கிட்டுகின்றன.[99] இது 2000-2004ஆம் ஆண்டுகளுக்கான இலங்கையின் சராசரி சுடுகலன் கொலைகளை விட இரண்டு மடங்குக்கு மேற்பட்டதாகும் என்பதுடன், 100,000க்கு 2.06 ஆகும்.[100]

[98] பதிவாகியுள்ள மொத்தமான 48 கொலைகளில், 2005க்கான மாவட்டத்தின் முழுமையான கொலை வீதம் 100,000 சனத்தொகைக்கு 9.14 ஆகும். 2006 மே 26இல் தங்காலைப் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[99] குரக் இ, டல்பேர்க் எல். மேர்சி ஜே. இஸவி, எ. லொஸானோ ஆர் (பதிப்பு), வன்முறை மற்றும் சுகாதாரம் மீதான உலக அறிக்கை (ஜெனீவா, உலக சுகாதார தாபனம், 2002), பக்கங்கள் 322-323. அல்பீனியாவுக்கான தரவுகள் ஆயுதங்கள் பாரியளவில் காணாமல் போனதற்கும் பரந்தரீதியான சிவில் குழப்பநிலைகளின் பின்னரான ஆண்டான 1991க்கானவை.

[100] ModPSLOஇன் சிரேஷ்ட உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட எண்ணிக்கைகள் மீதான அடிப்படை, 2006 மே 30. 2000-2004 ஆண்டுகளில் நாடுபூராவும் சராசரியாக 398.8 சுடுகலன்களினாலான கொலைகள் இடம்பெற்றன. ‘சனத்தொகை புள்ளிவிபரங்கள்’ என்ற இலங்கை அரசாங்க குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு 18,732,455 கொண்ட தேசிய சனத்தொகையின் மீதான அடிப்படையில் 100,000 சனத்தொகையின் பிரகாரம் வீதம் கணக்கிடப்பட்டுள்ளது. http://www.statistics.gov.lk/population/index.htm மற்றும் http://www.statistics.gov.lk/population/tables.pdf

**2.6 உலகம் பூராவும் உள்ள நாடுகளுடன் ஒப்பிட்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் (2005) மற்றும் இலங்கையிலும் (2000 - 2004) 100,000 சனத்தொகைக்கு சுடுகலன்கள் தொடர்பிலான கொலைகள் (கிட்டுகின்ற மிக அண்மைய வருடம், 1990 - 2000)**




சுடுகலன்கள் தொடர்பிலான சம்பவங்கள் மீதான மருத்துவ அறிக்கைகளிலிருந்து தரவுகளின் முறைமையான தகவல் இன்மையின் காரணமாக, மாவட்டத்திற்கான சுடுகலன்கள் மூலம் ஏற்படுகின்ற காயங்களைக் கையாள்வதற்கு பொறுப்பாகவுள்ள வைத்தியசாலைகளில் உள்ள சட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் தமது வேலையின் போது எதிர்நோக்கப்பட்ட சுடுகலன்கள் மூலம் ஏற்படுகின்ற மரணங்களினதும், காயங்களினதும் மட்டங்களைப் பதிவேடுகள் மூலம் அறிந்து கொண்டனர். கடந்த நான்கு வருடங்களில், மாவட்டத்தில் ஆகக் குறைந்த சராசரியாக சுடுகலன்கள் மூலம் 26 கொலைகளை அவர்களின் பதிவேடுகள் எடுத்துக் காட்டுகின்றன. இத் தொகை 2005க்கான பொலிஸாரின் எண்ணிக்கையுடன் ஒத்துப் போகின்றது.[101]

2001 ஜனவரி முதல் சுடுகலன்கள் தொடர்பான மரணங்கள் மீதான மாதாந்தப் புள்ளிவிபரங்களை மாத்தறை வைத்தியசாலையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் வழங்கக்கூடியதாகவிருந்தது. இவை ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த சம்பவங்களை உள்ளடக்கியிருந்தன. ஆனால், தெளிவான பெரும்பான்மையிலான சம்பவங்கள் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே நிகழ்ந்துள்ளது என வைத்தியர் உறுதிப்படுத்தினார் (வழமையாக பெலியத்தை, வீரகெட்டிய, வலஸ்முல்ல அல்லது தங்காலை ஆகியவற்றிலேயே நிகழ்கின்றன).[102]

[101] 2001-2005இல் மாத்தறை வைத்தியசாலையில் 96 சுடுகலன்களினாலான கொலைகள் (ஆண்டுக்கு ஆகக் குறைந்தது 9.6). 2002 ஒகஸ்ட் முதல் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் 27 சுடுகலன்கள் தொடர்பான மரணங்கள் (ஆண்டுக்கு 6.7), திஸ்ஸமஹரகம வைத்தியசாலையில் ஆண்டுக்கு அண்ணளவாக 10 சுடுகலன்களினாலான மரணங்கள் என்றவாறு பெரும்பான்மையான பங்கொன்றை ஹம்பாந்தோட்டை மாவட்டம் உருவாக்கின்றது என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டது. காலியிலும், கொழும்பிலும் மேலதிகமாக சம்பவங்கள் இருந்திருக்கக்கூடும். ஆனால், எண்ணிக்கைகள் கிட்டவில்லை.

[102] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

| மாதம் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 4 | 0 | 0 | 1 | 0 | 1 |
| பெப்ரவரி | 1 | 0 | 3 | 3 | 0 | 0 |
| மார்ச் | 0 | 0 | 3 | 1 | 3 | 3 |
| ஏப்ரல் | 2 | 4 | 5 | 2 | 2 | |
| மே | 0 | 3 | 0 | 3 | 1 | |
| ஜூன் | 1 | 0 | 0 | 2 | 1 | |
| ஜூலை | 0 | 0 | 1 | 9 | 0 | |
| ஓகஸ்ட் | 1 | 2 | 2 | 8 | 0 | |
| செப்ரெம்பர் | 2 | 1 | 1 | 1 | 1 | |
| ஒக்ரோபர் | 1 | 2 | 0 | 2 | 0 | |
| நவம்பர் | 4 | 0 | 0 | 2 | 1 | |
| டிசம்பர் | 6 | 1 | 1 | 1 | 1 | |
| மொத்தம் | 22 | 13 | 16 | 35 | 10 | |

**அட்டவணை 07 - சுடுகலன்கள் தொடர்பான மரணங்கள், மாத்தறை வைத்தியசாலை (2001 ஜனவரி - 2006 மார்ச்)**

கடந்த நான்கு வருடங்களாக ஹம்பாந்தோட்டையில் மரணங்களைப் பரிசோதித்த அதிகாரி ஒருவர் வைத்தியசாலையில் சுடுகலன்களிலான கொலைகள் பொதுவாக சூரியவெவவிலேயே நிகழ்கின்றன எனத் தெரிவித்தார்.[103]

சிறிய தொகையிலான சம்பவங்களைக் கையாளும் ஹம்பாந்தோட்டை மற்றும் திஸ்ஸமஹரகம வைத்தியசாலைகளில் சுடுகலன்களிலான கொலைகளில்[104] வழமையான ஆயுதமாக T-56க்களே விளங்குகின்றன என மாத்தறை வைத்தியசாலையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்ட அதேவேளை, அது இவ்வாறாக விளங்கவில்லை. தான் எதிர்நோக்கிய சகல கொலைகளிலும் அண்ணளவாக 15 சதவீதமானவற்றில் மரணத்திற்கு 'கல்கட்டாஸில்' இருந்து வெளிப்பட்ட ரவைகளே காரணம் என ஹம்பாந்தோட்டையில் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். ஆதலினால், 2002 ஓகஸ்ட் 02 முதல் ஹம்பாந்தோட்டையில் பதிவு செய்யப்பட்ட 27 சுடுகலன்களிலான கொலைகளில் T-56க்களை 3 அல்லது 4 கொலைகள் மட்டுமே சம்பந்தப்படுத்தின.[105] திஸ்ஸமஹரகமவில், ஆண்டொன்றுக்கு அண்ணளவாக பத்து சுடுகலன்கள் தொடர்பிலான மரணங்களில், பெரும்பாலானவை 'கல்கட்டாஸ்', ரவைத் துப்பாக்கி மற்றும் பொறித் துப்பாக்கி காயங்களினாலேயே விளைகின்றன.[106] இதன் பிரகாரம், ஆண்டொன்றுக்கு சுடுகலன் தொடர்பிலான காயத்தின் அண்ணளவாக 30-35 சம்பவங்களில், 5க்கும் 8க்கும் இடைப்பட்டவை பொறித் துப்பாக்கியினாலும், 5 அல்லது 6 ரவைத் துப்பாக்கியினாலும் விளைவிக்கப்படுகின்றன.[107] திஸ்ஸமஹரகம வைத்தியசாலையில் 'கல்கட்டாஸி'லிருந்து சுடப்பட்ட T-56 ரவையின் விளைவாக காயங்கள் எதிர்நோக்கப்பட்ட போதிலும், T-56 காயங்கள் பதிவு செய்யப்படவில்லை.[108]

---

[103] கொலைகளில் அண்ணளவாக 80 சதவீதமானவற்றில் நஞ்சே மரணத்தின் காரணமாகும். 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்,

[104] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[105] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[106] 2006 மே 25இல் திஸ்ஸமஹரகம வைத்தியசாலை சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[107] அதேவாறு

[108] அதேவாறு

கடந்த ஐந்து வருடங்களில் ஹம்பாந்தோட்டையில் (பெலியத்தையில்) 'கிரனைட்'டுடன் நிகழ்த்தப்பட்ட ஒரு கொலை பற்றி மாத்தறையில் உள்ள அதிகாரியினால் குறிப்பிடக்கூடியதாகவிருந்தது.[109] பொறித் துப்பாக்கிகளினால் விளைந்த காயங்களை அவர் கண்டுள்ளார். ஆனால், மரணங்களை அல்ல.[110]

### சிறு ஆயுதங்கள் தொடர்பான தற்கொலை

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுடுகலன்களினால் ஏற்படுத்தப்பட்ட கொலைகள் பெரிதுமே அரிதானவை என்பதே எடுத்துக்காட்டாகும். சுடுகலன்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட இரு தற்கொலைச் சம்பவங்களை மட்டுமே தான் கண்டுள்ளதாகவும், அவற்றில் ஒன்று ஹம்பாந்தோட்டைக்கு வடக்கே மாத்தறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் மாத்தறை வைத்தியசாலையில் உள்ள சட்ட வைத்திய உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.[111] சுடுகலன்களை விட நஞ்சூட்டல் அல்லது தூக்குப் போடுதல் மூலமே வழமையாக தற்கொலைச் சம்பவங்களில் மரணம் ஏற்படுவதாக ஹம்பாந்தோட்டையில் உள்ள உதவிச் சட்ட வைத்திய உத்தியோகத்தர் கருத்து வெளியிட்டார்.[112] 2005 மே 01 முதல், 2006 ஏப்ரல் 30 வரையிலான முழு வருடத்திற்கும் மாவட்டத்தில் சுடுகலன்களைப் பயன்படுத்தி தற்கொலைக்கான அல்லது தற்கொலை முயற்சிக்கான ஏதாவது மேற்கோளை ஊடகப் பகுப்பாய்வு வெளிப்படுத்தவில்லை.

### விபத்து மரணங்கள்

பொறித் துப்பாக்கிகளினால் விளைவிக்கப்பட்ட பெருமளவு மரணங்களையும், காயங்களையும் அளவீட்டுக் குழாம் அறிந்து கொண்டது. மேலே குறிப்பிட்டவாறு வருடாந்தம் திஸ்ஸமஹாரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 5-8 காயங்களையும், கீழே பெட்டி 01இல் விபரிக்கப்பட்டுள்ள வன திணைக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கான காயத்தையும் இவை உள்ளடக்குகின்றன.[113] மனித அத்துமீறலைத் தடுப்பதற்காக சில பொறித் துப்பாக்கிகள் வேண்டுமென்றே நாட்டப்படுவதாகத் தோன்றுகின்றதுடன், ஆகவே, இத்தகைய சம்பவங்களில் மரணங்கள் முழுமையாக விபத்துரீதியானவை என நோக்கப்பட முடியாது. 2005 மே 01 முதல் 2006 ஏப்ரல் 30 வரையிலான காலத்தில் மாவட்டத்தில் சுடுகலன்கள் தொடர்பிலான விபத்து மரணத்தின் ஓர் அறிக்கையிடப்பட்ட தருணத்தை ஊடகப் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. இச் சம்பவத்தில், தமது ஆதனத்தினுள் பிரவேசிக்கும் யானைகளைத் தடுப்பதற்காக தனது கணவரினால் வைக்கப்பட்ட பொறித் துப்பாக்கியினால் பெண் ஒருவர் கொல்லப்பட்டார்.[114] உள்ளூர் துப்பாக்கிகள் சாதாரணமாகக் கிடைக்கும் வேறு நாடுகளில் பயன்படுத்துனருக்கு காயத்தை விளைவிக்கும் அதிகரித்த ஆபத்தினை ஆயுதங்கள் கொண்டுள்ளன. இவ்வகையான சம்பவமொன்று, வலஸ்முல்ல பொலிஸ் நிலையத்தில் அளவீட்டு குழாமுக்கு விவரிக்கப்பட்டது. 2004இல், சுடுவதற்கு தவறிய தனது துப்பாக்கியைச் சுத்தப்படுத்துவதற்கு 'கல்கட்டாஸ்' உரிமையாளர் ஒருவர் முயற்சித்துள்ளார். அவர் அந்த ஆயுதத்தினால் விபத்துரீதியாகச் சுடப்பட்டு, கொல்லப்பட்டார்.[115]

### மரணத்தை விளைவிக்காத காயங்கள்

ஆண்டொன்றுக்கு 4-5 மரணத்தை விளைவிக்காத சுடுகலன்களிலான காயங்களை மட்டுமே பார்த்ததாக மாத்தறை வைத்தியசாலையில் உள்ள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். உயிர் தப்பிய நோயாளர்களில் பெரும்பான்மையானோர், வீதியின் மூலம் மேற்கில் 60 நிமிட வாகன ஓட்டத்தில் இருக்கும் மாத்தறைக்கு இடமாற்றப்படுவதற்குப் பதிலாக,

---

109 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
110 அதேவாறு
111 அதேவாறு
112 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
113 2006 மே 25இல் திஸ்ஸமஹாரகம வைத்தியசாலை சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
114 ஊடகப் பகுப்பாய்வு, லங்காதீப, 2006 மார்ச் 04, பக்கம் 10.
115 2006 மே 17இல் வலஸ்முல்ல பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

ஹம்பாந்தோட்டை அல்லது திஸ்ஸமஹரகம வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக பொதுவாக இருப்பார்கள். கடந்த நான்கு வருடங்களில் ஆண்டொன்றுக்கு மரணத்தை விளைவிக்காத சுடுகலன்களிலான காயங்களுடன் அண்ணளவாக 50 நோயாளர்களை அவர் எதிர்நோக்கியுள்ளார்.[116] திஸ்ஸமஹரகம வைத்தியசாலை ஆண்டொன்றுக்கு 20 மரணத்தை விளைவிக்காத சுடுகலன்களிலான காயப்பட்ட நோயாளர்களைக் கொண்டுள்ளது.[117] இந்த எண்ணிக்கைகள் T-56 காயங்களினால் அளப்பரியதாக உயிர் போக்கடிப்பதைச் சுட்டிச்சொல்கின்றன. இது மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மாத்தறையில் பெரும்பான்மையிலான சம்பவங்களுக்கு பொறுப்புக் காட்டுவதுடன், இவ்விடயத்தில் உயிர் தப்புவது அரிதானதாகும். அத்துடன், வேறு வைத்தியசாலைகளில் மிகச் சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சுடுகலன்கள் தொடர்பில் அனுமதிக்கப்படுபவர்களில் அண்ணளவாக மூன்றில் இரண்டு பேர் தமது காயங்களில் இருந்து தப்புகின்றனர்.

## கொள்ளை

ஆயுதக் கொள்ளையின் பயமுறுத்தல் பற்றி வர்த்தகர்களும் பொதுமக்களும் கரிசனை கொண்டிருந்தனர் என்பதுடன், அதன் நிகழ்வின் பெரும் எண்ணிக்கையிலான உதாரணங்களைக் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக இருந்தார்கள்.[118] கடந்த வருடத்தில் ஆயுதக் கொள்ளையில் இரு அறிக்கையிடப்பட்ட சம்பவங்களையும், முயற்சிக்கப்பட்ட சம்பவமொன்றையும், குற்றமிழைத்தவர்களாகக் கூறப்பட்டவர்களைக் கைது செய்வதற்கான இரு நடவடிக்கைகளையும் அளவீட்டுக்காக நடத்தப்பட்ட ஊடகப் பகுப்பாய்வு கவனத்திற்கெடுத்தள்ளது. கட்டுவானவில் வனத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டிலிருந்து ஆபரணங்களினதும், ரொக்கப்பணத்தினதும் கொள்ளை பற்றி ஓர் அறிக்கை குறிப்பிடப்பட்டது. இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களைப் பயமுறுத்துவதற்காக கைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.[119] 2006 மார்ச்சிலிருந்து ஜூன் வரை கொள்ளையின் (1.5 மில்லியன் ரூபா மதிப்பான) மூன்று சம்பவங்களுக்கு பொறுப்பாகவிருந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட கோஷ்டி கைது செய்யப்படாததை இன்னொரு சம்பவம் விபரித்திருந்தது.[120] இன்னொரு புறம்பான சம்பவத்தில், T-'கட்டாஸ்', T-56 ரவை மற்றும் இராணுவச் சீருடைகள் ஆகியவற்றுடன் பகுதியில் பெருமளவு கொள்ளைகளுடன் தொடர்பான நான்கு ஆண்களைக் கொண்ட கோஷ்டியொன்று திஸ்ஸமஹரகமவில் கைது செய்யப்பட்டது.[121] சிகரெட் விற்பனை நிறுவனமொன்றைக் கொள்ளையடிப்பதில் தோல்வியடைந்த முயற்சியொன்றை இன்னொரு ஊடக அறிக்கை விபரிக்கின்றது. இதில் ஊழியர் ஒருவர் சுடப்பட்டு, காயப்படுத்தப்பட்டார்.[122]

முகமூடி அணிந்த நன்கு ஆயுதந்தரித்த ஆண்களினால் பாரிய தொகையிலான பணம் இரவு வேளையில் கொள்ளையடிக்கப்பட்ட மேலும் பெருமளவு உதாரணங்களை வர்த்தகச் சபையின் பிரதிநிதியொருவர் குறிப்பிட்டார்.[123] உதாரணமாக, 2005இல் ஹம்பாந்தோட்டையில் உள்ள பெற்றோல் நிலையத்தில் இரவில் 25,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. இதே போல, அண்மைய மாதங்களில், அம்பலாந்தோட்டையில், வர்த்தகச் சபையின் உறுப்பினர் ஒருவர், தனது பெற்றோல் நிலையத்தில் 20-30 மில்லியன் ரூபாய்களை ஆயுதக் கொள்ளையொன்றில் இழந்தார்.[124] சில நாட்களினுள் அதே நபரின் 'பவுஸர்' (பெற்றோலை ஏற்றி இறக்கும் வாகனம்) கொள்ளையடிக்கப்பட்டு, அதிலிருந்து எரிபொருள் எடுக்கப்பட்டு, அது கைவிடப்பட்டது.[125]

---

[116] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[117] 2006 மே 25இல் திஸ்ஸமஹரகம வைத்தியசாலை சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[118] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபை பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல்; நகரப் பெண்களுடனும், கிராமியப் பெண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப்பரிமாறல்.
[119] ஊடகப் பகுப்பாய்வு, லங்காதீப, 2006 ஜனவரி 19 பக்கம் 6.
[120] ஊடகப் பகுப்பாய்வு, தி ஐலன்ட், 2006 செப்ரெம்பர் 22 பக்கம் 3.
[121] ஊடகப் பகுப்பாய்வு, லங்காதீப, 2006 ஜனவரி 04 பக்கம் 2.
[122] ஊடகப் பகுப்பாய்வு, லங்காதீப, 2006 டிசம்பர் 20 பக்கம் 3.
[123] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபை பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல்.
[124] அதேவாறு
[125] அதேவாறு

தமது சொந்தப் பாதுகாப்புக்காக ஆயுதங்களைக் கொண்டிருக்கும் வங்கிகள், கிரமமான ரோந்து என்ற அமைப்பில் பொலிஸாரின் ஆதரவைக் கோரி, பெறுவதுண்டு. மித்தெனியவில், மக்கள் வங்கியின் கிளையொன்று, கோஷ்டியொன்றினால் கொள்ளையிடப்பட்டது. இச் சம்பவத்தின் போது மிகக் கிட்டிய தூரத்தில் வைத்து முகாமையாளரும், பாதுகாப்பு காவலாளியும் கடுமையான சூட்டுக்கு இலக்கானவர்கள்.[126] ஹுங்கமவுக்கும், தங்காலைக்கும் இடையிலான பெண்களின் கிராமிய கூட்டுறவு வங்கியொன்று ரிவோல்வர்களுடன் ஆயுதக் கொள்ளைக்கு உட்பட்டது.[127] மேலும், பெண்கள் சங்க வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்ட இரு சம்பவங்களை சூரியவெவவுக்கு அருகில் கிராமியப் பெண்கள் குறிப்பிட்டனர்.[128] மாவட்டத்தில் சுடுகலன்களுடன் கடுமையான பிரச்சினை உள்ளதாக ஹம்பாந்தோட்டையில் உள்ள வங்கியொன்றில் பாதுகாப்புக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் உறுதிபூர்வமாகக் குறிப்பிட்டதுடன், சட்டவிரோதமான விநியோகத்தினுள் ஆயுதங்கள் பிரவேசித்தவுடன், அவை தொடர்ந்து வருகின்ற குற்றச்செயல்களில் மீளப் பயன்படுத்தப்படுவதுடன். அவற்றை மீளப் பெறுவதும் கஷ்டமானதாகவுள்ளது.[129]

## சிறு ஆயுதங்களின் துஷ்பிரயோகத்தின் மாதிரிகள்

சில வருடங்களாக மாவட்டத்தில் கலாசாரத்தின் அங்கமாக வன்முறை விளங்கியுள்ளது என நேர்முகங் காணப்பட்டவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.[130] ஜே.வி.பி. கிளர்ச்சியின் நேரத்தில், உள்ளூர் மக்களின் ஆயுத வன்முறைக்கு கிரமமாக வெளிப்படுவதாக நோக்குக் குழுக்கள் வெளிப்படுத்தின. மாவட்டம் முழுவதும் இருந்த பங்கெடுப்பாளர்கள் துப்பாக்கிச் சூட்டு சத்தத்தையும், இரு பக்கங்களிலும் பெருமளவு கொலைகளையும், வீதிகள் மீது கிடந்த சடலங்களையும் மீள்நினைவுறுத்தினர்.[131] எனினும், மாவட்டத்தில் இருந்த பெருமளவு சாதாரண மக்களுக்கு நாளாந்த வாழ்க்கையின் போது ஆயுத வன்முறையினால் பாதிப்பு ஏற்படவில்லை.

சமகால வன்முறைக்கான காரணிகளை பரீட்சிக்கையில், சில தருணங்களில் வாய்ப்புக்கள் அற்ற அல்லது கல்வி அற்ற இளம் ஆண்கள் கொள்ளையடிப்பதற்கு வசப்படுத்தப்படுகின்றனர் என உறுதிப்படுத்தப்பட்டது.[132] இரண்டு அல்லது மூன்று கொள்ளைகளை இழைப்பதன் மூலம் அவர்களது குற்றம்புரியும் வாழ்க்கையினுள் பிரவேசிப்பதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவாளிகள் முயலுவதுடன், பின்னர் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றம்புரியும் கோஷ்டியுடன் சம்பந்தப்படுகின்றனர்.[133] தண்டனையின்றி ஆரம்பக் குற்றங்களை இழைப்பதற்கு குற்றம்புரிபவருக்கு இயலுமாக இருந்தால், அவரது குற்றங்கள் உயர்வடைகின்றன என அறிவிக்கப்படுகின்றது.[134] ஆகக் குறைந்தது இரு குற்றங்களை இழைக்கும் போது கோஷ்டியொன்றில் இணைந்து கொள்வதற்கு அனுகப்படுவதற்கான தொடக்க நிலையாக இது தோன்றுகின்றது.[135]

கோஷ்டியொன்றின் முக்கிய நபர் கொல்லப்படுவதைத் தொடர்ந்து பழி தீர்க்கும் நடவடிக்கையினால் சுடுகலன்கள் தொடர்பான மரணங்கள் உச்சநிலையை அடைகின்றன என மாத்தறை வைத்தியசாலையில் உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டார். ஆதலினால்,

---

[126] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஹம்பாந்தோட்டை மக்கள் வங்கி சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[127] அதேவாறு; நகரப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[128] கிராமியப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[129] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஹம்பாந்தோட்டை மக்கள் வங்கி சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[130] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல்.
[131] நகர பெண்களுடனும், கிராமியப் பெண்களுடனும், கிராமிய ஆண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[132] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் வலஸ்முல்ல பொலிஸ் நிலையப் பிரதிநிதியுடனும் நேர்முகங்காணல்கள்.
[133] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல். இது கெட்ட பெயரெடுத்த உள்ளூர் ஆயுததாரியான ‘வம்பொட்டா’வின் சொந்த ஊரில் நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்களில் விவரிக்கப்பட்டவாறு அவரின் தனிப்பட்ட வரலாற்றுடன் பொருத்தமாகவிருக்கிறது.
[134] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[135] அதேவாறு

2004 ஜுலையிலும், ஓகஸ்டிலும் இடம்பெற்ற 17 சுடுகலன்களினாலான கொலைகள் உள்ளூர் கொள்ளைக்காரனான ஆமி ஜினியின் கொலையைத் தொடர்ந்து பழிதீர்க்கும் கொலைகளை உள்ளடக்குகின்றன (மேலே அட்டவணை 07ஐப் பாருங்கள்). இது மாத்தறை வைத்தியசாலையில் இடம்பெற்றது.[136]

**பெட்டி 1.1 - ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடுமையான சிறு ஆயுதங்கள் தொடர்பான மரணத்தினதும், காயத்தினதும் உதாரணங்கள்**

2001இல் பெலியத்தையில், பாதுகாவலுக்கு எடுக்கப்பட்ட சந்தேகநபர்கள், பொலிஸார் விசாரணைக்கு ஒத்துழைப்பதற்கு உடன்பட்டனர். அவர்களைப் பாதுகாப்பான வீடொன்றுக்கு பொலிஸார் கொண்டு சென்றனர். கொள்ளையர்களால் வீடு தாக்கப்பட்டு, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.[137]

2003இல் பெலியத்தையில், மூன்று ஆண்களினால் நடத்தப்பட்ட ஆயுதபாணியிலான வங்கிக் கொள்ளை அங்கு நின்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் துப்பாக்கிச் சமருக்கு இட்டுச் சென்றது. கொள்ளையர்கள் தப்பியோடிய போது ஒருவர் சுடப்பட்டதுடன், T-56 ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. துப்பாக்கியின் தொடர் இலக்கம் அழிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது சந்தேக நபர் ஒருவர் காட்டுப் பகுதியொன்றின் ஊடாக தப்பித்துப் போனதுடன், ஆனால், வலை விரிக்கப்பட்டு, 'கல்கட்டாஸ்' போன்ற கைத்துப்பாக்கியுடன் பின்னர் கைது செய்யப்பட்டார்.[138]

2003 ஓகஸ்டில், நன்கு அறியப்பட்ட கொள்ளைக்காரனான சுனில் ரணவீர எம்பிலிப்பிட்டிய நீதிமன்றிலிருந்து பொலிஸ் பாதுகாவலுடன் திரும்பி வந்து கொண்டிருந்தான். அங்குணகொலபொலஸ்ஸவில் வாகனம் தாக்கப்பட்டது. இதன் விளைவாக, ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும், சிறைக்கைதியும் மரணமடைந்ததுடன், சிரேஷ்ட சிறைக்காவலர் கடுமையான காயங்களுக்குள்ளானார். குற்றமிழைத்தவர்கள் தங்காலை சிறைச்சாலையின் முன்னாள் கைதிகள் என்பதுடன், கெட்டபெயரெடுத்த குற்றவாளியான 'வம்பொட்டா'வின் (முன்னாள் மரக்கறி, கஞ்சா வர்த்தகரும், இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவரும்) தலைமையிலான கோஷ்டியின் உறுப்பினர்களாவர். எனினும், ஆமி ஜினி மீது பின்னர் சந்தேகம் ஏற்பட்டது. தாக்குதல் T-56ஐப் பயன்படுத்தி நடத்தப்பட்டதுடன், ரத்னவீரவின் உடலில் காணப்பட்ட 36 காயங்களும் குற்றவாளிகளுக்கு ரவைகள் நன்கு விநியோகிக்கப்பட்டிருந்தன எனச் சுட்டிச்சொல்லியது.[139]

பெலியத்தையில், T-56உடன் ஆயுதபாணியாக இருந்த, இராணுவத்திலிருந்து தப்பியோடியவரை கைது செய்வதற்கான முயற்சியொன்றின் போது 'ரிசேர்வ்' இன்ஸ்பெக்டர் சஞ்ஜீவ கொல்லப்பட்டார். குற்றவாளி 'ஆமி ஜினி' என்பதுடன், 2004இல் T-56க்களுடன் ஆயுதபாணியிலான கொள்ளையர்களின் குழுவொன்றினால் மாத்தறை வைத்தியசாலையில் பாதுகாவலில் இருந்த போது அவர் கொல்லப்பட்டார். இது பழிதீர்க்கும் கொலைகளின் அலைகளைக் கிளப்பியது.

2004 பெப்ரவரியில் பெலியத்தை பொலிஸ் நிலையத்திலிருந்து இரவு ரோந்து ஒன்று மக்களில் தேடுதல் நடத்தியது. ரோந்து மீது பதுங்கியிருந்து தாக்கல் நடத்தப்பட்டது. இதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், இன்னொருவர் குத்தப்பட்டார். 30 சுற்றுக்களைக் கொண்ட ரவைகளுடன் சேர்த்து பொலிஸாரின் T-56 ஒன்று திருடப்பட்டது. அந்த இடத்தில் வெற்று T-56 ரவை

[136] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[137] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[138] அதேவாறு
[139] 2006 மே 16இல் தங்காலை சிறைச்சாலை, சிறைச்சாலையில் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.[140] இதே ஆயுதம் பின்னர் ஹம்பாந்தோட்டையில் ஐந்து பாலியல் வல்லுறவுகளிலும், 3 நெடுஞ்சாலை கொள்ளைகளிலும் பயன்படுத்தப்பட்டது. ஆயுதம் பறிமுதல் செய்யப்பட்ட போது, திடீர் வேட்டையின் போது நபர் ஒருவர் கொல்லப்பட்டார்.[141]

2004 ஓகஸ்டில், பெலியத்தையில், ஒருவரின் மரண வீட்டில் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆமி ஜினியைக் கொன்றதற்கு பழிதீர்ப்பதற்காக இரு நாட்களுக்கு முன்னரே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மரணமானவரின் சகோதரர்களும், சகோதரிகளுமான இரு ஆண்களும், இரு பெண்களும் பலியானவர்களாவர். பலியான ஆண்களில் ஒருவரின் முகம் தாக்குதலின் போது சிதைவடைந்திருந்தது. ஏனெனில், அவர் மிகவும் கிட்டிய தூரத்தில் வைத்தே மாறிமாறி சுடப்பட்டிருந்தார். அங்கு 28 T-56 ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.[142]

இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவர் பஸ் ஒன்றிலிருந்து 250,000 ரூபாவையும், ஆபரணங்களையும் கொள்ளையடித்த இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவரைச் சம்பந்தப்படுத்தும் இன்னொரு சம்பவத்தை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நினைவுகூர்ந்தார்.

பஸ்சில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருந்தார்கள். ஆனால், குற்றம் இடம்பெறுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. மறு நாள் திஸ்ஸமஹரகமவில் அவரைக் கைது செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போது, சந்தேக நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். அந் நேரத்தில் அவர் தன்னுடன் இரு கைக்குண்டுகளை வைத்திருந்தார்.[143]

2005 டிசம்பரில், வலஸ்முல்லவில் உள்ள வனத் திணைக்கள காவல் அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் சட்டவிரோதமாக மரம் தறிப்பவர்களுடன் பிரச்சினைக்குரிய பகுதியொன்றில் வனத்தை ஆய்வு செய்து கொண்டிருந்தர். சட்டவிரோதமாக மரம் வெட்டும் அமைவிடத்திற்கு பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த பொறித் துப்பாக்கி ஒன்றை அவர் தவறுதலாகச் செயற்படவைத்துவிட்டார். உத்தியோகத்தரின் கால் கடுமையாகக் காயமடைந்ததுடன், அவர் தற்போது கொடுப்பனவிலான மருத்துவ லீவில் உள்ளார்.[144]

2006இன் முற்பகுதியில், பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று ‘மூன்ஷைன்’ (சட்ட விரோதமான மதுபானம்) குறித்து விசாரணை நடத்தியது. பொறி துப்பாக்கியொன்று வெடித்து, உத்தியோகத்தர் ஒருவரின் காலில் சூடு விழுந்தது. இரத்தம் இழக்கப்பட்டதனால் அவர் வைத்தியசாலையில் மரணமானார். பொறி துப்பாக்கி நீளத்தில் 70 செ.மீ. என்பதுடன், நீர்க்குழாயை அல்லது கல்வனைசுபடுத்தப்பட்ட குழாயைக் கொண்டு கொல்லர் ஒருவரினால் செய்யப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. உத்தியோகத்தரின் காற்சட்டைக் காலில் ஆறு துவாரங்கள் காணப்பட்டன. இது இலங்கையில் பொதுவாக விளங்கும் வாளி வகையொன்றின் கைப்பிடிக்கு பயன்படுத்தப்படும் கடுமையான உலோகத்தினால் செய்யப்பட்ட ஒழுங்கற்ற குண்டினால் விளைவிக்கப்பட்டிருந்தது.[145] உணவுக்கு (விசேடமாக காட்டுப்பன்றி) வேட்டையாடுவதற்கு பொறித்துப்பாக்கிகள்

---

[140] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[141] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[142] ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[143] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[144] 2006 மே 24இல் வன பேணல் திணைக்கள உத்தியோகத்தருடனும், வன திணைக்கள வலஸ்முல்ல காவல் அலுவலகப் பிரதிநிதிகளுடனும் நேர்முகங்காணல்கள்.

[145] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலையில் உத்தியோகத்தர்களுடனான நேர்முகங் காணலில் ஒழுங்கற்ற குண்டுக்கு ஆதாரப் பொருளாக வாளி கைப்பிடிகள் குறிப்பிடப்பட்டன.

அமைக்கப்படுகின்றன. இம் மரணம் தொடர்பில் குற்றமிழைத்தவர் எவருமே கண்டுபிடிக்கப்படவில்லை.

2006 மார்ச்சில் சூரியவெவவுக்கு அருகில் ஆள் கடத்தல் ஒன்று இடம்பெற்றதுடன், பாதிக்கப்பட்டவர் அடர்த்தியான காட்டுப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டார். பணயப் பணத்தை செலுத்துவதற்குச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆள் கடத்தல்காரர்கள் நான்கு T-56க்களை வைத்திருந்ததாகக் கடத்தப்பட்டவர் பின்னர் கூறியிருந்தார்.[146]

2006 மார்ச்சில், பத்து வரையிலான மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த கோஷ்டியொன்று சமுர்த்தி ஊக்குவிப்பாளரின் வீட்டை நோக்கி விட்டெறியக்கூடிய ஆயுதங்களை எறிந்ததுடன், துப்பாக்கிகளால் சுட்டதாகப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது.[147] முதல் நாள் காலையில் வறுமை நிவாரண நன்மைகளின் பங்கீடு பற்றி உத்தியோகத்தருடன் வாய்மொழியிலான வாக்குவாதத்தில் குற்றமிழைத்தவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தரின் தந்தைக்குச் சொந்தமான உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டிருந்த ரவைத் துப்பாக்கியைப் பயன்படுத்தி உத்தியோகத்தரின் சகோதரரினால் தாக்குதல் முறியடிக்கப்பட்டது. தாக்க வந்திருந்தவர்களில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், வேறு இருவர் கடுமையான காயங்களுக்குள்ளானார்கள்.[148]

2006 மே 15 அன்று, பிற்பகல் 2.30 மணியளவில், பெலியத்தையிலிருந்து தங்காலையை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்றின் சாரதி பாரியதொரு சத்தத்தைக் கேட்டதைத் தொடர்ந்து வாகனத்தை நிறுத்தினார். வாகனத்திலிருந்து மூவர் ஓட்டம் பிடிப்பதைப் பார்த்ததுடன், தலையில் காயத்துடன் கண்டக்டரைக் கண்டறிந்தார். மாத்தறை வைத்தியசாலையில் உசாத்துணை நீதித்துறை மருத்துவ உத்தியோகத்தர் கொலையில் T-56 ரவையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளதாக அடையாளங் கண்டார்.[149]

### ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றம்

ஒரு மூலத்தின் பிரகாரம், ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் குழுக்கள் மட்டுமே வன்முறைச் செயற்பாடுகளை இழைப்பதற்கு T-56க்களைப் பயன்படுத்துகின்றன.[150] ஆகவே, நேர்முகங்காணப்பட்ட வைத்தியசாலைப் பிரதிநிதிகளினால் வெளியிடப்பட்ட T-56 கொலைகளின் எண்ணிக்கை பற்றிய தகவல் மாவட்டத்தில் கடுமையான ஆயுதபாணியிலான வன்முறையில் முக்கிய காரணியாக ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் செயற்பாட்டின் குறிப்பிடத்தக்க மட்டத்தைச் சுட்டிச்சொல்கின்றது. நாடுபூராவும் 28-30 ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் குழுக்கள் செயற்படுவதாக நேர்முகங்காணப்பட்ட ஒருவர் மதிப்பிட்டார்.[151] இது தொடர்பில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தற்போது 4-6 கோஷ்டிகள் தீவிரமாக உள்ளதாக இன்னொரு முக்கியமான தகவலளிப்பவரினால் மதிப்பிடப்பட்டுள்ளதனால், இது இலங்கையில் இடம்பெறும் ஒழுங்குசெய்யப்பட்ட குற்றத்தின் உயர்ந்த சதவீதத்திற்கு மாவட்டம் பொறுப்புத் தன்மையைக் கொண்டுள்ளது என்பதை சுட்டிச் சொல்கின்றது.[152] எனினும், அண்மையில் முக்கிய கோஷ்டித் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தும், ஏனைய முக்கிய குற்றவாளிகள் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தும் பிரச்சினைகளை விளைவித்த கோஷ்டிகள் தற்போது

[146] 2006 மே 26இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[147] வறுமை தணிப்பு நன்மைகளுக்கு அடைதலை நிருவகிக்கும் ஓர் அரசாங்க உத்தியோகத்தர்.
[148] 2006 மார்ச் 11 லங்காதீப பக்கம் 1இல் உள்ளதைக் குறிப்பிட்டு இந்த அளவீட்டுக்கு நடத்தப்பட்ட ஊடக பகுப்பாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வழக்கு.
[149] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[150] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[151] 2006 மே 10இல் சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடனும், NCAPISA உறுப்பினருடனும் நேர்முகங்காணல்கள்.
[152] ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

சிறந்த வகையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.[153] சூரியவெவ, பெலியத்த, முல்கிரிகல மற்றும் அங்குணுகொலபெலஸ்ஸ ஆகிய குறிப்பான பகுதிகள் மீதே பிரச்சினை நோக்கினைக் கொண்டிருப்பதாகவும், இது பெருமளவு வருடங்களுக்கு நீடிக்கும் வரலாறு ஒன்றை கொண்டிருப்பதாகவும் தோன்றுகின்றது. [154]

ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றத்தின் பிரச்சினை மீதான பொது மக்களின் மனவுணர்வு குழப்பமாகவுள்ளது. பாதாள உலக குற்றவியல் தொழிற்பாடுகளையும், அவற்றுக்கான அரசியல் ஆதரவையும் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என 2005இல் SASA-Net Sri Lankaஇனால் நடத்தப்பட்ட சிவில் சமூக உசாத்துணை நடைமுறையின் அங்கமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடந்த கருத்துப்பரிமாறலில் பங்கெடுப்பாளர்கள் விதந்துரைத்தனர்.[155] இதே வேளை, ஆயுதபாணியிலான குற்றவாளிகளுக்கும், குற்றவியல்புள்ள குழுக்களுக்கும் அரசியல் தொடர்புகளின் மனவுணர்வினை நோக்குக் குழுக்களும், நேர்முகங்காணல்களும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியதுடன்,[156] சிறந்த தொடர்பைக் கொண்ட குற்றவாளிகளின் விசாரணையிலும், வழக்கு தாக்கல் செய்வதிலும் தலையீட்டுக்கான மேற்கோளைச் செய்தன.[157] ‘சில வேளைகளில், சக்திமிக்க சீவியத்தொழில் தன்மையில் தமது சட்டபூர்வமான பணிகளை நிறைவேற்றுவதிலிருந்து பொலிஸாரை உயர் மட்டத்திலான அரசியல் தலையீடு தடுக்கின்றது’ என்ற தேசிய தோற்றப்பாடு தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கூற்று உள்ளூர் மட்டத்தில் இந்த மனவுணர்வுகளுடன் ஒத்துப் போகின்றது. இத்தகைய தலையீடு சட்டவிரோதமான செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும், தணிப்பதற்கும் பொலிஸாரின் முயற்சிகளுக்கு ஊறுவிளைவிப்பதுடன், தவறை இழைப்பவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதைக் குறிக்கோளாகக் கொண்ட சட்ட நடவடிக்கைக்கு தடை போடுகின்றது.[158]

‘அரசியல் காரணத்தை நீங்கள் வெளியே எடுத்தால், மாவட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் செயற்பாட்டுக்கான காரணத்தில் 95 சதவீதத்தை வெளியே எடுத்துவிடுவீர்கள்’ என தன்னை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத நேர்முகங்காணப்பட்ட ஒருவர் கருத்து வெளியிட்டார். இதேவாறாக, T-56க்களினால் அல்லது இடையிடையே 9 மி.மீ. பிஸ்டல்களினால் கொல்லப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான கொள்ளைக்காரர்களின் பிரேதப் பரிசோதனையை நடத்திய காலியில் நேர்முகங்காணப்பட்ட சட்ட வைத்தியர் இவர்களில் பெரும்பான்மையானோர் அரசியல்வாதிகளின் தோழர்கள் என குறிப்பிட்டார்.[159] தமது சொந்தப் பாதுகாப்பையிட்டு அச்சத்தினால் செயல்நோக்கமளிக்கப்படுகின்ற சில அரசியல்வாதிகள், ஆதரவாளர்களை ஆயுததாரிகளாக்குவதுடன், வழக்குத் தொடரப்படுவதற்குப் பதிலாக, அவர்களது சட்டவிரோதமான செயற்பாட்டுக்கு கண்மூடுகின்றனர் என பொதுமக்கள் நம்புகின்றனர்.[160]

தற்போது ஹம்பாந்தோட்டையில் இயங்குவதாகச் சொல்லப்படும் 4-6 ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றக் குழுக்கள் கஞ்சா விற்பனை, ஒப்பந்தக் கொலைகள் மற்றும் ஆயுதபாணியிலான கொள்ளை போன்றவற்றிலிருந்து வருமானத்தைத் திரட்டிக் கொள்வதாகத்

---

[153] 2006 மே 19இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[154] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபை பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல். சூரியவெவ, பெலியத்த மற்றும் முல்கிரிகல ஆகியன கிராமிய ஆண்களுடனான நோக்குக் குழு கருத்துப் பரிமாறலில் ஒழுங்குபடுத்தப்பட்ட கோஷ்டிகளுக்கான முக்கிய அமைவிடங்களாகப் பெயரிடப்பட்டன.

[155] SASA-Net சிவில் சமூக உசாவுகை நடைமுறையிலிருந்து தென் மாகாணத்திற்கான முடிவுகள், 2005.

[156] நகர ஆண்களுடனும், நகரப் பெண்களுடனும், சிறுபான்மையினருடனும், வர்த்தக சமூகத்தினருடனும் மற்றும் கிராமிய ஆண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[157] வர்த்தக சமூகத்துடனும், கிராமிய ஆண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[158] இலங்கையில் ஆயுதங்களின் பல்கிப் பெருகுதலினதும், ஆயுதக் களைவினதும் பின்னணி, பொலிஸ் உசாவுகைக் கூட்டம், 2005 செப்ரெம்பர்.

[159] 2006 மே 26இல் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல். கிராமிய ஆண் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறலில் பங்கெடுப்பாளர்கள் பெரிதுமே இதையே உறுதிப்படுத்தினார்கள்.

[160] நகர ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

தோன்றுகின்றது.[161] பெருமளவு முக்கியமான குற்றவாளிகளின் மூல இடமாக மாவட்டம் விளங்குகின்ற போதிலும், அவர்கள் மாத்தறை, வெலிகம மற்றும் காலி போன்ற மேற்கில் உள்ள பட்டினங்களிலேயே தமது சட்டவிரோதமான செயற்பாடுகளை நடத்துவதற்கு முனைவதாக நேர்முகங்காணப்பட்ட ஒருவர் சுட்டிக் காட்டினார்.[162]

## பாதுகாப்புப் படையிலிருந்து தப்பியோடுதல்

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே உயர்-ஆற்றலிலான ஆயுதங்களின் ஆரம்பநிலை மூலமாக விளங்குகின்றார்கள், இந்த ஆயுதங்களே மாவட்டத்தில் கிட்டுகின்றன, இவ்வாறாகத் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே மாவட்டத்தில் ஆயுதபாணியிலான வன்முறைச் சம்பவங்களின் உருமாதிரியான குற்றமிழைப்பவர்கள் என்ற பரந்தரீதியிலான மனவுணர்வு உத்தியோகத்தர்களினதும், பொது மக்களினதும் மத்தியில் காணப்படுகின்றது.[163] ஹம்பாந்தோட்டையில் பெருமளவு சுடுகலன் கொலைகள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களையும், உருமாதிரியாக இராணுவ ஆயுதத்தையும் சம்பந்தப்படுத்துவதாக பெலியத்தை பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்டப் பிரதிநிதி குறிப்பிட்டார்.[164] இந்த மனவுணர்வு சமச்சீராகப் பங்கிடப்படவில்லை. தான் பரிசோதித்த சுடுகலன்களினாலான கொலைகளின் பலியிடப்பட்ட சகலரும் அல்ல சிலரே இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தவர்கள் என ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டார்.[165] இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தவர்களுடன் பிரச்சினைகள் உள்ளதாக அனுபவம் வாய்ந்த பொலிஸ் புலனாய்வாளர் ஒருவர் உடன்பட்டார். ஆனால், மொத்த குற்றங்களில் அவர்கள் ஒன்று அல்லது இரண்டு சதவீதத்திற்கு மட்டுமே பொறுப்பாவார்கள் என அவர் உறுதிபடத் தெரிவித்தார்.[166]

சுடுகலன்களை துஷ்பிரயோகிப்பதற்கு இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தவர்களை எது இட்டுச் செல்கின்றது என்ற எடுத்துக்காட்டினைப் பரீட்சிப்பதற்கான முயற்சியில் அவர்களின் பதவியில் உள்ள ஆபத்தின் அல்லது நெருங்கிய சம்பந்தமின்மையின் காரணமாக[167] அல்லது கடுமையான ஒழுக்காறிலிருந்து தப்பிப்பதற்காக[168] அவர்களின் குடும்பத்தினரின் ஊக்குவிப்பதைத் தொடர்ந்து, இராணுவத்திலிருந்து வெளியேற இராணுவத்திலிருந்து தப்பியோடி வருபவர்கள் தீர்மானிக்கின்றனர் என ஆராய்ச்சி குழாமுக்கு தெரிவிக்கப்பட்டது. பிணக்கொன்று வெடிக்கும் போதிலான உண்மையிலிருந்து ஒன்றின் அல்லது மற்றப் பக்கத்தின் ஆதரவில் தீர்மானமாகவிருப்பார்கள் என சனசமூகத்தில் உள்ள மக்களாக முன்னாள் இராணுவ ஆளணியினர் நாடிச் செல்லப்படுவதனால், வன்முறையிலான பிணக்குகளில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் சம்பந்தம் ஓரளவுக்கு முளைக்கின்றது என ஒரு முக்கியமான தகவலளிப்பவர் குறிப்பிட்டார்.[169] சம்பளம் இழக்கப்படுவதே பிரச்சினையின் நடத்தைகளுக்கு ஓரளவுக்கு காரணம் என ஏனையோர் விளக்கமளித்தனர். சம்பளத்தின் காரணமாகவே தன்னடக்கமான பின்னணியிலிருந்து வருபவர்கள் ஆரம்பத்தில் பெரிதுமே இராணுவ சேவையில் கவரப்பட்டனர். அதன் பின்னர் செலவினத்தின் குறிப்பிட்ட மட்டத்திற்கும், செல்வாக்கிலான வாழ்க்கை முறைக்கும் அவர்கள் பழக்கப்பட்டுவிடுகின்றனர்.[170] அவர்கள்

---

[161] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[162] 2006 மே 17இல் வலஸ்முல்ல பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[163] 2006 மே 16இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடனும், 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஹம்பாந்தோட்டை மக்கள் வங்கி சிரேஷ்ட உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடனும், மற்றும் 2006 மே 25இல் வீரவில விமானத் தள சிரேஷ்ட உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள். நகர ஆண்களுடனும், நகரப் பெண்களுடனும், வர்த்தக சமூகத்துடனும் மற்றும் கிராம ஆண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[164] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[165] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[166] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[167] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[168] நகர ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்

[169] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[170] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடனும் நேர்முகங்காணல்.

இராணுவத்தைவிட்டு தப்பியோடிய பின்னர், வருமானத்திலும், அந்தஸ்திலும் ஏற்படும் வீழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்.

ஆளணியினரின் அவசியப்படும் ஆகக்குறைந்த சேவைக் காலத்தின் குறைப்பு போன்றவாறு தப்பியோடுவதைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.[171] சட்டபூர்வமான தொழிலைப் பெறுவதில் இராணுவத்தை விட்டு தப்பியோடியவர்களின் மீள் ஒன்றிணைப்புக்கு உதவி கிட்டுவதில்லை. ஏனெனில், தப்பியோடியவர்களை நேரடியாக தொழிலுக்கு சேர்த்துக் கொள்ள அரசாங்க முகவராண்மைகள் மறுப்பதுடன், ஏனையவற்றினால் அவர்களுக்கு தொழில் வழங்குவதையும் அதைரியப்படுத்துவதாக அறிவிக்கப்படுகின்றது.[172] வருமான இழப்புக்கு முகங்கொடுப்பதும், சமரில் திறன்களைப் பெற்றதுமான தப்பியோடியவர்கள் தூண்டுதலுக்கு சுலபமாகப் பாதிக்கப்படுவதுடன், மாவட்டத்தில் குற்றவியல் கோஷ்டிகளுக்கான கவர்ச்சிகரமான ஆட்சேர்ப்புக்களாகவும் விளங்குகின்றனர்.[173] மாவட்டத்தில் முக்கியமானதொரு பிரச்சினையாக சட்டவிரோதமான ஆயுதங்களை இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் வைத்திருக்கும் பிரச்சினையையிட்டு ஹம்பாந்தோட்டைக்கான SASA-Net சிவில் சமூக உசாவுகை கூட்டத்தில் பங்கெடுப்பாளர்கள் எழுப்பியதுடன், 'இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் புனர்வாழ்வினையும், சமூகத்தினுள் அவர்களது மீள் ஒன்றிணைப்பினையும்' விதந்துரைத்தனர்.[174]

## சிறு ஆயுதங்களும், பொருளாதாரமும்

மீன்பிடித்தல், வர்த்தகம், இலகு எந்திரவியல், வாகனப் பராமரிப்பு, உல்லாசப்பயணம், மற்றும் சேவைக் கைத்தொழில்கள் (சாப்பிடுமிடங்கள், விருந்தினர் விடுதிகள் மற்றும் பெற்றோல் நிலையங்கள்), உப்பு உற்பத்தி, அரிசி உற்பத்தி, மற்றும் வேறு வடிவங்களிலான கமத்தொழில் ஆகியனவற்றை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் முக்கிய பொருளாதாரச் செயற்பாடுகள் உள்ளடக்குகின்றன. முதலாவது ஜே.வி.பி. கிளர்ச்சியில் (1971) வியாபாரத் தாபனங்களை மூடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டதுடன், இரண்டாவது கிளர்ச்சியின் போது (1987-1989) அவை நேரடியாக இலக்குப்படுத்தப்பட்டன.[175]

தனிப்பட்டவர்களின், குடும்பங்களின், மற்றும் நிறுவனங்களின் பொருளாதார சேமநலன் மீது சிறு ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் தொடர்பான வன்முறையின் நடைமுறையிலான தாக்கங்களை எடுத்துக்காட்டுவதற்காக அளவறி சான்று கிட்டவில்லை. எனினும், அண்ணளவாக 200 உறுப்பினர்களைக் கொண்டுள்ள மாவட்டத்திற்கான வர்த்தக சபையின் பிரதிநிதியொருவர் பகுதியில் உள்ள வியாபாரங்களுக்கு முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக ஆயுதபாணியிலான வன்முறை விளங்குவதாக நம்புவதுடன், சபையின் கூட்டங்களில் இவ்விடயம் கிரமமாக எழுப்பப்படுவதாகவும் குறிப்பிட்டார்.[176] மாவட்டத்தின் மிகவும் தொந்தரவான பகுதிகளில் ஒன்றான சூரியவெவவில் நடைபெற்றதனால், வர்த்தகர்களுடனான நோக்குக் குழு கருத்துப் பரிமாறல் சில முடிவுகளை முன்வைத்ததுடன், சிறு ஆயுதங்கள் பற்றி நேரடியாக கேள்விகளுக்கு பதிலளிப்பது தொடர்பிலான விரும்பத்தகாத விளைவுகளுக்கு அதிகளவு அச்சமடைந்ததாகத் தோன்றுகின்றது.[177] எனினும், கோஷ்டிகளுக்கு இடையிலான போட்டி மனப்பான்மை தொடர்பிலான வன்முறை அதிகளவு கிரமமாக இருந்ததுடன், ஒரு சந்தர்ப்பத்தில் தமது கடைகளையும் அவர்கள் மூட வேண்டியிருந்தது என்பதையும், இக் காலத்தின் போது, மாலையில் ஏழு மணிக்குப் பின்னர் பட்டினத்திற்கு உள்ளூர் மக்கள் பிரவேசிக்கவில்லை என்பதையும் அவர்கள் நினைவுபடுத்தினர்.[178]

---

[171] 2006 மே 25இல் வீரவில விமானத் தள சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[172] அதேவாறு

[173] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலையப் பிரதிநிதியுடனும் நேர்முகங்காணல்.

[174] SASA-Net சிவில் சமூக உசாவுகை நடைமுறையிலிருந்து தென் மாகாணத்திற்கான முடிவுகள், 2005.

[175] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபைப் பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல்.

[176] அதேவாறு

[177] வர்த்தக சமூகத்துடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[178] அதேவாறு

பாதுகாப்புக் காரணங்களுக்காக சில உள்ளூர் வர்த்தகர்கள் சுடுகலன்களை வைத்திருக்கிறார்கள். ஆனால், ஆயுதக் குற்றவாளிகளிடமிருந்து ஆற்றல்மிக்க பாதுகாப்பை வழங்கக்கூடிய வகையினராக அவர்கள் விளங்கவில்லை.[179] உத்தேசமான கொள்ளைக்காரர்களுக்கு ஆற்றல்மிக்க பின்னடைவைத் துப்பாக்கிகள் வழங்குகின்றன என நம்பப்படுகின்ற போதிலும், குற்றவாளிகளுக்கு கவர்ச்சிகரமான திருட்டுப் பொருளொன்றைச் சமர்ப்பிப்பதாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.[180]

### சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல்

சட்டவிரோதமாக மரங்களை வெட்டுதல் பிணக்குகளுக்கான சந்தர்ப்பமாக உத்தியோகத்தர்களினாலும், பொதுமக்களினாலும் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. இது இடையிடையே வன்முறையாகவும் மாற்றமடைகின்றது.[181] இலங்கையின் வனவியல் சட்டவாக்கம் மிகவும் கடுமையானது.[182] வன திணைக்களத்தின் உத்தியோகத்தரின் கூற்றுப்படி, சட்டவிரோதமாக மரங்களை வெட்டுபவர்களிடமிருந்து உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்கும், உயிருக்குமான பயமுறுத்தல் 1887இல் திணைக்களம் தாபிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமாகின்றது.[183] முகங்கொடுக்கப்பட்ட பயமுறுத்தல் பருவகாலத்திற்குரியது. சிறு மரங்களின் குறிப்பிட்ட வகைகளின் அறுவடைக்காக பருவகாலத்தில் தங்கியுள்ளது. 1980களின் பின்னர், சட்டவாக்கம் பலப்படுத்தப்பட்டு, சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தளவில் மட்டுப்படுத்தப்பட்ட போது அதிகரித்தது.[184] மீண்டும் ஒரு முறை, சட்டவிரோதமாக மரம் வெட்டுபவர்கள் உருமாதிரியாக இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் என்பதே வனத் திணைக்களத்தின் மனவுணர்வு என்பதுடன், இவர்களது பெயர்களையும் திணைக்கள உத்தியோகத்தர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்.[185] தனிப்பட்ட பாதுகாப்பு மீதான அச்சத்தின் காரணமாக சட்டவிரோதமாக மரம் வெட்டுபவர்களையிட்டு குறிப்பிடுவதற்கு பொதுமக்கள் தயங்குகிறார்கள் என உத்தியோகத்தர்களினால் நம்பப்படுகின்றது.[186] மறுதலையாக, வனத் திணைக்களம் ஏழை மக்களையே தண்டிக்கின்றது, ஆனால், பாரிய அளவிலான குற்றவாளிகளால் மரங்கள் வெட்டப்படுவதை தொடர்ந்துமே சோதிப்பதில்லை என்ற மனவுணர்வில் பொதுமக்களின் மனக்கசப்பினை நோக்குக் குழுக்கள் வெளிப்படுத்தின.[187]

சுய-பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வழங்கப்படுவதற்கான அவசியத்தை வனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தியதுடன், மாவட்டத்தில் சுடுகலன்கள் தொடர்பான பயமுறுத்தலினதும், காயங்களினதும் சம்பவங்களைக் குறிப்பிட்டனர்.[188] இத்தகையதொரு சம்பவம் பெட்டி 1.1இல் விவரிக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ கடமை ஒன்றின் போது வனத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்துவதாகச் சுட்ட தொழிலாளி ஒருவருக்கு தண்டனை வழங்கப்பட்டதை ஊடகப் பகுப்பாய்வு கவனத்திற்கு எடுத்துள்ளது. T-56க்கள் பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும், உருமாதிரியாக பயமுறுத்தலை முன்வைத்த ஆயுதங்களாக 'கல்கட்டாஸ்' மற்றும் ரவைத் துப்பாக்கிகள் விளங்குகின்றன.[189] ஆண்டொன்றுக்கு அண்ணளவாக எட்டுத் தடவைகள் தாம் பொறித் துப்பாக்கிகளை எதிர்நோக்குவதாக வலஸ்முல்லவில் உள்ள காவல் அலுவலகத்தைச்

---

[179] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபைப் பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல்.
[180] அதேவாறு
[181] உதாரணமாக, சிறுபான்மையினர்களுடனான நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறலில் பொது மக்களால் எழுப்பப்பட்ட உத்தியோகபூர்வ கருத்துக்களே கீழே மேற்கோளாக்கப்பட்டுள்ளது.
[182] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[183] அதேவாறு
[184] அதேவாறு
[185] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடனும், 2006 மே 24இல் வலஸ்முல்ல வனத் திணைக்கள காவல் அலுவலகப் பிரதிநிதிகளுடனும் நேர்முகங்காணல்கள்.
[186] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[187] சிறுபான்மையினருடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[188] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[189] 2006 மே 24இல் வலஸ்முல்ல வனத் திணைக்கள காவல் அலுவலகப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.

சேர்ந்த உத்தியோகத்தர்கள் மதிக்கின்றார்கள்.[190] மேலே விபரிக்கப்பட்டுள்ள அண்மைய காயங்களுக்கு மேலதிகமாக, பத்து வருடங்களுக்கு முன்னர் பொறித் துப்பாக்கியொன்றினால் இன்னொரு உத்தியோகத்தர் சுடப்பட்டார்.[191]

கிராம மட்டத்திலேயே மரங்களை வெட்டுவது மேற்கொள்ளப்படுவதாக மேலும் குறிப்பிடப்பட்டது. வறுமையின் காரணமாக, இது கடைசி போக்கிடமாக விளங்கலாம்.[192] பின்னர் கிராம மட்டத்தில் இருப்புக்கள் வணிகர்களுக்கு விற்பனையாகின்றன.[193] கைது ஒன்றைச் செய்வதற்கு வன உத்தியோகத்தர்கள் முயற்சித்தால், எதிர்ப்புக்கள் உருவாகலாம். சில வேளைகளில், இவை 100 பேர்களையாவது சம்பந்தப்படுத்தலாம்.[194] மித்தெனியவிலும், உஸ்வெவவிலும் இத்தகைய சூழ்நிலைகளில் மக்கள் கூட்டம் வன திணைக்களத்தின் ஆயுதங்களையும் திருடியுள்ளன.[195] ஒரு ரிப்பீட்டர் ரவைத் துப்பாக்கியையும், ஒரு ரவைத் துப்பாக்கியையும் முன்னைய இழப்புக்கள் உள்ளடக்குகின்றன. ஆனால், இவை இரண்டுமே பின்னர் மீட்கப்பட்டன.[196] உஸ்வெவவில், வனத் திணைக்கள காவல் அலுவலகமொன்று எரிக்கப்பட்டது.

சேனைப் பயிர்செய்கையும் (அல்லது 'வெட்டி, எரித்தல்' கமத்தொழில்) வனத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பிணக்குகளுக்கு இட்டுச் செல்கின்றது. ஆனால், இவை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வன்முறையாக இன்னும் மாற்றமடையவில்லை.[197] கஞ்சா செய்கையாளர்கள் தம்மைக் கண்டுபிடிக்கும் சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்காக, மரம் வெட்டுதலுடன் இணைந்திருப்பதை தவிர்க்கின்றனர்.[198]

### சேனைச் செய்கை

அங்குணகொலபெலஸ்ஸ,[199] சூரியவெவ, லுணுகம்வெஹர, திஸ்ஸமஹரகம, மற்றும் ஹம்பாந்தோட்டை பட்டினம்[200] போன்ற மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றத்தை விட சேனைச் செய்கைக்கே வன்முறை அதிகளவு தொடர்பினைக் கொண்டுள்ளது. பயிர் பாதுகாப்புக்காக சேனைச் செய்கையாளர்கள் 'கல்கட்டாஸை' வைத்திருக்கிறார்கள் என்றும்,[201] சேனைச் செய்கையை செயற்படுத்தும் சனசமூகங்கள் மத்தியில் காணிப் பிணக்குகள், குடும்பப் பிணக்குகள், சோரம் போதல், சட்டவிரோதமான திருமணங்கள், மற்றும் பாலியல் தாக்குதல்கள் ஆகியனவற்றின் விளைவாக இடையிடையே காயங்கள் இழைக்கப்படுகின்றன என்றும் நேர்முகங்காணப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.[202] கஞ்சாவைப் பயன்படுத்தல், மது அருந்துதல் போன்றவையும் சேனைச் செய்கைச் சனசமூகங்களில் உள்ள வேறு சமூகப் பிரச்சினைகளாகக் குறிப்பிடப்பட்டது.[203] இத்தகைய மக்கள் கொண்டுள்ள சொத்துக்கள் அல்லது காணி அதிக உற்பத்தித்திறனானவை என்பதைச் செய்வதற்கு கமத்தொழில் முறைகளிலும், கருத்திட்டங்களிலும் பயிற்சியின் ஊடாக பிரச்சினையைக் குறைக்க முடியும் என அபிவிருத்தி மீது பணியாற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டது.[204]

---

[190] அதேவாறு
[191] அதேவாறு
[192] அதேவாறு
[193] அதேவாறு
[194] அதேவாறு
[195] அதேவாறு
[196] அதேவாறு
[197] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[198] அதேவாறு
[199] 2006 மே 17இல் அங்குணபொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[200] 2006 மே 25இல் தென் மாகாண கிராமியப் பொருளாதார முன்னேற்றக் கருத்திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[201] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடனும், 2006 மே 25இல் திஸ்ஸமஹரமவில் உள்ள சந்தேகிக்கப்படும் சுடுகலன் தயாரிப்பாளருடனும் நேர்முகங்காணல்கள். திஸ்ஸமஹரகம நகர பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[202] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[203] 2006 மே 25இல் தென் மாகாண கிராமியப் பொருளாதார முன்னேற்றக் கருத்திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[204] அதேவாறு

## காணி, ஆதனப் பிணக்குகள்

கடந்த காலத்தில் ஆயுத வன்முறையிலான சம்பவங்களுக்கு காணிப் பிணக்குகள் இட்டுச் சென்றதாக நேர்முகங்காணப்பட்ட சிலரினாலும், நோக்குக் குழுக்களினாலும் குறிப்பிடப்பட்டது.[205] 2005இல், காணிப் பிணக்கொன்றின் சட்டபூர்வ அம்சங்களையிட்டு தீர்மானமெடுப்பதில் உதவியளித்த உத்தியோகத்தர் ஒருவர் மீது வாகனம் செலுத்தப்பட்டதுடன், பின்னர் அவர் சுடப்பட்டதாக அளவீட்டுக் குழாமுக்கு மாவட்டத்தின் கமத்தொழில் பிரதி ஆணையாளர் அறிவித்தார்.[206] வலஸ்முல்ல, மற்றும் பெலியத்தைப் பகுதிகளில் பெருமளவு பிரச்சினைகளை விளைவிப்பதாகச் சொல்லப்பட்ட காணிப் பிணக்குகளில் தன்னியக்க ஆயுதங்களின் உபயோகத்தை அவர் முனைவுபடுத்தினார்.[207] துப்பாக்கிச் சூடுகளுக்கும், ஆகக்குறைந்தது நான்கு பேரின் காயங்களுக்கும் இட்டுச் சென்ற அண்மையில் இடம்பெற்ற காணிப் பிணக்கினையிட்டு சூரியவெவவில் வைத்து கிராமியப் பெண்கள் நோக்குக் குழுவில் பங்கெடுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.[208] துப்பாக்கிச் சூடுகளையும், கொலைகளையும் விளைவித்த பாசன நீரின் பங்கீடு மீது ஏற்பட்ட பிணக்குகளையிட்டு அவர்கள் கவனத்தை ஈர்த்தெடுத்தனர்.[209] பகுதியில் காணியினதும், பாசன நீரினதும் பங்கீட்டுக்குப் பொறுப்பாகவுள்ள மகாவலி அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகாதசெயல்களும், பொலிஸார் நடுநிலையாக செயற்படாதிருந்தமையுமே சூரியவெவவுக்கு அருகில் இடம்பெற்ற வன்முறையிலான பிணக்குகளின் அதிகரிப்புக்கு காரணமென கிராமிய ஆண்கள் குறிப்பிட்டனர்.[210]

## கால்நடை வளர்ப்பு

பிணக்குகளுக்கும், குற்றங்களுக்கும் தொடர்பினை கொண்டுள்ளதாக கால்நடை வளர்ப்பும் முனைவுபடுத்தப்பட்டது.[211] கால்நடை வளர்ப்போர் பெரிதுமே சட்டவிரோதமான சுடுகலன்களின் உரிமையாளர்களாகவும், பயன்படுத்துவோர்களாகவும் அறிவிக்கப்படுகின்றது.[212] எழுந்தமானரீதியில் தமது கால்நடைகளை கால்நடை உரிமைகள் பெரிதுமே அனுதிப்பதினால் பிணக்குகள் தோன்றுகின்றன. ஏனையோரின் காணியில் கால்நடைகள் மேய்ந்தால் அல்லது சேதத்தை விளைவித்தால், அதனால் ஏற்படும் பிணக்கு பயமுறுத்தலுக்கும், வன்முறையிலான தாக்குதலுக்கும் இட்டுச் செல்லலாம்.[213] ஏனையோரின் ஆதனத்தில் மேய்வதிலிருந்து கால்நடைகளைத் தடுக்கக்கூடிய கால்நடைத் தீவனமாக தானியக் களஞ்சியங்களைப் பயன்படுத்துதல் போன்ற கால்நடை வளர்ப்பின் நவீன முறைகளை ஏற்றுக்கொள்ள கால்நடை உரிமையாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.[214] பொலிஸாரினதும், அரசியல்வாதிகளினதும் செல்வாக்கை அவர்கள் கொண்டிருப்பதன் காரணமாக, அவர்களைச் சமாளிப்பது கஷ்டமாகவுள்ளதாக பொலிஸார் மேலும் அறிவித்தனர்.[215] அங்குணுகொலபெலஸ்ஸவில் கால்நடைத் திருட்டுக்களின் சில உதாரணங்களைப் பொலிஸார் குறிப்பிட்டனர்.[216] அதே வேளை சூரியவெவவுக்கு அருகில் கால்நடை தொடர்பான பிணக்குகளில் சுடுகலன்களின் உபயோகத்தை வர்த்தகச் சனசமூகம் குறிப்பிட்டது.[217] சேனைச் செய்கை தொடர்பில் மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைப்

---

[205] 2006 மே 17இல் அங்குணபொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல். நகர பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[206] 2006 மே 24இல் ஹம்பாந்தோட்டை விவசாயப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[207] அதேவாறு

[208] கிராமிய பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[209] அதேவாறு

[210] கிராமிய ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல். சூரியவெவவில் பொலிஸாரினால் நடுநிலைமை இழப்பானது வர்த்தக சனசமூகத்துடனான நோக்குக் குழு கருத்துப் பரிமாறலில் முனைவுபடுத்தப்பட்டது.

[211] கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெருமளவு நேர்முகங்காணப்பட்டவர்களினாலும், நகர ஆண்களுடனும், நகர பெண்களுடனும் மற்றும் சிறுபான்மையினருடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறலினாலும்.

[212] 2006 மே 25இல் தென் மாகாண கிராமியப் பொருளாதார முன்னேற்றக் கருத்திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல். கிராமிய பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்

[213] அதேவாறு

[214] 2006 மே 25இல் தென் மாகாண கிராமியப் பொருளாதார முன்னேற்றக் கருத்திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[215] அதேவாறு

[216] 2006 மே 17இல் அங்குணகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.

[217] வர்த்தக சமூகத்துடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

பகுதிகள், கால்நடை வளர்ப்புத் தொடர்பிலான பிரச்சினைகளைக் கொண்டிருப்பதாக நேர்முகங்காணப்பட்ட இன்னொருவர் குறிப்பிட்டார்.[218] ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில், சுடுகலன்களிலான மரணத்திற்கும், காயங்களுக்கும் உட்படும் பெரும்பாலான பாதிக்கப்படுபவர்கள் கமக்காரர்கள் என்பதுடன், கால்நடை வளர்ப்பு மற்றும் சேனைச் செய்கை ஆகியன தொடர்பிலான பிணக்குகளிலும் அவர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.[219]

### மீள்குடியேற்றம்

மாவட்டத்தில் சில அமைவிடங்களில் பெருமளவு குற்றங்களில் தொக்கியுள்ள சமூகப் பிரச்சினைகள் கமத்தொழில் காணியில் கமத்தொழில் மான்யத்திற்கு பழக்கப்படாத குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கான திட்டங்கள் தொடர்பானவையாகும் எனக் கூறப்பட்டது.[220] மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வளவை இடது கரையில் உள்ள சூரியவெவவில் வீதியின் வழியே குடியேற்றப்பட்ட குடும்பங்களே இதற்கு வழங்கப்பட்ட முக்கிய உதாரணமாகும்.[221] பிரச்சினைகளின் முக்கிய மூலமொன்றான பகுதிக்கு புலம்பெயர்ந்து வந்தவர்களையும், அதன் தொடரான வியாபாரப் பகைமைகளையும் வர்த்தகச் சனசமூகத்திலிருந்து நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் சுட்டிக் காட்டினார்கள்.[222]

### கஞ்சா செய்கையும், விற்பனை செய்தலும்

அயலில் உள்ள மொனராகலை போலன்றி, ஹம்பாந்தோட்டையில் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றத்துடன் தொடர்பினைக் கொண்டிருப்பதாக தோன்றுகின்ற போதிலும், அது கஞ்சா செய்கையுடன் அவ்வளவாக பரந்திருக்கவில்லை. கஞ்சா செய்கைகளைப் பரிபாலிக்கும் கோஷ்டிகள் T-56க்களுடன் ஆயுதபாணிகளாக விளங்குவதுடன், செய்கையைச் சுற்றியுள்ள பகுதியை பொறித் துப்பாக்கிகளை அமைப்பதன் மூலம் பாதுகாப்பதாக அறிவிக்கப்படுகின்றது.[223] ஆயுதங்களுக்காக கஞ்சாவை விற்பதில் ஹம்பாந்தோட்டையில் உள்ள கோஷ்டிகள் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.[224] மாவட்டத்தில் பிரச்சினையின் மட்டத்தை எடுத்துக் காட்டுவதில் சிறிதளவு தகவல் உள்ளதுடன், போதைப் பொருள் கடத்தல்/வியாபாரம் செய்தலுக்கும், சட்டவிரோதமான சிறு ஆயுதங்களுக்கும், இலகு ஆயுதங்களுக்கும் இடையில் தொடர்பொன்றைச் சுட்டிச்சொல்வதற்கு அறிக்கைகள் இல்லை என்பதை ஊடகப் பகுப்பாய்வு கண்டறிந்தது.

### வேட்டையாடுதல்

பயிர் பாதுகாப்புக்கு ஆயுதங்களுக்கான தேவையை வனவாழ்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தினர் ('துப்பாக்கிகளின் உறுதியான உபயோகங்கள்' மீதான கீழேயுள்ள பகுதியைப் பாருங்கள்). எனினும், இந்த ஆயுதங்கள் பெரிதுமே சட்டவிரோதமான வனவாழ்வு வேட்டையாடுதலுக்கு பயன்படுத்துவதிலேயே முடிவடைதாகவே அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.[225] உருமாதிரியாக, ஹம்பாந்தோட்டையில் வனவாழ்வுத் திணைக்கள அலுவலகம் ஆண்டொன்றுக்கு வேட்டையாடுதலின் 15-20 சம்பவங்களைக் கையாள்கின்றது.[226] சட்டவிரோதமாக வேட்டையாடுபவர்களினால் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் உருமாதிரியாக நீண்ட குழல்

---

[218] 2006 மே 25இல் தென் மாகாண கிராமியப் பொருளாதார முன்னேற்றக் கருத்திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[219] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[220] 2006 மே 17இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[221] அதேவாறு மற்றும் 2006 மே 25இல் தென் மாகாண கிராமியப் பொருளாதார முன்னேற்றக் கருத்திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[222] வர்த்தக சமூகத்துடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[223] 2006 மே 19இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல். சந்தேகிக்கப்படாத ஆயுதங்களுடன் செயற்பாடுகளை கஞ்சா செய்கையாளர்கள் பாதுகாப்பதாக சிறுபான்மைகளையும், கிராமிய ஆண்களையும் சேர்ந்த நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் குறிப்பிட்டார்கள்.
[224] 2006 மே 26இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[225] 2006 மே 15இல் வனவாழ்வுத் திணைக்களப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[226] அதேவாறு

துப்பாக்கிகள், பொறித் துப்பாக்கிகள், மற்றும் இடையிடையே ரவைத் துப்பாக்கிகள் ஆகியனவாக விளங்குகின்றன.[227] வேட்டையாடுபவர்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பறிமுதல் செய்து, அவற்றை நேரடியாக நீதிவானுக்குச் சமர்ப்பிப்பதற்கான அதிகாரத்தை வனவாழ்வுத் திணைக்களம் கொண்டுள்ளது.[228] சுனாமியினால் பதிவேடுகள் அழிந்துள்ள போதிலும், கடந்த ஐந்து வருடங்களில் ஹம்பாந்தோட்டையில் வனவாழ்வுத் திணைக்களத்தினால் அண்ணளவாக 100 சட்டவிரோதமான சுடுகலன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என மதிப்பிடப்படுகின்றது.[229]

சுடுகலன்களினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆபத்துக்களினால் தாம் பயமுறுத்தப்படுகின்றனர் என்ற உணர்வினை வனவாழ்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கொண்டுள்ளனர். திடீர் வேட்டைகளின் போது, பெரிதுமே உத்தியோகத்தர்களை அபாயத்தில் வைத்துள்ளது. அவர்களே தடிகளினால் அவற்றைச் செயலிழக்கச் செய்ய வேண்டும். இரு சந்தர்ப்பங்களில் காயத்திலிருந்து ஓர் உத்தியோகத்தர் மயிரிழையினால் தப்பியுள்ளதாக அளவீட்டுக் குழாமுக்கு அவர் அளித்த நேர்முகங்காணலில் குறிப்பிட்டார். ஒரு சம்பவத்தில், பொறித்துப்பாக்கியொன்று தவறுதலாகச் செயற்பட்டு, அவரது காலுக்கு அருகில் சுட்டது; இன்னொரு சம்பவத்தில் வேட்டைக்காரர் ஒருவர் அவரைச் சுடுவதற்கு முயற்சித்துள்ளார். ஆனால், சுடுவதற்கு துப்பாக்கி தவறியுள்ளது.[230] ஏனைய திணைக்களங்களுடனும் இதுவே விடயமாகத் தோன்றுகின்றது. வேட்டையாடுதல் தொடர்பில் பிரச்சினையொன்று உள்ள போதும் பொலிஸாரிடமிருந்து துரிதமான பதிலிறுப்பினைப் பெறுவது கஷ்டமானதாகும். ஏனெனில், பொலிஸார் அதிகளவு வேலைப்பளுவைக் கொண்டுள்ளனர்.

### வயது

மாத்தறை வைத்தியசாலையில் பரீட்சிக்கப்பட்ட சுடுகலன்கள் தொடர்பான மரணங்களில் பாதிக்கப்பட்டவர்கள் உருமாதிரியாக 20-40 வயதுக்குட்பட்டவர் ஆவர். ஆனால், புறநீங்கலாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களும் இருந்திருக்கிறார்கள்.[231] இதே போல ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில், மிக உயர்வாகப் பாதிக்கப்பட்ட ஆண்கள் உருமாதிரியாக 20-45 வயதானவர்கள் என்பதுடன், இது திஸ்ஸமஹாரகமவில் 25-30 ஆகும்.[232] 2005 மே 01இலிருந்து 2006 ஏப்ரல் 30 வரைக்குமான ஊடக அறிக்கைகளின் பகுப்பாய்வே சிறு ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் தொடர்பான குற்றங்களின் வயதான பாதிக்கப்பட்டவர்களை சுட்டிச்சொல்லும் ஒரேயொரு மூலமாகும். ஊடக அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களின் சராசரி வயது 47.4 ஆகும்.

2005இல் ஹம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 42 சிறு ஆயுதங்கள் தொடர்பான வழக்குகளில், 78 குற்றவாளிகளில் 64 பேர் 18க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதினராவர். குற்றவாளிகளுக்கான அதே வயது வீச்செல்லை மித்தெனியவில் பொலிஸாரினால் குறிப்பிடப்பட்டது.[233] மாவட்டத்தில், ஆயுதபாணியிலான வன்முறையின் மட்டங்களில் குறைப்பொன்று இருக்க வேண்டுமானால், இந்த வயது வீச்செல்லையில் குற்றவாளிகள் மத்தியில் நடத்தைகளின் மாற்றத்திலிருந்தே இது முளைக்க வேண்டியுள்ளது.

---

227 அதேவாறு

228 அதேவாறு

229 அதேவாறு


230 அதேவாறு

231 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்

232 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

233 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

**2.7 சிறு ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் தொடர்பான வழக்குகளில் பிரதிவாதிகளின் வயது, ஹம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம், 2005**




**பால்நிலை**

அண்மைய வருடங்களில் மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய வைத்தியசாலைகளில் சுடுகலன்கள் - தொடர்பான மரணங்களில் முற்று முழுதாக ஆண்களையே சம்பந்தப்படுத்தியுள்ளது.[234] நூற்றுக்கு மேற்பட்ட சம்பவங்களைக் கையாண்டுள்ள மாத்தறையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் பெண்களைச் சம்பந்தப்படும் இரு சம்பவங்களை மட்டுமே நினைவுக்கு கொண்டுவர முடிந்தது.[235] இதே போல, திஸ்ஸமஹரகம வைத்தியசாலையில், சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் ஒரு போதுமே சுடுகலன்களினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரைக் காணவில்லை.[236] மாவட்டத்தின் சிறு ஆயுதங்கள், மற்றும் இலகு ஆயுதங்கள் தொடர்பான சம்பவங்களில் குற்றமிழைப்பவர்கள் தவிர்க்க முடியாத விதமாக ஆண்களே என ஒரு மூலத்தினால் குறிப்பிடப்பட்டது.[237]

மாவட்டத்தில் அறிவிக்கப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் எண்ணிக்கை, வேறு எங்கினும் அவதானித்ததை விட உயர்வானதாகும் என தங்காலையில் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டார்.[238] பகுதியில் வீட்டில் இடம்பெறும் வன்முறையின் மிகச் சில சம்பவங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.[239]

வீட்டில் இடம்பெறும் வன்முறையுடன், பிரதானமாக மதுபானத்துடன் தொடர்பானவற்றுடன் சிறிதளவு கரிசனையை நோக்குக் குழுக் கருத்துப்பரிமாறல்கள் வெளிப்படுத்தின.[240] ஆனால், சுடுகலன்களின் துஷ்பிரயோகத்திற்கு அதன் நிகழ்வினை தொடர்புபடுத்தவில்லை. பெண்கள் அதிக நம்பகத்தன்மையுடன் சம்பவங்களை முறையிடக்கூடியதாக பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இன்மையை பெண்கள் கவனத்திற்கெடுத்தனர்.[241] ஆதலினால், தற்போது மனவுணர்விலான பாலியல் மற்றும் வீட்டில் இடம்பெறும் வன்முறையுடன் பாரியளவு பிரச்சினை இருக்கக்கூடும். குடிநீருக்கான அடைதல் மீது

---

[234] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடனும், 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.

[235] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[236] 2006 மே 25இல் திஸ்ஸமஹரம வைத்தியசாலை சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[237] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[238] 2006 மே 16இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[239] அதேவாறு

[240] நகரப் பெண்களுடனும், கிராமியப் பெண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.


[241] கிராமப் பெண்களுடனும், சிறுபான்மையினருடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

ஏற்பட்ட பிணக்குகளை தங்காலையில் உள்ள பெண்கள் குறிப்பிட்டனர். ஒரு சம்பவத்தில் சுடுகலன்களையும், கத்திகளையும் சம்பந்தப்படும் இரு கொலைகள் இணைந்திருந்தன.[242] குற்றச்செயல்களின் அச்சத்தின் காரணமாக இரவில் எட்டு மணிக்குப் பின்னர் கிராமவாசிகள் வீட்டை விட்டு செல்வதில்லை என கிராமியப் பெண்கள் நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.[243]

## தேர்தல் வன்முறை

தேர்தல் வன்முறையின் பெருமளவு சுடுகலன்கள்-தொடர்பான சம்பவங்கள் 2001 பொதுத் தேர்தலின் போதும், பின்னரும் ஹம்பாந்தோட்டையில் அறிவிக்கப்பட்டது. 2004 தேர்தலில் ஹம்பாந்தோட்டையில் அளவிடப்பட்ட வன்முறையின் மட்டம் வேறு மாவட்டங்களில் அறிவிக்கப்பட்டதை விட குறைவடைந்துள்ளது. 2001க்கான பின்வரும் அட்டவணைகளின் முதலாவதில், தேர்தல் வன்முறையினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக ஹம்பாந்தோட்டை தோன்றுகின்றது. நாட்டில் ஏதாவது மாவட்டத்தின் அறிவிக்கப்பட்ட சுடுகலன் சம்பவங்களில் ஐந்து உயர்வான எண்ணிக்கையினதாக விளங்குகின்றது.[244] இரண்டாவது அட்டவணையில், மிகவும் குறைந்தளவிலான

**2.8 CMEVஇனால் அறிக்கையிடப்பட்ட மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறையிலான சம்பவங்கள், பொதுத் தேர்தல் 2001**





---

242 நகரப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

243 கிராமப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

244 தேர்தலுக்கு முன்னரும், தேர்தலின் போதும், பின்னரும் சம்பவங்களின் எண்ணிக்கையின் தொகையில் அடிப்படையானது: மாற்றுக் கொள்கை நிலையம், தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால் (CMEV) தேர்தல் தொடர்பான இறுதி அறிக்கை-பொதுத் தேர்தல் 2001 (2001), http://www.cpalanka.org/research papers/CMEVGeneral Election 2001.pdf.

**2.9 CMEVஇனால் அறிக்கையிடப்பட்ட மாவட்டத்தில் இடம்பெற்ற வன்முறையிலான சம்பவங்கள், பொதுத் தேர்தல் 2004 ஏப்ரல்**




வன்முறையைக் கொண்ட 2004 தேர்தல் குறித்து சித்தரிக்கப்படுவதுடன், சுடுகலன்கள் தொடர்பிலான சம்பவங்களினால் ஆகக் குறைந்தளவில் பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங்களில் ஒன்றாக ஹம்பாந்தோட்டை விளங்குகின்றது.[245]

2005 நொவம்பர் 17இன் தேர்தலில் பிரச்சாரத்தின் போதும், தேர்தல் தினத்தன்றும் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கையைக் காட்டும் பூர்வாங்க எண்ணிக்கைகள் மட்டுமே கிட்டுகின்றன. தேர்தலுக்கு முன்னர், நாடுபூராவும் நடந்த 465 சம்பவங்களில், ஹம்பாந்தோட்டையில் 6 மட்டுமே இடம்பெற்றன.[246] நாடுபூராவும் இடம்பெற்ற இருபத்தொன்பதுடன் ஒப்பிடுகையில், தேர்தலுக்கு முன்னரான சம்பவங்களில் ஒன்று சுடுகலன்களை சம்பந்தப்படுகின்றது. தேர்தல் தினத்தன்றே, நாடுபூராவும் நடந்த 46 சம்பவங்களில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நான்கு மட்டுமே நடைபெற்றதுடன், ஒன்றுமே சுடுகலன்களைச் சம்பந்தப்படுத்தவில்லை.[247]


---

[245] தேர்தலுக்கு முன்னரும், தேர்தலின் போதும், பின்னரும் சம்பவங்களின் எண்ணிக்கையின் தொகையில் அடிப்படையானது: மாற்றுக் கொள்கை நிலையம், தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால் (CMEV) தேர்தல் தொடர்பான இறுதி அறிக்கை-பொதுத் தேர்தல் 2004 ஏப்ரல் (2004, கொழும்பு), http://www.cpalanka.org/research papers/CMEV GE 2004.English.pdf.

[246] CMEV: 'குற்றங்கள் அறிக்கை' (கூட்டு எண்ணிக்கைகள்) திகதி: 2005.11.16 http://www.slelections.info/offences.php, 2006 மே 31இல் கையகப்படுத்தப்பட்டது.

[247] CMEV: 'குற்றங்கள் அறிக்கை' (தேர்தல் தினம்) திகதி: 2005.11.17, http://www.slelections.info/election day offences.php?PHPSESSID= b90770b91cf631288b70855de25a5ec7, 2006 மே 31இல் கையகப்படுத்தப்பட்டது.

**2.10 2001, 2004 மற்றும் 2005 தேர்தல்களில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேர்தலுக்கு முன்னரும், தேர்தல் தினத்தன்றும் சம்பவங்கள் CMEV**




தேர்தல்களில் அறிவிக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை கவனமாக நுண்ணாயப்பட வேண்டும். ஏனெனில், முறைப்பாடுகளைச் செய்பவர்கள் பெரிதுமே அரசியல்ரீதியில் செயல்நோக்கமளிக்கப்பட்டவர்களாவர்.[248] தேசியரீதியில், முறைப்பாடுகள் கிடைத்தமை தொடர்பில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுபவைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானது என்பதுடன், 2001இலிருந்து தற்போது வரை வன்முறை தொடர்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை.[249] அரசியல் ஆதரவைக் கொண்டுள்ளவர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு பொதுவான தயக்கமே இதற்கான பகுதியளவிலான காரணமாகும்.

2004 பொதுத் தேர்தல் மீது சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) அறிக்கையொன்றை விடுத்திருந்ததுடன், ஆள் மாறாட்டத்தைச் சம்பந்தப்படுத்தும் 12 சிறு சம்பவங்கள் இருந்த போதிலும், மாவட்டத்தில் கண்காணிக்கப்பட்ட சகல வாக்குச் சாவடிகளிலும் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான நிலைமைகள் இருந்ததாக குறிப்பிட்டிருந்தது.[250] வன்முறை இடம்பெறும் போது, இரு பாரிய கட்சி கூட்டணிகள் மீது சமஅளவில் குற்றம்சாட்டப்பட வேண்டும் என ஹம்பாந்தோட்டைக்கான PAFFREL இணைப்பாளர் குறிப்பிட்டார்.[251] 2000-2006 ஆண்டுகளில் தேர்தல் வன்முறையில் உறுதியான குறைப்பு இருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார். ஹம்பாந்தோட்டையை தனது சொந்தத் தேர்தல் தொகுதியாகக் கொண்டுள்ள ஜனாதிபதியினால் சகல அரசாங்க முகவராண்மைகளுக்கும் தேர்தல் நேரத்தில் வன்முறையின் மட்டத்தைக் குறைக்கும்படி அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதே வன்முறை குறைந்தமைக்கான காரணமென அவர் மேலும் குறிப்பிட்டார்.[252]

மாவட்டத்தில் தேர்தல் வன்முறையின் மட்டங்களைக் குறைப்பதில் முன்னேற்றம் இருந்த போதிலும், இன்னுமே வருந்தத்தக்க சம்பவங்கள் உள்ளன. உதாரணமாக, பொதுசன மக்கள் சுதந்திர முன்னணியின் தீவிரமான ஆதரவாளர் ஒருவரான 42 வயதான நபர் ஒருவர் பெலியத்தையில் சுட்டுக் கொல்லப்பட்டமை பற்றி அறிக்கையொன்றை ஊடகப் பகுப்பாய்வு குறிப்பிடுகின்றது. இந்த அறிக்கைகளின் படி, சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் பொலிஸாரினால் அவர்

[248] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[249] அதேவாறு
[250] 2004 பாராளுமன்ற பொதுத் தேர்தலின் இறுதி அறிக்கை PAFFREL (PAFFREL/MFFE. கொழும்பு) பக். 17-18.
[251] 2006 ஜூன் 01இல் ஹம்பாந்தோட்டை PAFFREL இணைப்பாளருடன் நேர்முகங்காணல்.
[252] அதேவாறு

கொல்லப்பட்டதாக நம்பப்படுகின்றது.[253] மாவட்டத்தில் சிறு ஆயுதங்கள் தொடர்பில் முக்கிய பிரச்சினையொன்றாக தேர்தல்களின் போது வன்முறை பற்றி ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற SASA-Net சிவில் சமூக உசாவுகையில் பங்கெடுப்பாளர்கள் இன்னுமே கரிசனை கொண்டிருந்தனர்.[254] இதே கரிசனையை கிராமிய பெண்கள் நோக்குக் குழு கருத்துப்பரிமாறலின் போது பங்கெடுப்பாளர்கள் கொண்டிருந்தார்கள்.[255] தேர்தல் வன்முறையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சகல முயற்சிகளுக்கும் மிகவும் ஆதரவாக இருப்பதாக கருத்துப்பரிமாறப்பட்ட பொதுமக்கள் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.[256]

### மதுபானம்

மாவட்டத்தில் வன்முறை மற்றும் குற்றவியல்தன்மை ஆகியன தொடர்பில் பிரச்சினையொன்றாக மதுபானம் ஓரளவுக்கு பரந்தளவில் குறிப்பிடப்பட்டது.[257] மதுபானம் தொடர்பான இரு சம்பவங்களை ஊடகப் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. ஒன்றில் ஹுங்கமவில் குடிபோதையில் ஒருவர் கொல்லப்பட்டார், இன்னொருவர் காயமடைந்தார். இன்னொரு சம்பவம் பெலியத்தைக்கு அருகில் நடைபெற்றது. இதில் சட்டவிரோதமான மதுபானத்தைத் தயாரிக்கும் குகையொன்றை விசாரணை செய்யச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் குகைக்கு அருகில் மரமொன்றுடன் பொருத்தப்பட்ட பொறித்துப்பாக்கி ஒன்றினால் கொல்லப்பட்டார். சட்டவிரோதமான மதுபான உற்பத்தி போன்ற சட்டவிரோதமான செயற்பாடுகளைப் பின்துரந்து செல்வதற்கு சட்டத்தின் விதியில் உள்ள பலவீனங்கள் மக்களை ஊக்கமளித்ததுடன், இது மறுபுறத்தில் செயற்பாட்டைப் பாதுகாப்பதற்கான ஆயுதங்களை வைத்திருப்பதற்கு அவர்களை இட்டுச் செல்கின்றது என தமது நோக்குக் குழுவில் கிராமிய ஆண்கள் குறிப்பிட்டனர்.[258] சுடுகலன்களுக்குப் பலியானவர்கள் மதுபோதையுடன் இருந்தார்களா என்பதையிட்டு விளக்கமளிக்க முடியாத நிலையில் சட்ட வைத்தியர்கள் விளங்கினார்கள். ஏனெனில், பிரேதப் பரிசோதனைகளின் போது, மதுபோதை மட்டங்களைச் சோதிப்பதற்கான வசதிகளை அவர்கள் கொண்டிருக்கவில்லை.

### போதைப்பொருள் பாவனை

இளம் வயதினர் மத்தியில் சில்லறைத் திருட்டின் உத்தேசமான காரணமொன்றாக மாவட்டத்தில் போதைப் பொருளுக்கான அடிமைத்தனத்துடன் சில பிரச்சினைகள் நோக்குக் குழுக்களினால் எழுப்பப்பட்டன.[259]

### இனங்களுக்கிடையிலான கெடுபிடிநிலை

மாவட்டத்தில் இனத்துவத்திற்கு அல்லது சமயக் குழுக்களுக்கு இடையில் பிரச்சினைகள் அல்லது கெடுபிடிநிலை இருக்கவில்லை எனத் தோன்றுவதுடன்,[260] ஆதலினால் இவ் வகையின் கெடுபிடிகளுக்கு ஆயுதபாணியிலான வன்முறை தொடர்பினைக் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை.

---

[253] ஊடகப் பகுப்பாய்வு, த ஐலன்ட், 2006 ஏப்ரல் 01, பக்கம் 2.
[254] SASA-Net சிவில் சமூக உசாவுகை நடைமுறையிலிருந்து தென் மாகாணத்திற்கான முடிவுகள், 2005.
[255] கிராமியப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[256] நகர பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[257] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை பள்ளிவாசல் பிரதிநிதிகளுடனும் மற்றும் 2006 மே 25இல் திஸ்ஸமஹரகம மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டி.திசாநாயக்கவுடனும் நேர்முகங்காணல்கள். சிறுபான்மையினருடனும், கிராமப் பெண்களுடனும் மற்றும் கிராமிய ஆண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[258] கிராமப் ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[259] சிறுபான்மையினர்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[260] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை பள்ளிவாசல் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல். சிறுபான்மையினருடனும், நகரப் பெண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

### சுனாமியினால் இடம்பெயர்வு

நிவாரணத்திற்கு தமது உரித்துரிமையை உறுதிப்படுத்துவதற்கு மக்கள் மத்தியில் சில எதிர்ப்புக்கள் இருந்த போதிலும், மாவட்டத்தில் சுனாமிக்குப் பின்னரான இடம்பெயர்வுடன் ஒன்றில் கெடுபிடி நிலை அல்லது ஆயுத வன்முறை இணைந்திருந்ததை நேர்முகங்காணப்பட்ட எவரினாலும் நினைவுக்கு கொண்டு வரமுடியவில்லை.[261]

### துப்பாக்கிகளின் உறுதியான உபயோகங்கள்

ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் புதிய சுடுகலன் உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல் தடைசெய்யப்பட்டது. துப்பாக்கியொன்றுக்கு சட்டபூர்வமான தேவையை தாம் கொண்டிருந்ததன் காரணமாக அந்நேரத்தில் இத் தடை பற்றி சிலர் முறையிட்டதாக மாவட்டச் செயலகத்தின் முன்னாள் உத்தரவுப் பத்திரம் வழங்கும் உத்தியோகத்தர் ஒருவர் நினைவுபடுத்தினார். அவர்களின் காரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கின. விசேடமாக யால தேசிய பூங்காவையும், உடவளவையையும் சுற்றி காட்டுப் பன்றிகள், குரங்குகள், மற்றும் யானைகள் ஆகியவற்றினால் முன்வைக்கப்பட்ட பயமுறுத்தலை வழங்குகையில் பயிர்களின் பாதுகாப்பு, சுய-பாதுகாப்பு, மற்றும் விளையாட்டுக்காகச் சுடுதல்.[262] வனவாழ்விலிருந்து பாதுகாப்பதற்காக துப்பாக்கிகளைக் கொண்டிருப்பதற்கு கமக்காரர்களின் தேவையை ஹம்பாந்தோட்டை கமத்தொழில் பிரதி ஆணையாளரும், கிராமிய ஆண் நோக்குக் குழு பங்கெடுப்பாளர்களும் உறுதிப்படுத்தினர்.[263]

## 4 ஆற்றலளவு

### சட்ட, நீதித்துறை முறைமை
### வன்முறைச் சனசமூகங்களில் ஒழுங்கை நிலைநிறுத்துதல்

பொலிஸார் ஊழலில் ஈடுபடுகிறார்கள் என்ற பரந்தரீதியிலான மனவுணர்வினை பொது மக்கள் கொண்டுள்ளார்கள். பொலிஸ் உத்தியோகத்தர்கள் வெளிப்படையாகவே இலஞ்சம் பெறுகிறார்கள் என அவர்கள் நம்புகின்றார்கள்.[264] தங்காலை பிரிவில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களினால் பிரச்சினை தொடர்பினைக் கொண்டுள்ளது. பிரிவின் பெரும்பாலான உத்தியோகத்தர்கள் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மையே இதற்குக் காரணமாகும்.[265] சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது சொந்த ஊரில் இருந்து தூரத்தில் பணிபுரிய வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறையிலான ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் மனவுறுதி நிலைநாட்டப்படுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டது.[266] சாதாரண கான்ஸ்டபிள் ஒருவரின் சம்பளத்திற்கு (மாதமொன்றுக்கு 11,000 ரூபா) தங்காலை பிரிவுக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கவனத்தை ஈர்த்தார். உத்தியோகத்தர்களுக்கான அதிகரித்த வேதனங்களும், படிகளும் இலஞ்சம் எடுப்பதற்கான அவாவை இல்லாதொழித்துவிடும் என அவர் வாதம் புரிந்தார்.[267]

---

[261] நகர பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[262] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் சுடுகலன்கள் உத்தரவுப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[263] 2006 மே 24இல் ஹம்பாந்தோட்டை கமத்தொழில் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல். கிராமிய ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[264] நகரப் பெண்கள், நகர ஆண்கள், சிறுபான்மையினர், வர்த்தக சனசமூகத்தினர் மற்றும் கிராமியப் பெண்கள் ஆகியோருடனான நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[265] 2006 மே 16இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் தங்காலைப் பிரிவு விசேட படையின் தலைவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுவரிஸுடனும் நேர்முகங்காணல்கள்.
[266] அதேவாறு
[267] 2006 மே 26இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

மித்தெனியவில், இரு வருடங்களுக்கு 'பெரும்பாலும் தினசரி' கொலைகள் இடம்பெற்றதாகவும், பகல் வேளையில் கூட வீதியில் நடப்பதற்கு பெண்கள் அச்சமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.[268]

பின்வருவனவற்றை சம்பந்தப்படுத்தி வன்முறையைத் தடுப்பதில் வெற்றிகரமான முன்னெடுப்பொன்றின் அடிப்படையில், உள்ளூர் சூழ்நிலையில் முன்னேற்றமொன்று அடையப்பட்டதாக மித்தெனிய பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பிரதிநிதியொருவர் அறிவித்தார்.

- அமைதியற்ற காலங்களில் சுடுகலன்கள் தொடர்பான சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கக் கூடாதென நீதிவான்களை அழுத்துதல்;
- குற்றம் புரிவதற்கு எதிராக எச்சரிக்கை செய்வதற்காக அறியப்பட்ட குற்றவாளிகளுக்கு வாராந்தக் கூட்டங்களை நடத்துதல்;
- கஞ்சா செய்கைகளையும், 'மூன் ஷைன்' உற்பத்தியாளர்களையும் கிரமமாக கைது செய்தல்;
- அறியப்பட்ட குற்றவாளிகளின் செயற்பாடுகளைக் கண்காணித்தல்
- பிரஜைகளுடன் கலந்தாய்வையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கு சமாதான சங்கத்தைத் தாபித்தலும், ஆலய சங்கள் ஊடாக பணியாற்றுதலும்;
- பாடசாலைகளில் விழிப்பியல் செய்திட்டங்களை நடத்துதல் (பொலிஸாருடன் எவ்வாறு தொடர்பு கொள்வது, பாடசாலைச் சிறுவர்களிடமிருந்து கடிதங்களுக்கு எவ்வாறு பதிலிறுப்பது என்பன பற்றி உத்தியோகத்தர்கள் விளங்குவார்கள்);
- பொது நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தலும், அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குதலும்.[269]

இந்த முன்னெடுப்புக்களின் தாக்கத்தை சுதந்திரமாக சரிபார்க்க அளவீட்டுக் குழாமினால் சாத்தியப்படவில்லை. ஆனால், ஆயுதபாணியிலான வன்முறையைக் குறைப்பதற்கான அடிப்படையாக தடுத்தல் மற்றும் சனசமூக உறவுகள் மீது பெறுமதியான வலியுறுத்தலை அவை எடுத்துக் காட்டுகின்றன. இது ஏனைய மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அமைவிடங்களில் நகல்படுத்துவது பெறுமதிமிக்கதாகும்.

குற்றத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பின் முன்னுணர்வை அதிகரிப்பதற்காக அதிகளவு பொலிஸ் ரோந்துகள், பிணக்குகளை மத்தியஸ்தம் செய்வதற்கான சிறந்த பொறி முறைகள் மற்றும், மூலவளங்களினதும், நன்மைகளினதும் நியாயமான பங்கீட்டினை உறுதிப்படுத்துதல் ஆகியனவற்றுக்கான அவசியத்தை பெண்களுடனான நோக்கு குழுக்கள் ஈர்த்தெடுத்துள்ளன.[270]

காணி, நீர்ப்பாசனம் மற்றும் வறுமை நிவாரண நன்மைகள் ஆகியன தொடர்பிலான பிணக்குகளை வழங்குகையில் பின்னையது குறிப்பிடத்தக்களவில் முக்கியமானதாகும். மாவட்டத்தில் வன்முறைக்கு இட்டுச் செல்வதாக இவை யாவும் இந்த அறிக்கையில் வேறு எங்கினும் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. பாரதூரமான குற்றத்தையிட்டு அறிவிப்பதற்காக தொலைபேசி இணைப்பொன்று தாபிக்கப்பட்டுள்ளதை கிராமிய ஆண்கள் சுட்டிச் சொன்னார்கள்.

சார்புரீதியில் பாதுகாப்பான நகர சனசமூகமொன்றில், பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அதன் சொந்த பொறிமுறைகளை சனசமூகம் கொண்டிருந்ததாக நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் சுட்டிக்காட்டியதுடன், சட்டபூர்வமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றைத் தாபிப்பதில் சனசமூகங்கள் தாமாகவே ஆற்றக்கூடிய வகிபங்கினை

[268] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[269] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[270] நகரப் பெண்கள், கிராமியப் பெண்கள் ஆகியோருடனான நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல். பொலிஸ் ஒன்று திரட்டலுக்கான உயர்வொன்றையும் கிராமிய ஆண்கள் சிபார்சு செய்தனர்

ஆர்வத்துடன் வலியுறுத்தின.[271] குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் பொது மக்களின் உதவியை ஈட்டுவதற்கு விழிப்பியலை உயர்த்தும் இயக்கமொன்றுக்கான அவசியத்தை தங்காலையில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் எழுப்பியதுடன், மாவட்டத்தில் வேறு எங்கினும் பெற்றோர்கள் மத்தியில் மது அருந்துவதைக் குறைப்பதற்கு பாடசாலையில் வெற்றிகரமான பணியின் உதாரணத்தை எழுப்பினார்.[272] பாரதூரமான சம்பவங்களில் தகவலை வழங்குவதற்காக பொது மக்களை ஊக்கப்படுத்துவதற்கு வெகுமதி திட்டமொன்றின் உபயோகத்தை இன்னொரு பொலிஸ் உத்தியோகத்தர் விதந்துரைத்தார்.[273]

## விசாரணைகள், சாட்சியம், மற்றும் வழக்குத் தொடர்தல்

பாரதூரமான குற்றங்களுக்கு தண்டிப்பதில் தற்போதைய முறைமையின் செயற்றிறனினால் தாம் கைவிடப்பட்டுள்ளதாக பொது மக்களின் சில உறுப்பினர்கள் உணருகின்றனர்.[274] அத்துடன், சுடுகலன் குற்றவாளிகளுக்கு மிகவும் ஆற்றல்மிக்க தண்டனையை பார்ப்பதில் பெரும்பாலானோர் எதிர்வுகூறத்தக்கவிதத்தில் ஆர்வம் காட்டினார்கள்.[275] எனினும், சுடுகலன் குற்றங்கள் உட்பட பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் நீதியை செயற்றிறனாகவும், ஆற்றல்மிக்கதாகவும் வழங்குவதற்காக சட்ட மற்றும் நீதித்துறையில் உள்ள செயற்பாட்டாளர்களின் ஆற்றலளவுடன் அறிவிக்கப்பட்ட சில பிரச்சினைகள் இருந்தன.[276]

குறிப்பான வழக்குகள் பற்றி குறிப்பிடாத போதிலும், சந்தேக நபர்களுக்கு எதிராக ஆற்றல்மிக்கதாக வழக்கு தொடர்வதற்கு போதிய சான்றினைப் பொலிஸார் திரட்டுவதில்லை என ஒரு முக்கிய தகவலளிப்பவர் குறிப்பிட்டார்.[277] விசாரணை செய்யும் நடைமுறை பற்றி விபரிக்கையில், பௌதீக சான்று மீது சிறிதளவு வலியுறுத்தலை முன்வைக்கும் அதே வேளை, நேரடி சாட்சிகள் மீது பொலிஸார் நோக்கினைக் கொண்டிருப்பதாக நேர்முகங்காணப்பட்ட இன்னொருவர் குறிப்பிட்டார்.[278] அதே வேளை, பொலிஸாருக்கு சிறிதளவு மாற்று வழியே இருந்தது. ஏனெனில் பௌதீக சான்றினதும், குற்றம் நடந்த இடத்திலான விசாரணையினதும் பகுப்பாய்வுக்கான ஆற்றலளவு நாடு பூராவும் அதிகளவு மட்டுப்பட்டுள்ளது.[279] துப்பறியும் தொழில்நுட்பங்களில் சிறந்த பயிற்சிக்கான அவசியத்தை சுடுகலன்களிலான வழக்குகளில் குழாம்களுக்கு கிரமமாக தலைமை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.[280]

இத்தகைய பிரச்சினைகளின் மூலகாரணத்தைக் கண்டறியும் சிறந்த நிலையில் விளங்கிய நேர்முகங்காணப்பட்ட மூவர், சுடுகலன்களிலான வழக்குகளில் பொலிஸார் இடையிடையே சாட்சியத்தை போலியாகத் தயார்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டினார்கள்.[281] சுமத்தப்படும் அபராதத்தின் கடுமையை அதிகரிப்பதற்காக சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு சுடுகலன்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை பொதுமக்களும், பொலிஸாரும் ஏற்கனவே சேர்த்துக் கொண்டுள்ளதாக இவர்களில் ஒருவர் சுட்டிக்காட்டினார்.[282] இத்தகைய

---

[271] நகரப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[272] 2006 மே 16இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[273] 2006 மே 16இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[274] நகரப் பெண்கள், கிராமியப் பெண்கள் ஆகியோருடனான நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[275] நகர ஆண்கள், கிராமிய ஆண்கள் ஆகியோருடனான நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[276] இந்த மனவுணர்வு பரந்தரீதியில் பரிமாறப்பட்டது. உதாரணமாக 2006 மே 17 அன்று நேர்முகங்காணலில் மித்தெனிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சார்ஜன்ட் அனுர பின்வருமாறு கூறினார்: சுடுகலன் குற்றங்களுக்கான அபராதங்கள் உயர்வானதல்ல. எதிர்த்தரப்பு வழக்கறிஞர்களினால் சிக்குகின்ற படிக்காத சாட்சிகளினால் குற்றங்கள் தூக்கியெறிப்படுகின்றன. அத்துடன் வழக்குகள் விசாரணைக்கு வருவதற்கு நீண்ட காலம் எடுப்பதனால் சம்பவத்தை பாதிக்கப்பட்டவர்கள் மறப்பதுடன், குற்றம் இழைத்தவர் அவர் ஏன் தண்டிக்கப்படுகிறார் என்பதையிட்டு சகல உணர்வையும் இழக்கின்றார்.

[277] 2006 மே 16இல் தங்காலை நீதிவான் மன்ற சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[278] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[279] அதேவாறு

[280] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல். அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

[281] 2006 மே இல் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இரு சட்ட, நீதித்துறை உத்தியோகத்தர்களுடனும், அனாமதேய பிரதிவாதியுடனும் நேர்முகங்காணல்கள்.

[282] 2006 மே இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்ட, நீதித்துறை உத்தியோகத்தர் ஒருவருடன் நேர்முகங்காணல்.

நடைமுறைகளில் இருந்து விளைகின்ற முரண்பாடின்மைகள் உண்மையில், குறுக்கு விசாரணையின் கீழ் வெளிப்படுத்தப்படும் போது, வழக்குத் தொடுப்பவருக்கு எதிராக வழக்கை பலவீனமாக்கும்.[283] 1இதே பிரச்சினையை மறுதலையாக நேர்முகங்காணப்பட்ட ஒருவர் அடையாளங் கண்டார். இப்பிரச்சினையின்படி சில சந்தர்ப்பத்தில் சட்டவிரோதமான ஆயுதமொன்றைக் கண்டுபிடித்தமை பற்றி அறிவிப்பதில்லை. ஆனால், அதற்குப் பதிலாக, தம்முடனேயே வைத்திருக்கின்றார்கள்.[284] இதேவாறாக, ஹம்பாந்தோட்டையில் உள்ள மேல் நீதிமன்றம் இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. அதாவது நீதிவான் மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்ட தடயப்பொருட்கள் மேல் நீதிமன்றத்தை வழக்கு அடையும் முன்னர் காணாமல் போய்விடுகின்றன.[285] சுடுகலன்கள் தொடர்பிலான ஏதாவது இத்தகைய இழப்புக்கள் நுண்ணாயப்பட்டு, எதிர்காலத்தில் தடுக்கப்பட வேண்டும். ஏனெனில், விநியோகத்தில் உள்ள ஆயுதமொன்றின் இழப்பினை மட்டும் அவை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. ஆனால், சட்டவிரோதமான சுடுகலன்களைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான முக்கிய சாட்சியமும் இழக்கப்படுகின்றது.

குற்றமொன்று இழைக்கப்படும் போது பொலிஸாரினால் பாதுகாவலுக்கு எடுக்கப்படும் ஆயுதங்கள் குறித்து அளவீட்டிலிருந்து முக்கியமான முடிவு வெளியாகியுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டத் தகவலைத் திரட்டுவதற்கு சாட்சியத்தில் தக்கவைக்கப்பட்டுள்ள இந்த ஆயுதங்களைக் கையாள்வதற்கான முறைமை தற்போது குறைவாகச் செயற்படுகின்றது. தகவல் வேண்டுகோள்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படுகின்ற ஆயுதங்கள் மீது நேரகாலத்திற்கான அறிக்கைகளை வழங்குவதற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அலுவலகம் குறைந்த ஆற்றலளவைக் கொண்டுள்ளதே ஒரு முக்கிய பிரச்சினையாகும்.[286] பணியாளரின் பற்றாக்குறையின் காரணமாக, நீண்ட தீர்க்கப்படாமல் உள்ள வழக்குகளை அரசாங்கப் பகுப்பாய்வாளர் கொண்டுள்ளார். இதனால், நீதிமன்றத்தில் சாட்சியமாகப் பயன்படுத்துவதற்கு சுடுகலன் மீதான அறிக்கையொன்றை பெறுவதற்கு இரு வருடங்கள் எடுக்கின்றன[287] ரவைகளைச் சுடும் துப்பாக்கிக்கான வெற்று ரவைகளைப் பொருத்துவதற்கான தொழில்நுட்பத்தை தாம் கொண்டுள்ளதாக அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் சுடுகலன்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் குறிப்பிட்டார். எனினும், வழக்கொன்றை நடத்துவதில் பெறுமதிமிக்க கருவியொன்றாக இருக்கக்கூடிய ரவையையும், ஆயுதத்தையும் ஒத்திருக்க வைப்பதற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திலிருந்து அறிக்கையொன்றை தாம் காணவேயில்லை என இன்னொரு முக்கிய தகவலளிப்பவர் முறையிட்டார்.[288] கொழும்பில் உள்ள அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு சான்றாக வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களை விநியோகிப்பதற்கும், அங்கிருந்து அவற்றை மீட்பிப்பதற்கும் பொலிஸார் கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றார் என்பது இன்னொரு பிரச்சினையாகும். இப்பிரயாணத்தை மேற்கொள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வாகன மூலவளங்களுடன் (ஹம்பாந்தோட்டையில் உள்ள பொலிஸ் நிலையங்களிலிருந்து 16 மணித்தியால பயணம்)[289] எடுத்துச் செல்வதற்காக அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பாரிய தொகையிலான ஆயுதங்கள் காத்திருக்கின்றன.[290]

---

[283] அதேவாறு

[284] அதேவாறு

[285] அதேவாறு

[286] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் பெலியத்தை பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் காலி, கராப்பிட்டி போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.

[287] 2006 மே 10இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்ட மா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் அங்குணபொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதியுடனும், 2006 மே 26இல் காலி, கராப்பிட்டி போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.

[288] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்ட மா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[289] 2006 மே 17இல் அங்குணபொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.

[290] 2006 மே 10இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

மாகாண மட்டத்திற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளரின் செயற்பாடு பாரப்படுத்தப்பட வேண்டும் என்பதே இப்பிரச்சினை தொடர்பில் சகல பங்குதாரர் மத்தியில் உள்ள பொதுவான விதந்துரைப்பாகும்.[291] அதன் முறைகளை நவீனமயப்படுத்துவதற்கும், குற்றச் சம்பவ விசாரணையைப் பொறுப்பேற்பதற்கும் அதை அனுமதிப்பதற்கு அதிகரித்த மூலவளங்களுக்கு அது முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும் என நேர்முகம் காணப்பட்டவர்கள் மேலும் சுட்டிச் சொன்னார்கள்.[292] இறுதியாக, சுடுகலன்கள் தொடர்பானவை போன்று, பாரதூரமான வழக்குகளில் முக்கியமான சாட்சியத்தை உறுதிப்படுத்துவதற்கும், மிகவும் விரைவிலேயே கிட்டச் செய்வதற்கும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் அதிகளவு பணியாளருக்கான தேவையை நேர்முகங்காணப்பட்டவர்கள் வலியுறுத்தினார்கள். இது சுடுகலன்களினாலான குற்றவாளிகளுக்கு எதிராக மிகவும் வெற்றிகரமாக வழக்குத் தொடர்வதற்கும், விளக்கமறியலில் உள்ளதும், அவர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு பதிலளிப்பதற்கு காத்திருப்பதுமான சுடுகலன்களினாலான பிரதிவாதிகளினால் திருத்துவதற்கான சேவைகள் முறைமை மீது முன்வைக்கப்பட்டுள்ள சுமையைக் குறைப்பதற்கும், நிரூபிக்கப்பட முடியாத குற்றங்கள் மீது அவர்களது தடுத்து வைத்தலைக் குறைப்பதற்கும் இட்டுச் செல்ல வேண்டும்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சம்பவங்களைக் கையாளும் சட்ட வைத்தியர்கள் உயர் மட்டத்திலான சீவியத்தொழில்தன்மையுடன் சித்தரிக்கப்படுகின்றனர். ஆனால், அவர்கள் ஆகக்குறைந்த கருவிகளுடன் மட்டுமே பணியாற்றுகின்றனர். தனது தனிப்பட்ட நடமாடும் தொலைபேசியைப் பயன்படுத்தி காயங்களின் புகைப்பட பதிவுகளைச் செய்வதற்கு ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.[293] மிகவும் பெரிய சவச்சாலையிலும் கூட, சுடுகலனிலான கொலையில் பாதிக்கப்பட்டவர்களின் சட்டப் பரிசோதனையை மேம்படுத்தக்கூடிய எக்ஸ்-கதிர் மற்றும் நச்சியல் சாதனங்களுக்கான அடைதலை தான் கொண்டிருக்கவில்லை எனவும், தமது சொந்த உள்ளகச் செலவினங்களை வைத்தியர்களே கிரமமாக செலுத்துகின்றனர் எனவும் நேர்முகங்காணப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அறிவித்தார்.[294] உதவியின் வேறு துறைகளுடன் ஒப்பிடுகையில் சட்ட வைத்திய மூலதன அபிவிருத்தியை உலக சுகாதாரத் தாபனம் உதாசீனம் செய்வதாக குறிப்பிடப்பட்டது.[295]

ஆண்டொன்று 10,000 வழக்குகளைத் தயாரிப்பதற்கு 50 உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ள சட்ட மா அதிபர் திணைக்களத்தில் உள்ள தாமதங்கள் சுடுகலன்களினாலான வழக்குகள் நீதியை வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றன. இதே போல, சுடுகலன்கள் மற்றும் தன்னியக்க ஆயுதங்கள் தொடர்பிலான ஏதாவது வழக்கையும் சம்பந்தப்படுத்தும் சகல குற்றவியல் வழக்குகளையும் விசாரிக்கும் ஹம்பாந்தோட்டையில் உள்ள மேல் நீதிமன்றம் 600 தீர்க்கப்படாத வழக்குகளைக் கொண்டுள்ளது.[296] இவ்வழக்குகளில் மிக முந்தியவை 1996இல் ஆரம்பிக்கப்பட்டவை. நூற்றுக்கு மேற்பட்டவை 1997-1999 காலத்திற்குட்பட்டவை. எஞ்சிய வழக்குகள் 2000இலிருந்து தற்போது வரையிலானவை.[297] மேன்முறையீட்டு வழக்குகளை விசாரிப்பதற்கும் வருடக்கணக்கில் எடுக்கின்றன.

[291] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் அங்குணபொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதியுடனும், 2006 மே 26இல் காலி, கராப்பிட்டி போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.
[292] 2006 மே 10இலும், 2006 மே 16இலும் மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்கள்.
[293] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[294] 2006 மே 26இல் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[295] அதேவாறு
[296] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[297] அதேவாறு

## சிறைச்சாலைகள்

அதன் ஆகக்கூடுதலான ஆற்றலளவைவிட மூன்று தடவைகளுக்கு மேற்பட்ட கைதிகளை சிறைச்சாலைத் திணைக்களம் கொண்டுள்ளது (8,000க்காக கட்டப்பட்ட முறைமையொன்றில் 25,000 கைதிகள் சிறைவைக்கப்பட்டுள்ளனர்).[298] குறைவான மூலதனத்தின் விளைவாக தேசிய முறைமை நாசமடைந்துள்ளதுடன், குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான ஏற்பாடும் மோசமாகவுள்ளது.[299] ஹம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் ஓரளவுக்கு தேசிய பிரச்சினைகள் பிரதிபலிக்கின்றன. தங்காலைச் சிறைச்சாலை தற்போது மொத்தமாக 448 கைதிகளைக் கொண்டுள்ளது. இவர்களில் 359 பேர் விளக்கமறியலில் உள்ளனர்.[300] 2001இல் சிறைச்சாலை அண்ணளவாக 750 கைதிகளைக் கொண்டிருந்ததுடன், மிதமிஞ்சிய கைதிகளின் எண்ணிக்கையும், நீர் இன்மையும் கலவரத்திற்கு இட்டுச் சென்றது. இதற்குப் பதிலாக, மிதிமிஞ்சிய தொகை ஓரளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இருந்தும் பிரச்சினை தொடர்ந்துமிருக்கின்றது.[301]

கைதிகளில் எத்தனை பேர் மீள் குற்றவாளிகள் என்பதற்கு உள்ளூர் மட்டத்தில் தரவுகள் கிட்டவில்லை. எனினும், சுடுகலன்கள் குற்றவாளிகள் போன்ற கடுமையான குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு முறைமையொன்று இல்லாததுடன், குற்றவாளிகளுக்கும், விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுக்கும் பழி தீர்ப்பதையே சிறைச்சாலை கல்வியைப் போதிப்பதாகத் தோன்றுகின்றது.[302] மேலதிகமாக 50 பணியணி உறுப்பினர்களின் அறிமுகத்துடன் சிறைச்சாலை நன்மையடையும் என சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அபிப்பிராயப்பட்டார். இத்துறையில் சர்வதேச நியமங்கள் நிலவுகின்ற போதிலும், சிறைச்சாலைச் சேவையினுள் நியமங்களை மேம்படுத்துவதில் நன்கொடை அளிக்கும் நாடுகளின் அக்கறையின்மையைப் பற்றி ஒரு முக்கியமான தகவளிப்பவர் குறிப்பிட்டார்.[303]

## சுடுகலன்கள் வைத்திருக்கும் முகவராண்மையினுள் பயிற்சியும், சாதனங்களும்

திடீர் வேட்டைகளைப் பொறுப்பேற்பதில் பயிற்றுவிக்கப்பட்டதும், ஆயுதங்களை அடையாளம் காண்பதிலும், அவற்றைக் கையாள்வதிலும் திறன்பெற்றதுமான அதிகளவு உத்தியோகத்தர்களுக்கான அவசியத்தை சுடுகலன்களை கிரமமாகக் கையாளும் இரு உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டினார்கள்.[304] இராணுவ முறையிலான ஆயுதங்களைக் கொண்டுள்ள பயிற்றுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கே தாம் கிரமமாக முகம்கொடுப்பதாக பொலிஸார் நம்புவதுடன், ஆகவே இத்தகைய தொடர்பொன்றில் தோன்றுகின்ற சூழ்நிலைகளுக்கு ஒத்துப் போவதற்கு நிபுணத்துவமும், சாதனங்களும் அவசியமாகும்.[305] பிரிவில் சாதாரண உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, சுடுகலன்கள் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட போதும், அவர்களில் சில உத்தியோகத்தர்கள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை கூட சுடவில்லை என நேர்முகங்காணப்பட்ட ஒருவர்

---

[298] 2006 மே 10இல் சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடனும், UNCAPISA உறுப்பினருடனும் நேர்முகங்காணல்கள்.
[299] அதேவாறு
[300] 2006 மே 16இல் தங்காலை சிறைச்சாலைப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[301] அதேவாறு
[302] உதாரணமாக, நேர்முகங்காணல் ஒன்றில், சிறைச்சாலையில் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவாளிகளுடன் தொடர்பைப் பெற்றுக் கொண்டதாகவும், தமக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் ஆயுதங்களை வழங்குவதற்கு அவர் உடன்பட்டால் பிணைப்பணத்தை தருவதாகவும் விளக்கமறியலில் முன்னர் இருந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.
[303] 2006 மே 10இல் சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[304] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடனும் நேர்முகங்காணல்கள்.
[305] அதேவாறு. இரு நேர்முகங்காணல்களில் பராதுருப்பாக முன்னர் பணியாற்றிய கெட்ட பெயரெடுத்த குற்றவாளி 'ஆமி ஜினி' பற்றி உதாரணம் வழங்கப்பட்டது. அவரினால் இரு T-56க்களை ஒரே தடவையில் இரு கைகளினாலும் சுடமுடியும். இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவரினால் பஸ் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை ஒன்றின் போது, சமூகமளித்திருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களினால் (பெலியத்தை பொறுப்பதிகாரியினால்) மேலும் ஓர் உதாரணத்தை வழங்கமுடிந்தது. போதிய பயிற்சி இன்மையினால் அவர்களால் அதைக் தடுக்க முடியவில்லை.

குறிப்பிட்டார்.[306] ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் பாதுகாப்பாகக் கையாள்தல் மற்றும் ஆயுதங்களை அடையாளங் காணுதல் ஆகிய துறைகளில் உத்தியோகத்தருக்கான பயிற்சியை மேம்படுத்த முடியும் என இன்னொரு உத்தியோகத்தர் சுட்டிக்காட்டினார்.[307] ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சந்தேக நபர்களைப் பிடிப்பதற்கு செய்யப்பட்ட முயற்சியின் போது அவர்களைச் சுட்டுக் கொன்ற ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவத்தையிட்டு அளவீட்டுக் குழாம் அறிந்து வைத்திருந்தது. ஆகக்குறைந்தது ஒரு சம்பவத்தில் நாசம் விளைவிக்கும் சக்தியின் உபயோகத்தை சூழ்நிலைகள் தேவைப்படுத்திய போதிலும், எதிர்காலத்தில் உயிர் இழப்பு இன்றி, இத்தகைய சம்பவங்களை சிறந்த பயிற்சியை இயலச் செய்திருக்கும்.

சாதனங்களைப் பொறுத்தளவில், ஆயுத வன்முறையின் சம்பவங்களுக்கு பதிலிறுப்பதை மேம்படுத்துவதற்காக, குண்டு துளைக்காத அங்கிகளுக்கும், வானொலி தொடர்பாடலை ஒட்டுக் கேட்பதை தடுக்கக்கூடிய புதுப்பிக்கப்பட்ட முறைமையொன்றுக்குமான அவசியம் பற்றி அளவீட்டுக் குழாமினால் சுட்டிக்காட்டப்பட்டது.[308] பொதுவான பொலிஸ் பணிக்கான மூலவளங்களைப் பொறுத்தளவில், சில பொலிஸ் நிலையங்களில் சிறிய தொகையிலான வாகனங்களே இருப்பது, சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே பிரச்சினையாக நோக்கப்படவில்லை,[309] ஆனால் வேறு திணைக்களங்களினாலும் அவற்றுக்கு சில வேளைகளில் வாகனங்கள் தேவைப்படும் போது, பொலிஸாரிடமிருந்து துரிதமான ஆதரவை எப்பொழுதுமே பெறமுடியாததினால் அது பிரச்சினையாக விளங்கியது.[310] அவசரகால நிமைகளின் போது பொலிஸாரிடமிருந்து கிட்டுகின்ற பதிலிருப்பின் மோசமான மட்டத்தையிட்டு பொது மக்களும், வர்த்தகர்களும் சுட்டிக்காட்டினார்கள்.[311] வனவாழ்வுத் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மதுபரிபாலனத் திணைக்களம் போன்ற வேறு திணைக்களங்களிலிருந்து எழுகின்ற எதிர்பார்ப்புக்களினால் அதிக சுமை ஏற்பட்டுள்ளதாக சில பொலிஸார் குறிப்பிட்டதுடன், அதிகளவு ஆளணியினருக்கான அவசியத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.[312] தொலைபேசிகளையும், தொலைநகல் இயந்திரங்களையும் கொண்டுள்ள பொலிஸ் நிலையங்கள் கணனிகளினதும், இணைய தளத்தினதும் உபயோகத்தில் போதியளவு பயிற்சியைப் பெற்ற பணியாளரைக் கொண்டிருந்தால் அவற்றை நிறுவுவதன் மூலம் நன்மையைப் பெற முடியும்.[313] தரவுத் தளங்களும், நடைமுறையிலான தகவலும் இன்மையின் காரணமாக சந்தேக நபர் ஒருவர் வேறு எங்கினும் தேடப்படுகின்றார் என்பதை சில வேளைகளில் பொலிஸ் நிலையங்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பதாக பொலிஸ் உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.[314] சிறந்த ஆயுதபாணிகளிலான குற்றவாளிகளிடமிருந்து முகங்கொடுக்கப்படும் பயமுறுத்தலை முறியடிப்பதற்கு அதிகளவு நவீனமான ஆயுதங்களைத் தாம் விரும்புவதாக சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டார்கள்.[315]

---

[306] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[307] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[308] 2006 மே 16இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் தங்காலைப் பிரிவு, விசேட படையின் தலைவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுவரிஸூடனும் நேர்முகங்காணல்கள் (மேம்படுத்தப்பட்ட வானொலியை மட்டுமே தங்காலையிலிருந்து சிரேஷ்ட பிரதிநிதியொருவர் சிபார்சு செய்தார்).

[309] வலஸ்முல்ல பொலிஸ் நிலையத்தில் உள்ள 66 உத்தியோகத்தர்களுக்கு மூன்று ஜீப்களும், ஒரு மோட்டார் சைக்கிளும் உள்ளன. 2006 மே 17இல் வலஸ்முல்ல பொலிஸ் நிலைய குற்றவியல் விசாரணைகள் தலைவருடனான நேர்முகங்காணல். அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் 53 உத்தியோகத்தர்களுக்கு மூன்று ஜீப்களும் (இவற்றில் இரண்டு தொடர்ச்சியாக பழுதுபார்க்கப்படுகின்றன), இரு மோட்டார் சைக்கிள்களும் உள்ளன. இங்கு பொலிஸ் பணிக்காக தமது சொந்த வாகனங்களையே சில உத்தியோகத்தர்கள் பயன்படுத்துவதாகக் குறிப்பிடப்படுகின்றது. 2006 மே 17இல், அங்குணுகொலபெலஸ்ஸவில் சர்ஜன்ட்கள் பண்டாரவுடனும், ஜயசூரியவுடனும் நேர்முகங்காணல்.

[310] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[311] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபை பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல். மேலும் போதிய வாகனங்கள் இன்மையும், அவசரகால நிலைமைகளை கையாள்வதில் போதிய பயிற்சியின்மையும் பிரச்சினையின் அம்சமொன்றாகக் குறிப்பிடப்பட்டது.

[312] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடனும், 2006 மே 17இல் அங்குணகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலைய பிரதிநிதிகளுடனும், 2006 மே 26இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் பிரதிநிதியுடனும் நேர்முகங்காணல்கள்.

[313] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[314] 2006 மே 17இல் வலஸ்முல்ல பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[315] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

2004இல் யாலவில் கஞ்சா செய்கையொன்றின் மீதான திடீர் வேட்டையின் போது, சக உத்தியோகத்தர் ஒருவரின் ரவையினால் வனவாழ்வுத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.[316] தனிப்படுத்தப்பட்ட, துக்ககரமான சம்பவங்களில் இருந்து பரந்த முடிவுகளை எடுப்பது நியாயமற்றது என்ற போதிலும், சுடுகலன்களை வைத்திருக்கும் சகல ஆளணியினரும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான பயிற்சியைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், பொருத்தமான ஆற்றலைப் பயன்படுத்தி அவர்கள் முகம்கொடுக்கும் பயமுறுத்தல்களைச் சமாளிக்ககூடியவர்களாகவும் விளங்க வேண்டும். வனவாழ்வுத் திணைக்களத்தில், உண்மையில் நியாயமானளவு மட்டத்திலான உயர்வான பயிற்சியை உத்தியோகத்தர்கள் பெற்றிருப்பதாகத் தோன்றுகின்றது. T-56 துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கு தற்போது பயிற்றப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஒன்றில் பொலிஸாராக, இராணுவத்தினராக அல்லது விசேட செயலணி ஆளணியினராக விளங்குகின்றனர்.[317] எனினும், யாலவில் உள்ள உத்தியோகத்தர்கள் ஏற்கனவே T-56க்களைப் பிரயோகிக்கும் குற்றவாளிகளுக்கு முகம்கொடுத்துள்ளார்கள்.[318] ஆகவே, தாம் பயமுறுத்தப்படுவதாக உத்தியோகத்தர்கள் ஒத்துக்கொண்டதுடன், திணைக்கள இடப்பரப்பின் பாதுகாப்பையும், அத்துடன் தமது தனிப்பட்ட பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கான உதவியை அவர்கள் வரவேற்கின்றார்கள்.[319]

தம்முடன், அல்லது தமது கடமைகளுடன் யாராவது தலையிடுவதிலிருந்து பாதுகாப்பதற்கு பலாத்காரத்தை உபயோகிப்பதற்கான சட்டபூர்வமான உரிமையை வனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கொண்டுள்ளார்கள். பலாத்காரத்தை எப்பொழுது பயன்படுத்துவது பொருத்தமானது என்பது பற்றிய பயிற்சிக்கும், சட்ட ஆலோசனைக்குமான அவசியத்தை மாவட்ட அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் முனைவுபடுத்தினார்.[320] ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்[321] இன்று வரை எச்சரிக்கை வேட்டுக்களை மட்டுமே உத்தியோகத்தர்கள் தீர்த்துள்ள போதிலும், பலாத்காரத்தை உபயோகிப்பதில் அவர்கள் கொண்டுள்ள சட்டபூர்வமான தாக்கங்கள் பற்றி மாவட்ட அலுவலகத்தில் நேர்முகம் காணப்பட்டவர் கரிசனை கொண்டிருந்தார்.[322] வனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பொலிஸ் பயிற்சி முகாமொன்றில் சுடுகலன்கள் மீது 7-10 நாட்கள் தூண்டல் பயிற்சியைப் பெறுகின்றார்கள்.[323] தற்போதைய தேவைகளுக்கு இது போதாது என நேர்முகங்காணப்பட்ட உத்தியோகத்தர் சுட்டிக்காட்டினார். உத்தியோகத்தர்களுக்கு மேலதிக பயிற்சியை வழங்குவதற்கு உத்தியோகபூர்வ முன்னெடுப்பொன்று இருந்தது.[324] ஆனால், வேறு பாரப்படுத்தல்களின் காரணமாக பயிற்சி வசதி இடைநிறுத்தப்பட்டது.[325] ஆயுதங்கள் இழக்கப்பட்டதற்கான எவ்வித சம்பவங்களையும், வனத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் அறிவிக்கவில்லை.[326] எனினும், அதிருப்தியடைந்த கிராமவாசிகளினால் உத்தியோகத்தர்களின் ஆயுதங்கள் திருடப்பட்டு, பின்னர் பொலிஸாரினால் மீட்பிக்கப்பட்ட சம்பவங்களுக்கு அளவீட்டுக் குழாமின் கவனத்தை காவல் அலுவலக உத்தியோகத்தர்கள் ஈர்த்திருந்தனர். வன்முறையாக மாற்றமடையக்கூடிய சம்பவங்களைக் கையாள்வதில் உத்தியோகத்தர்களுக்கு சிறந்த பயிற்சிக்கான சாத்தியமான அவசியத்தையும், துக்ககரமான முடிவுகளுக்கு இட்டுச் செல்வதிலிருந்து இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரின் அதிகளவு ஆதரவுக்கான அவசியத்தையும் இது சுட்டிச்சொல்கின்றது.

---

[316] 2006 மே 15இல் வனவாழ்வுத் திணைக்களப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[317] அதேவாறு
[318] அதேவாறு
[319] அதேவாறு
[320] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[321] 2006 மே 24இல் வன திணைக்கள வலஸ்முல்ல காவல் அலுவலகப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[322] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[323] அதேவாறு
[324] அதேவாறு
[325] அதேவாறு
[326] அதேவாறு

மாவட்டத்தில சிறைச்சாலைச் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் ஆயுதத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சுடுகலன்களின் உபயோகம் குறித்து பொலிஸாரினால் பயிற்றுவிக்கப்படுகின்றனர். சிறைச்சாலை உத்தியோகத்தர்களினால் பலாத்காரத்தைப் பயன்படுத்தல் சிறைச்சாலை அதிகாரச் சட்டத்தினால் ஆட்சிப்படுத்தப்படுகின்றது.

பெருமளவு சந்தர்ப்பங்களில் வங்கி பாதுகாப்புப் பணியாளர்கள் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்பதுடன், இதனால் அவர்கள் பொதுவாகவே நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் என வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிட்டார்.[327] மக்கள் வங்கி மேலதிகமாக ஒவ்வொரு வருடமும் ஒரு நாள் பயிற்சிக்காக பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அனுப்புகின்றது.[328] வங்கி பாதுகாப்பை மேம்படுத்த மேலும் பாதுகாப்பு பணியாளருக்கும், மேலும் நவீன ஆயுதங்களுக்குமான அவசியமொன்றுக்கான முன்னுணர்வை நேர்முகங் காணப்பட்ட அதே உத்தியோகத்தர் கொண்டிருந்தார்.[329]

## குற்றவாளிகள், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள், இளம் ஆண்கள் மத்தியில் வன்முறையைத் தடுத்தல்

பிரசித்தமான ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும், முன்னாள் குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் தவறியமையின் நஷ்டம் மேலே விபரிக்கப்பட்டுள்ள சிறைச்சாலை போக்குவரத்து மீதான தாக்குதலினால் அடிக்கோடிடப்படுகின்றது. இச் சம்பவத்தில், பொலிஸ்காரர் ஒருவரும், கைதி ஒருவரும் கொல்லப்பட்டனர்; ஒரு சிரேஷ்ட காவல் உத்தியோகத்தர் காயமடைந்தார். இது அரசாங்கப் பாதுகாவலில் இருந்து முன்னர் விடுவிக்கப்பட்ட நபர்களினால் நடத்தப்பட்டது.[330] ஒழுங்கு செய்யப்பட்ட கோஷ்டிகளில் இழைக்கப்பட்ட ஆயுதபாணியிலான வன்முறையினால் அதிக தொந்தரவைக் கொண்டிருந்த பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட குற்றவாளிகளை பெருமளவு ஆண்டுகளாகப் பொலிஸாருக்கும் தெரியும் என நேர்முகங் காணப்பட்ட ஒருவர் சுட்டிக்காட்டினார்.[331]

நேர்முகங்காணப்பட்ட பெரும்பாலானோரினாலும், நோக்குக் குழு பங்கெடுப்பாளர்களினாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு ஹம்பாந்தோட்டை மக்கள் முகங்கொடுக்கும் முக்கியமான சமூகப் பிரச்சனையும், ஆயுதபாணியிலான வன்முறைக்கு அடிப்படைக் காரணமும் கல்வியும், பயிற்சியும், வாழ்வதற்கு சம்பாதிப்பதற்கான வாய்ப்புக்களும் இன்மையே ஆகும்.[332] சுடுகலன்களினாலான மரணத்திற்கும், காயத்திற்கும் பாதிக்கப்படுபவர்கள் 'எப்பொழுதுமே மிக வறியவர்கள் என்பதுடன், குறைந்த படிப்பறிவைக் கொண்ட மக்கள்' என ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் வைத்து உத்தியோகத்தர் ஒருவர் உறுதிபடத் தெரிவித்தார்.[333]

இப்பிரச்சினைகள் உட்கட்டமைப்பினதும், சேவைகளினதும் இன்மைக்கும், மக்கள் தம்மைச் சுற்றியுள்ள செல்லுநிலையை அடைவதற்கு அவர்களுக்கான சமமான வாய்ப்புக்கள் இன்மைக்கும் தொடர்பானது என தொழில் முன்னிலைப் பயிற்சியினதும், வியாபார முன்னேற்றத்தினதும் மீது கருத்திட்டங்களை நடத்துகின்ற வர்த்தகச் சபையைச் சேர்ந்த

---

[327] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஹம்பாந்தோட்டை மக்கள் வங்கி சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[328] அதேவாறு
[329] அதேவாறு
[330] 2006 மே 16இல் தங்காலை சிறைச்சாலை பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[331] 2006 மே 16இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[332] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடனும், 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடனும், 2006 மே 24இல் ஹம்பாந்தோட்டை விவசாயப் பிரதிநிதியுடனும், 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபை பிரதிநிதியுடனும், 2006 மே 25இல் திஸ்ஸமஹரமவில் சந்தேகிக்கப்படும் சுடுகலன் தயாரிப்பாளருடனும் நேர்முகங்காணல்கள். நகரப் பெண்களுடனும், சிறுபான்மையினர்களுடனும், கிராமியப் ஆண்களுடனும், வியாபார சனசமூகத்தினருடனும் நோக்குக் குழுக் கருத்துப்பரிமாறல்.
[333] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

நேர்முகங்காணப்பட்ட பிரதிநிதி விவரித்தார்.[334] இளம் வயதினருக்கு அதிக சந்தை முன்னேற்றமும், வாய்ப்புக்களும் இன்றி, மாவட்டத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் செயற்பாடு நீண்ட காலம் தொடரும் என எதிர்வுகூறியதுடன், சமத்துவமின்மையினால் மனக்கசப்படைந்துள்ள மூர்க்கத்தனமான ஆதரவாளர்களை ஒன்றுதிரட்டுவதற்கு (ஜே.வி.பி. கிளர்ச்சியைப் போன்று) அரசியல் இயக்கங்களுக்கான ஆற்றலளவை அவர் குறைத்து மதிப்பிடவில்லை.[335] மாவட்டத்தில் ஆயுதபாணியிலான வன்முறையின் சமூகக் காரணிகளைத் தீர்த்துக் கொள்வதற்கான நீண்டகால முன்னுரிமைத் துறைகளாக கல்வி, விசேடமாக பல்கலைக்கழக இடங்கள், பயிற்சி, தொழிலை உருவாக்குதல், இயலத்தக்க வியாபாரச் சூழலொன்றினுள் வியாபார முயற்சிக்கான ஆதரவு மற்றும் சனசமூக முன்னேற்றம் ஆகியனவாக விளங்குகின்றன.[336] இத்தகைய நடவடிக்கைகள் மூலம், மூர்க்கத்தனமான இளம் வயதினருக்கு புதிய ஆரம்பமொன்றை வழங்க முடியும்.[337] நோக்குக் குழு கருத்துப் பரிமாறல்களில் இதே வகையான சிபார்சுகள் தோன்றின.[338]

எனினும், சலுகைகளைக் கொண்டிருப்பதற்கான அடைதலையும், சக்திமிக்க நண்பர்களின் பாதுகாப்பையும் குற்றவாளிகள் கொண்டுள்ள அதே வேளை, சட்டபூர்வமான பணிக்கான வாய்ப்புக்களை உருவாக்குதல் அவர்களது வாழ்க்கை முறையின் தெரிவில் மாற்றத்திற்கு சிறிதளவையே செய்யும் என ஏனையோர் எச்சரிக்கை விடுத்தனர்.[339] ஆதலினால், குற்றவியல் நடத்தை கண்காணிக்கப்படுவதுடன், அது சகித்துக் கொள்ளப்படமாட்டாது என்ற தெளிவான எச்சரிக்கையொன்றை அவர்கள் கண்டறிந்து அது வழங்கப்படுவதாகவே இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களைத் தோதான முறையில் கையாள்வதன் முதலாவது அம்சமாகும் என மாவட்டத்தில் அபிவிருத்தி மீது பணியாற்றும் சிரேஷ்ட, அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் உறுதியாகக் குறிப்பிட்டார்.[340] இந்த திடமான அணுகுமுறையுடன் இழுபறிப்படுவதிலும், தொழிலை உருவாக்குவதிலும், தொழில்முன்னிலைப் பயிற்சியிலும், வியாபார முயற்சி ஆதரவிலும அடிப்படையைக் கொண்ட பொருளாதார ஒன்றிணைப்பு அதிகளவு ஆற்றலளவைக் கொண்டிருந்ததாகக் கருதப்படுகின்றது. ஏனெனில், பெருமளவு சம்பவங்களில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் பிரச்சினை நடத்தைகளை பணத்திற்கான அவசியம் கீழ்கோடிடப்பட்டுள்ளது.[341] தேசிய மட்டத்தில், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் உட்பட முன்னாள் போராளிகளை மீள் ஒன்றிணைப்பது மனித உரிமைகள், அழிவு முகாமைத்துவ அமைச்சின் நிகழ்ச்சி நிரலில் உள்ளதுடன், வேறு நாடுகளில் அனுபவங்களை ஈர்த்தெடுத்து, இப்பகுதியில் ஏதாவது அரசாங்க முன்னெடுப்புக்களை அமுல்படுத்துவதில் உதவியளிப்பதற்கு இணக்கமுள்ள சர்வதேச பங்காளி முகவராண்மைகளும் உள்ளன.[342]

## மன்னிப்பும், பொறுப்பெடுத்தலும்

1989இல் உத்தரவுப்பத்திரம் பெற்ற சுடுகலன்களைப் பொறுப்பெடுத்தல் மாவட்டத்தில் கணிசமானளவு சுடுகலன்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளதாகத் தோன்றுகின்றது (மாவட்டச் செயலகத்தில் முன்னாள் உத்தரவுப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தரின் படி 1,000 ஆயுதங்களுக்கு மேல்)[343] 2004இல், தேசிய மட்டத்தில் இரு ஆயுதங்கள் பொறுப்பெடுத்தல் முன்னெடுப்புக்கள் நடத்தப்பட்டதுடன், ஆனால், இது மட்டுப்படுத்தப்பட்ட

---

[334] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை வர்த்தகச் சபை பிரதிநிதியொருவருடன் நேர்முகங்காணல்.
[335] அதேவாறு
[336] அதேவாறு
[337] அதேவாறு
[338] நகரப் பெண்களுடனும், கிராமியப் பெண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[339] 2006 மே 25இல் தென் மாகாண கிராமிய பொருளாதார முன்னேற்றத் திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல். நகரப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[340] 2006 மே 25இல் தென் மாகாண கிராமிய பொருளாதார முன்னேற்றத் திட்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[341] அதேவாறு
[342] 2006 ஜுன் 06இல் சர்வதேச தொழில் தாபன சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[343] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் சுடுகலன்கள் உத்தரவுப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல். கிராமிய ஆண்களுடனான நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறலில் குறைப்பினை கணிசமானது என பங்கெடுப்பாளர்கள் நினைவுபடுத்தினர்.

வெற்றியையே அடைந்தது. 2004 பொறுப்பெடுத்தல் பற்றி நகர ஆண் நோக்குக் குழுப் பங்கெடுப்பாளர்கள் கேள்விப்படவேயில்லை.[344] முன்னைய முன்னெடுப்புக்கள் அதிக குறிப்பிடத்தக்க விளைவுகளைச் சாதிக்கவில்லை என்பதற்கான முக்கியமான காரணங்களை பொறுப்பான முகவராண்மைகளில் நம்பிக்கையீனமும், பாதுகாப்பின்மையுமே என வேறு நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் சுட்டிச் சொன்னார்கள்.[345] எனினும், சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருப்பதைக் குறைப்பதற்கு எதிர்கால மன்னிப்பு முன்னெடுப்புக்கான பலமான விடாமுயற்சியையே நகர ஆண்களும், கிராமிய மற்றும் நகரப் பெண்களும் வெளிப்படுத்தினர்.[346] இத்தகைய விடயமொன்றில் தாம் பொலிஸாரை நம்பவில்லை என்பதனால் அது சுதந்திரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என இரு குழுக்களும் வலியுறுத்தின.[347]

சட்டவிரோதமான ஆயுதங்களைப் பொறுப்பெடுப்பதற்கான மன்னிப்புச் செய்திட்டமொன்றை தங்காலைப் பிரிவுக்கான சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பரிந்துரைத்த போதிலும்,[348] குற்றவாளிகளின் ஆயுதங்களை மீட்பிப்பது கஷ்டமாகவிருந்ததுடன், தொடர்ந்தும் கஷ்டமாக இருக்கும் என பெருமளவு மக்கள் ஏற்றுக்கொண்டனர்.[349] ஆயுதங்களை வைத்திருப்பதில் கீழ்தொக்கியுள்ள பாதுகாப்பின்மையினதும்[350], வேறு சமூகப் பிரச்சினைகளினதும் உணர்வினை கவனத்திற்கு எடுக்காமல் ஆயுதங்களை கைவிடுவதற்கு மக்கள் விரும்பமாட்டார்கள் என ஏனைய நோக்குக் குழுக்கள் சுட்டிக்காட்டின.[351] குறிப்பாக பொலிஸாரிலும், வேறு அரசாங்க நிறுவனங்களிலும் நம்பிக்கையை முன்கூட்டியே சரிக்கட்டாமல், வெகுமதி அடிப்படையிலான செய்திட்டம் கூட வெற்றியளிக்காது என கிராமவாசிகள் குறிப்பிட்டனர். அத்துடன் நிலைமை எப்படி இருந்தாலும் பொலிஸாரினால் பொறுப்பேற்றல் நடவடிக்கைகள் நிருவகிக்கப்பட்டால், ஆயுதங்களை மக்கள் கையளிக்கமாட்டார்கள் என அவர் சொன்னார்.[352]

வனத் திணைக்களத்தினதும், வனவாழ்வுத் திணைக்களத்தினதும் உத்தியோகத்தர்களை ஆயுதபாணியிலாக பயமுறுத்துதல் போன்ற ஒழுங்கு செய்யப்பட்ட குற்றத்திற்கு, குறிப்பாக, மாவட்டத்தின் பகுதிகளில் எச்சரிக்கையூட்டும் விதத்தில் அடிக்கடி காயங்களை விளைவிக்கும் பொறித் துப்பாக்கிகளின் உபயோகத்திற்கு தொடர்பற்ற அபாயகரமான சிறு ஆயுத, இலகு ஆயுத உபயோகத்தை ஒழிப்பது மீது எதிர்கால பொதுசன இயக்கங்கள் நோக்கினைக் கொண்டிருக்க முடியும். வாய்ப்புக்களுக்கும், வன்முறைக்கும் அடைதல் இன்மைக்கு இடையிலான தொடர்பு பாதுகாப்பற்ற பகுதிகளில் அபிவிருத்திப் பணி மீது நோக்கினைக் கொண்டிருப்பதற்கான அவசியத்தைச் சுட்டிச் சொல்கின்றது.[353] இது சட்டவிரோதமான ஆயுதங்களின் கையளிப்புக்கான நேரடி வெகுமதியை அல்லது அதிகம் பொதுவானதொரு இலக்குப்படுத்தப்பட்ட சனசமூக அபிவிருத்தி முன்னெடுப்புகள் ஊடாக பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பங்கெடுப்பு அணுகுமுறையை சமுதாயங்களுக்கு வழங்குவதை சம்பந்தப்படுத்தலாம்.

---

[344] நகர ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[345] சிறுபான்மையினருடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[346] நகர ஆண்களுடனும், நகரப் பெண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[347] அதேவாறு

[348] 2006 மே 16 மற்றும் 19இல் தங்காலை பிரிவு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[349] நகரப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[350] சிறுபான்மையினருடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[351] கிராமிய ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[352] அதேவாறு

[353] சிறுபான்மையினர்களுடனான நோக்குக் குழு கருத்துப் பரிமாறலிலிருந்து இப் பகுப்பாய்வு தோன்றியது. தமது துப்பாக்கிகளின் எண்ணிக்கைகள் குறைக்கப்படுவதென்றால் துப்பாக்கி உரிமைத்துவத்தினால் வழங்கப்படும் முன்னுணர்விலான பாதுகாப்பிற்கும், நன்மைக்குமான பதிலீடு ஒன்றுக்கான அவசியம் பற்றி சிறுபான்மையினர் விரைவிலேயே புரிந்து கொள்ளும் சக்தியைக் கொண்டிருக்கிறார்கள்.

### விழிப்பியலும், கல்வியும்

பொம்மைத் துப்பாக்கிகளுக்கான சிறுவர்களின் கோரிக்கைக்கும், வெளிநாட்டுச் சினிமாப்படங்களின் செல்வாக்கின் காரணமாக யுத்தவீரர்கள் போன்று விளையாடுவதில் உள்ள அவர்களது அக்கறைக்கும் அளவீட்டுக் குழாமின் கவனத்தை நகர மற்றும் கிராமிய ஆண்களும், பெண்களும் ஈர்த்தெடுத்தனர்.[354] சகல வயதுகளிலும் பாடவிதானம் முழுவதும் வன்முறையற்ற கல்வியின் சார்பாக கிராமிய ஆண்கள் வாதம்புரிந்தனர்.[355]

மாவட்டத்தில் 100 பெண்கள் உட்பட தேசிய சாரணர் படையில் 900க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.[356] 14-20 வயதுக்குட்பட்ட இளம் வயதினருக்கு தேகாப்பியாசம், ஒழுக்காறு, பயிற்சி மற்றும் நகரத்திற்குரிய பொறுப்புக்கள், சட்டங்கள் மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றுக்கான அறிமுகம் ஆகியவற்றை தேசிய சாரணர் படை அளிக்கின்றது.[357] இராணுவத்திலிருந்து வழக்கொழிந்த 303 துப்பாக்கியைப் பயன்படுத்தி தேகாப்பியாசம் செய்வதற்கு பயிலுனர்கள் பயிற்றுவிக்கப்படுவதுடன், பயிலுனர் பயிற்சி முகாமொன்றுக்கு அவர்கள் விஜயம் செய்தால் துப்பாக்கிகளைச் சுடுவதற்கான வாய்ப்பொன்றையும் கொண்டிருப்பார்கள்.[358] நகரத்திற்குரிய பொறுப்பு மீதான வலியுறுத்தலினதும், நிவாரணம் மற்றும் சமூகப் பணியில்[359] பயிலுனர் படையில் குறிப்பிடத்தக்க சம்பந்தத்தினதும் மீது வலியுறுத்தல், சமூகத்திற்கு சந்தேகத்திற்கு இடமற்ற சொத்தாக உள்ள அதே வேளை, ஆயுதங்களுடனும், இராணுவக் கலாசாரத்துடனும் சிறுவர்களை பரீச்சயமாக்குதல் நீண்ட கால அடிப்படையில் அமைதியானதும், சட்டத்திற்கு கட்டுப்படுவதுமான பிரஜைகளாக விளங்குவதை மேம்படுத்துவதற்கான சிறந்த வழியல்ல.[360]

சிறு ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் தொடர்பிலான பிரச்சினைகளைக் குறைப்பதற்காக பொறுப்பேற்கப்படவுள்ள விழிப்பியலை உயர்த்துவதில் நகரப் பெண்கள், கிராமிய ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் நோக்குக் குழுக்களில் உள்ள பங்கெடுப்பாளர்கள் ஆர்வம் காட்டினார்கள்.[361] பகுதியில் சமூக முன்னெடுப்புகளில் பெண்களே ஆரம்பநிலைச் செயற்பாட்டாளர்களாவர் என நகரப் பெணகள் குறிப்பிட்டனர். அத்துடன், சுடுகலன்களின் துஷ்பிரயோகத்திற்கு எதிராக ஏதாவது இயக்கத்தில் ஒத்துழைப்பதற்கு அடிமட்ட பெண்கள் தாபனங்கள் தொடர்ந்துமிருப்பதற்கான கவனத்தைக் கிராமியப் பெண்கள் ஈர்த்தெடுத்தனர்.[362] ஆண் நடத்தையில் ஆதிக்கம் செலுத்துவதற்கு முயலுகையில் அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை நோக்குக் குழு பங்கெடுப்பாளர்கள் சுட்டிக்காட்டிய போதிலும், ஏதாவது எதிர்கால பொதுசன விழிப்பியலுக்கு உதவுவதில் பெண்களுக்கான உத்தேசமான வகிபங்கினை இது சுட்டிச் சொல்கின்றது.[363]

---

[354] நகரப் பெண்களுடனும், நகர ஆண்களுடனும், கிராமியப் பெண்களுடனும், கிராமிய ஆண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[355] கிராமிய ஆண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

[356] 2006 மே 23இல் தங்காலை தேசிய சாரணர் இயக்கப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

[357] அதேவாறு

[358] அதேவாறு

[359] அதேவாறு

[360] ஒ.்.ப் குரக் இ, கஹல்பேர்க் எல். மேர்ஸி ஜே. ஸிவி, எ. லொஸானோ ஆர் (பதிப்பு), World report on Violence and health (ஜெனீவா, உலக சுகாதார தாபனம், 2002), பக்கம் 43 'துப்பாக்கிகளின் பாதுகாப்பான உபயோகத்தில் பயிற்சி மற்றும் அடிப்படை இராணுவப் பயிற்சி மீது மாதிரிப்படுத்தப்பட்ட செய்திட்டங்கள்' ஆகிய இரண்டுமே 'இளைஞர் வன்முறையைக் குறைப்பதில் அல்லது இளைஞர் வன்முறைக்கான ஆபத்துக் காரணிகளில் செயற்றிறனற்றவையாக காட்டப்படுகின்றன' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[361] நகரப் பெண்களுடனும், கிராமியப் பெண்களுடனும், கிராமிய ஆண்களுடனும் மற்றும் சிறுபான்மையினருடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்

[362] நகரப் பெண்களுடனும், கிராமியப் பெண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்

[363] நகரப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்

### சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள்

உள்ளூர் மட்டத்தில் வன்முறையைத் தடுப்பதற்கு மாவட்ட மட்ட சிவில் சமூகத் தாபனங்கள் பணியாற்றுகின்றன என NCAPISAஇன் சிவில் சமூக உறுப்பொன்றான சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) என்ற தேர்தலைக் கண்காணிக்கும் அ.சா.தாபனத்தின் சிரேஷ்ட பிரதிநிதியொருவர் குறிப்பிட்டார். 2005 நொவம்பர் தேர்தலில் தேர்தல் தொகுதி வன்முறையைக் குறைக்க நாடுபூராவிலுமான முயற்சியொன்றின் அங்கமாக PAFFRELஇன் உள்ளூர் தீவிரபோக்கானவர்களினால் ஹம்பாந்தோட்டையினுள் அண்மைய 'ரவை இன்றி வாக்கு' என்ற இயக்கம் மேம்படுத்தப்பட்டது.[364]

ஆயுத வன்முறை மீதான தகவலின் முக்கியமானதொரு மூலத்தையும், ஜனநாயகத்தினதும், சிறந்த ஆட்சியினதும் மீது அதன் மேலும் நேரடியான தாக்கங்களின் ஒன்றை வழங்கி தேர்தல்களில் துப்பாக்கிச் சம்பவங்களின் மட்டம் மீது தகவலை PAFFREL திரட்டுகின்றது.[365] சுடுகலன்களினாலான சம்பவங்களை பாகங்களாகப் பகுத்தல் உட்பட விபரமான புள்ளிவிபரங்கள் தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால் (CMEV) தேர்தல் மீது தயாரிக்கப்படும் அறிக்கைகளில் வழங்கப்படுகின்றன. வழங்கப்பட்ட விபரத்தின் மட்டமும், கடந்த ஐந்து வருடங்களுக்கு அறிக்கைகளின் தரவுகளுக்கான நியம தளக்கோளமும் கடந்து போன ஆண்டுகளில் தேர்தல் வன்முறையில் போக்குகளை அவதானிப்பதற்கு CMEV அறிக்கைகளை மிகவும் பயனுள்ளதாக்குகின்றது.

இலங்கையில் சேபர்வோல்ட்டும், பங்காளிகளும் நடத்திய சிறு ஆயுதங்கள் மீதான முதலாவது பயிற்சியில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து பங்கெடுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இது சிறு ஆயுதங்களின் பிரச்சினை, செயற்பாடுகளைத் திட்டமிடுதல், பரிந்துரைத்தல் மற்றும் பிரச்சாரம் ஆகியவற்றுக்கான முழுமையான அறிமுகத்தை உள்ளடக்கியிருந்தது.[366]

சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருப்பதைக் குறைப்பதற்கு மன்னிப்புத் திட்டம் அல்லது வேறு முன்னெடுப்புகள் நடத்தப்பட்டால், ஆயுதங்களைப் பதிவு செய்வதன் பாதகாப்பையிட்டு சட்டவிரோதமான உரிமையாளர்களை இணங்கவைப்பதற்கு உள்ளூரில் நம்பிக்கையான தாபனங்களைச் சம்பந்தப்படுத்தும் ஒருமுகப்படுத்தப்பட்ட விழிப்பியல் இயக்கமொன்று[367] அவசியமாகும் என நோக்குக் குழுப் பங்கெடுப்பாளர்கள் சுட்டிக்காட்டினார்கள்.[368] சனசமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதில் சனசமூகத் தாபனங்கள் ஆற்றக்கூடிய வகிபங்கினையும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.[369]

### ஊடகங்களின் வகிபங்கு

குற்றங்கள் மீதான அறிக்கைகள் சர்வசாதாரணமாக விளங்குகின்ற அதே வேளை, பொதுவாகவே சுடுகலன்கள் சம்பவங்கள் சிறிதளவே செய்தியாக்கப்படுகின்றன என்ற பிரச்சினையை இந்த அளவீட்டுக்காக நடத்தப்பட்ட ஊடகப் பகுப்பாய்வு எழுப்பியுள்ளது. சுடுகலன்கள் தொடர்பிலான வழக்குகளுக்கான தண்டனையை செய்தியாக்கும் போது, அது சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் சட்டவிரோதமாக வைத்திருத்தல், அவற்றை துஷ்பிரயோகம் செய்தல் ஆகியன பற்றிய சட்டத்தையும், அபராதங்களையும் இட்டு பொதுசன விழிப்பியல் மீதான தாக்கமொன்றைக் கொண்டிருக்க முடியும் என குறிப்பிடப்பட்டது. சுடுகலன்களினாலான கொலைகள், பறிமுதல்கள் மற்றும் அரசாங்கப்

---

[364] 2006 மே 09இல் PAFFREL சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[365] அதேவாறு
[366] அதேவாறு
[367] சிறுபான்மையினருடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[368] நகரப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
[369] நகரப் பெண்களுடனும், கிராமியப் பெண்களுடனும் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.

பகுப்பாய்வாளருக்கான தடயப் பொருட்கள் ஆகியனவற்றைப் பொறுத்தளவில், நாட்டின் ஏனைய பெருமளவு பகுதிகளை விட சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் பிரச்சினைகளினால் அதிகளவு சவால்விடுப்பதற்கு ஹம்பாந்தோட்டை உயர்வான நிலையில் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. எனினும், மேற்கோளின் கீழுள்ள ஒரு வருட காலத்தின் போது ஆறு செய்திப்பத்திரிகைகளிலிருந்து அடையாளம் காணப்பட்ட நாடுபூராவிலுமான சிறு ஆயுதங்களுக்கும், இலகு ஆயுதங்களுக்கும் தொடர்பான 1,111 கட்டுரைகளைக் கொண்ட மொத்தத் தொகையில் மூன்று சதவீதத்திற்கு குறைவானதே ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு தொடர்பினைக் கொண்டிருந்தது. கட்டுரைகளின் எண்ணிக்கை மட்டுமன்றி, ஆனால் செய்திப்பத்திரிகைகள், அவை அமைந்திருந்த இடம் (மூன்று செய்திகள் மட்டும் முன்பக்கத்தில் தோன்றியிருந்தன) பொதுசன விவாதத்தில் சுடுகலன்களின் பிரச்சினை மட்டுப்படுத்தப்பட்ட முக்கியத்தையே சுட்டிக்காட்டுகின்றது என்பது தெளிவானதாகும்.

பகுப்பாயப்பட்ட காலத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறு ஆயுதங்கள் தொடர்பிலான பிரச்சினைகளையிட்டு செய்தி வெளியிடப்படாமையானது இலங்கையின் வடக்கு, கிழக்கில் நிலவிய சூழ்நிலையையும், சமாதான நடைமுறையையும், ஜனாதிபதி தேர்தலையும், வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலையையும் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை ஓரளவுக்கு காரணமாகக் காட்டப்பட முடியும். ஹம்பாந்தோட்டையில் தளத்தைக் கொண்ட பயில்திறனிலான பிராந்திய நிருபர்கள் இல்லாமையும், அங்கு சிறு ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் பற்றி பிரச்சினை மீது அறிக்கைகள் இன்மையும் காரணமாக இருக்கலாம். சிறு ஆயுதங்கள், மற்றும் குற்றம் மீது அறிக்கையிடுவதில் பிராந்திய நிருபர்களுக்கு பயிற்சி அளிக்கும் போது, அது அவர்களது பயில்திறன்களை உயர்த்தும் சிறந்த வேதனத்திற்கு இட்டுச் செல்லும், அதேவேளை சிறு ஆயுதங்கள், இலகு ஆயுதங்கள் பற்றிய அதிகளவு உருப்படியான செய்தி உள்ளடக்கப் பரப்பு பாரிய தொகையளவு தோன்றும் என எதிர்பார்க்கப்பட முடியும். அளவீட்டினால் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைக் குழுக்களுடன் முயற்சிக்கப்படும் ஏதாவது விழிப்பியல் இயக்கங்களின் முக்கியமான அம்சமொன்றாக இது விளங்கும்.

### உத்தரவுப்பத்திரம் வழங்குதல்

1989இன் பின்னர் (இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சியின் முடிவில்) புதிய உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டதுடன், உத்தரவுப்பத்திரங்களைக் கொண்ட ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டன. 1997 வரை உத்தரவுப்பத்திரம் வழங்குதல் மீள் ஆரம்பிக்கப்படவில்லை.[370]

1997 முதல் வங்கிகளுக்கும், பயிர் பாதுகாப்புக்காகவும், விலங்கு வேளாண்மைக்காகவும் தனிப்பட்டவர்களுக்கும் அரசாங்க அதிபரின் அலுவலகம் உத்தரவுப்பத்திரங்களை வழங்குவதற்கு இயலுமாகவிருந்தது. சுய பாதுகாப்புக்கும், விளையாட்டுச் சுடுதல் ஆயுதங்களுக்கும் தேசிய மட்டத்தில் உத்தரவுப்பத்திரம் வழங்கப்படுகின்றது.[371]

பயிர் பாதுகாப்புக்கு உத்தரவுப்பத்திரமொன்றைப் பெறுவதற்கு, உத்தரவுப்பத்திரப் பெறுனர் 5க்கு மேற்பட்ட ஏக்கர்களைக் கொண்ட காணியை உரிமையாகக் கொண்டிருக்க வேண்டும்.[372] பயிர் பாதுகாப்பு உத்தரவுப்பத்திரமொன்றுக்கு தனிப்பட்ட உத்தரவுப்பத்திர விண்ணப்பதாரி ஒருவரின் அவசியத்தையிட்டு பிரிவில் உள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சரிபார்க்கும் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.[373] விலங்கு வேளாண்மைக்கு உத்தரவுப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு, பகுதிக்கான

---

[370] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகப் பிரதிநிதியுடனும், 2006 மே 30இல் MoDPSLO சிரேஷ்ட உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.

[371] அதேவாறு

[372] அதேவாறு

[373] 2006 மே 24இல் ஹம்பாந்தோட்டை விவசாயப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

மிருக உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் அரசாங்க மிருக வைத்திய நிபுணர் அங்கீகாரக் கடிதமொன்றை வழங்க வேண்டும்.[374] சுய-பாதுகாப்புக்கு உத்தரவுப்பத்திரம் பெற விரும்புபவர் குறிப்பிட்ட வரையறைக்கு மேலாக வருடாந்த வருமானத்தைக் கொண்டிருக்க வேண்டும்.[375] குற்றவியல் பதிவுகளுடனான தனிப்பட்டவர்களுக்கு உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.[376] முன்னைய ஆயுதங்கள் உரித்துடமையினதும், தனிப்பட்டவரினால் மீளளிக்கப்பட்டமையினதும் மீது பரிசீலனை ஒன்றை உத்தரவுப்பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் உள்ளடக்கும் (தற்போது ஆயுதமொன்று அனுமதிக்கப்படுவதற்கு 1989இன் பின்னர் ஏதாவது முன்னாள் ஆயுதங்களை விண்ணப்பதாரிகள் மீளளித்திருக்க வேண்டும்).[377] ஆயுதமொன்றுக்கான முன்னைய உத்தரவுப்பத்திரம் காலாவதியாகிய காலமொன்று இருக்கும் சந்தர்ப்பங்களில், புதிய விண்ணப்ப நடைமுறைகள் அதுக்கு ஏற்புடையதாகும்.[378]

மாவட்டச் செயலகத்தில் உத்தரவுப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் அங்கீகாரத்திற்காக MODPSLOக்கு அனுப்பப்படுவதற்கு முன், விண்ணப்பதாரி பற்றி பொலிஸார் பரிசீலனை செய்வார்கள்.[379] சுடுகலன்களுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் மாவட்டச் செயலகத்தில் ஆயுதக் கிடங்கிலிருந்து ஆயுதங்களை வாங்கலாம் என்பதே முன்னைய நடைமுறையாகும்.[380] 1987இன் பின்னர் மாவட்டச் செயலகத்தில் உள்ள ஆயுதக் கிடங்கிலிருந்து ஆயுதங்களின் விற்பனை இடைநிறுத்தப்பட்டமை பாராட்டுக்குரியதே.[381] தமது உத்தரவுப்பத்திர விண்ணப்பத்திற்கு அங்கீகாரத்தைப் பெற்றவர்கள் ஒன்றில் ஏற்கனவே உத்தரவுப்பத்திரம் பெற்றவரிடமிருந்து கைமாற்றப்படுவதன் மூலம் ஆயுதத்தைப் பெற வேண்டும் அல்லது சிறு ஆயுதங்கள், ரவைகள் கொள்வனவு அலகிலிருந்து தமது புதிய ஆயுதத்தை வாங்க வேண்டும்.[382] ஆயுதங்களுக்கான அடைதலைக் கட்டுப்படுத்தும் கருத்து நோக்கிலிருந்து, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட சுடுகலன் வணிகர்கள் இல்லை என்பது உற்சாகமூட்டக்கூடியதாகும். உள்ளூர் வணிகர்களினால் விநியோகிக்கப்படும் ரவைகள் வணிகர்கள் தாமாகவே வைத்திருப்பதை விட உள்ளூர் பொலிஸாரினால் தக்கவைக்கப்பட்டிருப்பது ஊக்கமளிப்பதாகும்.[383]

ஒவ்வொரு ஆண்டின் முதல் பாதியின் போது 20 சுற்று ரவைகளையும், இரண்டாவது பாதியின் போது 20 சுற்றுக்களையும் வாங்குவதற்கு உத்தரவுப்பத்திரம் பெற்றவர்கள் உரித்துடையவர்களாவர்.[384] புதிய ரவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ரவைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை உத்தரவுப்பத்திரம் பெற்றவர்கள் நிரூபிப்பதற்கு அவசியமில்லை என உள்ளூர் மட்டத்தில் குறிப்பிடப்பட்டது.[385] எனினும், தேசிய மட்டத்தில், புதிய ரவைகளைக் கொள்வனவு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட ரவைகளை உத்தரவுப்பத்திரம் பெற்றவர்கள் சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. உண்மைநிலை என்னவாக இருந்தாலும், 'கல்கட்டாஸ்' உரிமையாளர்களினால் புதியதும், மீள்நிரப்பப்பட்டதுமான ரவைகளின் உபயோகத்தை வழங்குகையில், வெற்று ரவைகளின் சேகரிப்பும், அழிப்பும் புதிய ரவைகளின் கொள்வனவுக்கு கடுமையாகப் பிரயோகிக்கப்படுவது விரும்பத்தக்கதாகும்.

---

[374] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[375] அதேவாறு
[376] அதேவாறு
[377] அதேவாறு
[378] அதேவாறு
[379] அதேவாறு
[380] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் சுடுகலன் உத்தரவுப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[381] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[382] அதேவாறு, 2006 மே 15
[383] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னாள் சுடுகலன் உத்தரவுப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[384] 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[385] அதேவாறு

ஒவ்வொரு ஒக்ரோபரிலும், புதுப்பித்தலுக்கு உரிய உத்தரவுப்பத்திரங்கள் பற்றிய அறிவித்தலொன்று செய்திப்பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.[386] பின்னர் அரசாங்க அதிபரிடமிருந்து விண்ணப்பபத்திரமொன்றை உத்தரவுப்பத்திரத்தைப் பெற்றவர்கள் பெற்று, தங்காலையில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அதைச் சமர்ப்பிக்க வேண்டும்.[387] விண்ணப்பதாரியின் விலாசம் அமைந்துள்ள பகுதியை அடக்கும் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு அது திரும்பி வரும்.[388] ஆயுதத்தைப் பரிசீலிப்பதற்காக உத்தியோகத்தர் ஒருவரை பொலிஸ் நிலையம் அனுப்பி வைக்கின்றது. ஆயுதங்கள் எந்த நிலைமையின் கீழ் களஞ்சியப்படுத்தப்படுகின்றன என்பதைப் பரிசீலிப்பது பொலிஸாரின் கடமையாகும். அவதானிப்புகள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு செல்வதுடன். அவர் விண்ணப்பதாரியின் வயதையும், குற்றவியல் பதிவினையும் சரிபார்ப்பதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளார்.[389] விண்ணப்பத்தில் குறிப்பொன்றை இடும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அதை அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கின்றார்.[390] பின்னர் அரசாங்க அதிபரும், MODPSLOஇல் உள்ள பொறுப்பான உத்தியோகத்தரும் உத்தரவுப்பத்திரத்தின் புதுப்பித்தலை அங்கீகரிக்கின்றனர்.[391] புதுப்பித்தலுக்கான கட்டணம் 100 ரூபாவாகும். புதுப்பித்தல் விண்ணப்பங்களைத் தாமதமாக சமர்ப்பிப்பதற்கான அபராதம் (டிசம்பர் 31இன் பின்னர் விண்ணப்பங்கள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை அடையும் போது) 100 ரூபாவாகும்.[392] உத்தரவுப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு தவறுவதற்கு எதிரான அதிக நம்பகமான ஊக்கங்கெடுத்தலை வழங்குவதற்காக சுடுகலன் உத்தரவுப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு தவறுவதற்கான அபராதம் உயர்த்தப்பட வேண்டும் என்பது ஆலோசனைக்குரியதாகும். சிக்கலற்ற விடயங்கள் புறநீங்கலாக நடைமுறை ஒரு மாதத்தை எடுக்கும். சில விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. ஏனெனில், தாபிக்கப்பட்ட மூலப்பிரமாணத்தை நிறைவேற்றாத விண்ணப்பங்கள் ஆரம்பக் கட்டத்தில் அரசாங்க அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.[393]

உத்தரவுப்பத்திரமொன்றுக்கு யாரேனும் ஒருவர் தகுதியற்றவராக வரும்பட்சத்தில், அவர் தமது நெருங்கிய உறவினருக்கு தனது ஆயுதத்தை கைமாற்றுவதைக் கோர முடியும் என்பதுடன், அந்த நெருங்கிய உறவினர் உத்தரவுப்பத்திரமொன்றுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.[394] சுடுகலன் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாமலும், உரித்துரிமையில் கைமாற்றம் செய்யப்படாமலும் இருக்கும் பட்சத்தில், மாவட்ட செயலகத்தில் உள்ள ஆயுதக் கிடங்கில் சுடுகலன் வைக்கப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில், பொலிஸாருக்கு பிரதி ஒன்றை அனுப்பிவைத்தபடி உரிமையாளருக்கு உத்தரவுப்பத்திரம் வழங்கும் உத்தியோகத்தர் கடிதம் எழுதுவார்.[395] பின்னர் உரிமையாளர் தன்பாட்டிலேயே ஆயுதத்தைக் கொண்டு வர வேண்டும்.[396] பெரிதுமே பொலிஸாரிடமிருந்து புதுப்பித்தலைப் பெறுவதற்கு உரிமையாளர் மேன்முறையீடு செய்கின்றார். இல்லாவிடில் அவர் மாவட்டச் செயலகத்தில் உள்ள கணக்காளருக்கு ஆயுதத்தைக் கையளிக்கின்றார்.[397]

தனித்த விண்ணப்பமொன்றை நடைமுறைப்படுத்துவதில் பலதரப்பட்ட தரப்புக்கள் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணமாக, தரப்புக்களுக்கு இடையிலான தகவலின் ஓட்டம் விரைவாகவும், மிகவும் கிரமமாகவும் இருப்பதுடன், ஒருங்கிணைப்பின் முழுமையான மட்டம் திருத்தியமைக்கப்பட முடியுமென்றால் நடைமுறையைத் திருத்தியமைக்க முடியும் எனச் சுட்டிச் சொல்லப்பட்டது. பிரச்சினை பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்கு

[386] அதேவாறு
[387] அதேவாறு
[388] அதேவாறு
[389] அதேவாறு
[390] அதேவாறு
[391] அதேவாறு
[392] அதேவாறு
[393] அதேவாறு
[394] அதேவாறு
[395] அதேவாறு
[396] அதேவாறு
[397] அதேவாறு

தகவளிப்பவர்கள் தயங்கிய போதிலும், சுடுகலன் உத்தரவுப்பத்திரங்களைப் பெறுவதற்கு தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கு மக்கள் முயற்சிப்பதாகக் கவனத்திற்கு எடுக்கப்பட்டது.

தேசிய மட்டத்தில் ஆயுதங்களுக்கு உத்தரவுப்பத்திரம் பெறுவதற்கான முறைமை அதிக கடுமையாக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் மட்டத்தில் குறிப்பிடப்பட்டது. மிகச் சில உத்தரவுப்பத்திரங்களே முன்னரை விட தற்போதைய நிருவாகத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.[398] இது ஓர் உறுதியான சாதனையாக உள்ள அதே வேளை, முறைமையில் கடும்போக்கானது முக்கிய பதவிநிலைகளில் தனிப்பட்டவர்களின் ஆளுமைகளுக்கு அக்கறையின்றி கடும் போக்குக்கு உத்தரவாதமளிக்கும் கட்டமைப்பு மீது என்று இல்லாமல் முக்கிய ஆளுமையின் தற்றுணிபின் மீது தங்கியிருப்பதாக தெரிவது கரிசனைக்குரியதாகும்.[399]

அரசியல்வாதிகளுக்கும், அவர்களது ஆதரவாளர்களுக்கும் ஆயுதங்களை வழங்குவது மீதான மிக அதிகளவு கட்டுப்பாட்டினை நோக்குக் குழுப் பங்கெடுப்பாளர்கள் விதந்துரைத்தார்கள்.[400]

## இருப்பினைச் சேகரிக்கும் முகாமைத்துவமும், அழிப்பும்

மாவட்டச் செயலகத்தில் உள்ள ஆயுதக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களை அழித்தல் MOD PSLOஇனுள் உள்ள குழு எப்பொழுதாவது தீர்மானிக்கும் போதே இடம்பெறுகின்றது.[401] களப்படை தலைமையலுவலகத்தைச் சேர்ந்த பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் அழிக்கப்படுவதற்காக மாவட்டச் செயலகத்தில் உள்ள கணக்காளரிடமிருந்து ஆயுதங்கள் சேகரிக்கப்படுகின்றன.[402] இது அரிதாகவே இடம்பெறுவதுடன், ஆயுதக் கிடங்கில் உள்ள ஆயுதங்கள் அழிப்புக்கு இடையில் ஆகக்கூடுதலான இடைவெளியை குறித்துரைப்பதற்கு நேர காலக்கெடு இல்லை.[403] 30,000க்கு மேற்பட்ட வழக்கொழிந்த சிறு ஆயுதங்களையும், இலகு ஆயுதங்களையும் அழிப்பதற்கான (2005 ஜூலை) பாராட்டத்தக்க தேசிய முன்னெடுப்பின் விளைவாக ஆயுதக் கிடங்கில் இருந்த உடமைகள் இல்லாதொழிந்துள்ள அதே வேளை (தன்னியக்க ஆயுதங்களும், ரவைகளும் இங்கு வைக்கப்படவில்லை),[404] ஆயுதக் கிடங்கில் உள்ள ஆயுதங்கள் அழிக்கப்படுவதற்கு ஆகக்கூடுதலான நேரகாலம் தாபிக்கப்பட்டு, அதன் பின்னரே அழிக்கப்படுவது ஆலோசனைக்குரியதாகும்.

அதன் அமைவிடம், உறுதியான கதவு மற்றும் இரட்டை பூட்டு முறைமை ஆகியன ஆயுதக் கிடங்கை சார்புரீதியில் பாதுகாப்பான களஞ்சிய வசதியாகச் செய்கின்ற போதிலும், கிரமமாக அழிப்பதை உத்தரவாதமளிக்கும் முறைமையொன்று கையாளடலின் அபாயத்தையும், அபாயகரமன ஆயுதங்கள் தேவையற்றவிதமாக ஒன்று திரண்டிருப்பதையும் மேலும் குறைக்கும். கையினாலான பதிவு வைத்திருக்கும் முறைமை 1961 முதல் ஆயுதக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள சகல ஆயுதங்களின் பதிவுகளை அடக்கியுள்ளது.

2005இல் தங்காலை பொலிஸ் பிரிவினால் வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம், கதிர்காமத்திலிருந்து ஒன்று, தங்காலையில் இருந்து ஒன்று என பொலிஸிலிருந்து ரவைத் துப்பாக்கிகள் இரண்டு தொலைந்துள்ளன அல்லது திருடப்பட்டுள்ளன. 2006இல், ஹுங்கமவிலிருந்து ஒரு பிஸ்டல் தொலைந்து போயுள்ளது அல்லது திருடப்பட்டுள்ளது. கடமையின் போது எப்பொழுதுமே பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயுதபாணிகளாக

---

398 அதேவாறு
399 அதேவாறு
400 கிராமியப் பெண்களுடன் நோக்குக் குழுக் கருத்துப் பரிமாறல்.
401 2006 மே 15இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
402 அதேவாறு
403 அதேவாறு
404 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.

இருப்பதில்லை. ஆனால், செயற்பாட்டு தேவையின் அடிப்படையில் மட்டுமே ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன.[405] வீதித் தடைகளை, ரோந்துகளை, மற்றும் திடீர் வேட்டைகளை நடத்துவதற்கும், மிகவும் முக்கியமான நபர்களுக்கும், வங்கிகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்கும் அவர்கள் ஆயுதங்கள் கொண்டு செல்ல முடியும்.[406] பொலிஸாரினால் புத்தகமொன்று பயன்படுத்தபடுவதுடன், அதில் ஆயுதங்களைக் கொண்டு செல்லும் போதும், கொண்டு வரும் போதும் உத்தியோகத்தர் கையொப்பமிட வேண்டும்.[407] உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு குறைந்த பதவிநிலையிலான பொலிஸ் உத்தியோகத்தர் ஆயுதத்தை வீட்டுக்கு கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.[408] ஆயுதமொன்று தொலைந்தாலும், பொல்லாங்கு உறுதிப்படுத்தப்பட்டாலும் உத்தியோகத்தர் தனது தொழிலை இழப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது.[409] சூழ்நிலை உடந்தையாக இருக்காமல், ஆனால் உத்தியோகத்தர் பொறுப்பாகவிருந்தால், அவர் ஆயுதத்தின் ஆகுசெலவை மீளச் செலுத்த வேண்டும்.[410] பொலிஸ் சுடுகலன்களின் இழப்பின் சம்பவங்களை பொலிஸ் உத்தியோகத்தர்களினால் நினைவுபடுத்த முடியவில்லை என்பதுடன், ஆகவே இத்தகைய சம்பவங்களில் எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையின் உதாரணங்களை வழங்கமுடியவில்லை.

ரோந்துகளின், விசேடமாக, திடீர் சோதனைகளின் மற்றும் பல்நாள் செயற்பாடுகளின் போது மேற்கொள்ளப்படுவதற்கு குறிப்பான எண்ணிக்கையிலான ரவைகள் ஒதுக்கப்படுகின்றன.[411] பல்-நாள் செயற்பாடுகளில் உத்தியோகத்தர்களை மீள் ஆயுதபாணியாக்குவதற்கு விசேட விநியோக அலகொன்றுள்ளது.[412] ஒரு முறை துப்பாக்கியினால் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டால் எத்தனை ரவைகள், எங்கு, எப்பொழுது, ஏன் பயன்படுத்தப்பட்டன என்பதைக் காட்டும் அறிக்கையொன்றை அவர் எழுத வேண்டும்.[413] வெற்று ரவைகளுக்கும் அவர் கணக்கு காட்ட வேண்டும்.[414] ரவையின் உபயோகம் பற்றி திருப்திகரமாக விளக்கப்படாவிட்டால், விசாரணையொன்று இருக்கும்.[415] யாரேனும் ஒருவர் கொல்லப்பட்டிருந்தால், நீதிவான் விசாரணையை நடத்துவதற்கான அதே இடத்தில் வெற்று ரவைகளை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் விட்டு வைக்க வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கிறார்கள்.[416] பொலிஸ் திணைக்களமும் தனது விசாரணையை உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் நடத்தும்.[417]

அங்குணுகொலபலஸ்ஸ பொலிஸ் நிலையத்தில், ஒவ்வொரு மாதமும் ஆயுதக் களஞ்சியத்தில் கணக்கெடுப்பு ஒன்று எடுக்கப்படுகின்றது.[418] பொலிஸ் நிலையங்களில் உள்ள ஆயுதக் களஞ்சியங்களின் பாதுகாப்பு ஏனைய சில களஞ்சியங்களை விட சிறப்பானதாக விளங்கியது. ஆயுதக் களஞ்சியங்கள் மிகவும் உறுதியான, இரட்டை பூட்டு கதவுகளினால் பொருத்தப்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலம் பொலிஸ் ஆயுதங்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், பாவனையில் இல்லாத ஆயுதங்கள் ஆயுதக் களஞ்சியத்தினுள் கண்ணுக்கு எட்டாத இடத்தில் கிரமமாக களஞ்சியப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பொலிஸ் உடமைகளில் உள்ள மேன்மிகையான சிறு ஆயுதங்கள் மற்றும் இலகு ஆயுதங்கள் குறித்து அதிக கிரமமாக மதிப்பாயப்பட வேண்டுமென

---

[405] 2006 மே 17இல் அங்குணகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[406] அதேவாறு
[407] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்டப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[408] 2006 மே 17இல் அங்குணகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[409] அதேவாறு
[410] அதேவாறு
[411] அதேவாறு
[412] அதேவாறு
[413] அதேவாறு
[414] அதேவாறு
[415] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலையப் பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[416] 2006 மே 17இல் அங்குணகொலபெலஸ்ஸ பொலிஸ் நிலையப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[417] அதேவாறு
[418] அதேவாறு

விதந்துரைக்கப்படுகின்றது. அதன் ஆயுதக் களஞ்சியம் சப்-மெஷின் துப்பாக்கி ஒன்றைக் கொண்டிருப்பதாகவும், அது மூன்று வருடங்களாக தொடப்படவில்லை எனவும், அது கீழே விழுந்தால் எழுந்தமான விதமாக சுடுவதை ஆரம்பிக்கும் என அச்சம் கொள்ளப்பட்டுள்ளதாகவும் நிலையமொன்று அறிவித்தது. மிகவும் ஆகக் குறைந்த சந்தர்ப்பத்திலும் பிரிவின் கையிருப்பில் உத்தேசமான பாவனையை மேலும் கொண்டிருக்காத .22 துப்பாக்கிகள் இருந்ததாக உத்தியோகத்தர்கள் கருத்து வெளியிட்டார்கள். இன்னொரு நிலையம் சுய திணித்தல் துப்பாக்கிகளைக் கொண்டிருந்ததுடன், இவை 1980களில் இருந்து பயன்படுத்தப்படவில்லை. பொலிஸ் நிலையத்தில் கடுமையான தாக்குதல், கொள்ளை, சிவில் குழப்பநிலை அல்லது தனிப்பட்ட பொல்லாமை ஆகியன இருந்தால், இத்தகைய ஆயுதங்களின் இழப்பு பொது மக்களின் பாதுகாப்பு மீது மிகவும் கடுமையான பின்விளைவுகளைக் கொண்டிருக்கும்.

அதன் உடமைகளினதும், உத்தியோகத்தர்களின் ரவையின் உபயோகத்தினதும் கிரமமான பரிசீலனைகளை வன வாழ்வுத் திணைக்களம் நடத்துவதுடன், உத்தியோகத்தர் ஒருவரின் ஆயுதத்தின் இழப்பினை அது மிகவும் கடுமையாக எடுக்கும்.[419] சுனாமி தாக்கிய பின்னர், ஹம்பாந்தோட்டையில் வன வாழ்வுத் திணைக்களம் அதன் முன்னைய பதிமூன்று ஆயுதங்களில் நான்கையே மீட்டது. ஆனால், மீதியானவற்றின் விதி தெரிந்திருக்கவில்லை.[420] எதிர்காலத்தில் ஆயுதங்களின் இழப்புக்கு எதிரான முன்னெச்சரிக்கையாக, ஆயுதப் களஞ்சியங்கள் கடல் மட்டத்திற்கு நன்கு மேலான அமைவிடங்களில் மட்டும் இடப்படுவதையிட்டும், மிகவும் உறுதியான கதவுகளுடனும், இரட்டைப் பூட்டுக்களுடனும் சிறந்தவகையில் பாதுகாப்பாகவும், ஆயுதங்களுக்கும், ரவைகளுக்கும் புறம்பான களஞ்சியப்படுத்தலுடனும் வைத்திருப்பதை கருத்திற்கு எடுப்பது பெறுமதியானதாகும்.

அதன் சுடுகலன் கையிருப்பு மீதான வருடாந்தச் சோதனைகளை நடத்துவதற்காக உள்ளக சரிபார்த்தல் சபையொன்றை வனத் திணைக்களம் கொண்டுள்ளது.[421] உத்தியோகத்தர் ஒருவருக்கு ஆயுதமொன்று வழங்கப்பட்டால், அதைத் தொலைக்காமல் உபயோகத்திற்கு அன்றி, வேறு எங்கும் கொண்டு செல்வதற்கு அவர் அனுமதிக்கப்படமாட்டார்.[422] வனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் விடுமுறையில் கடமைக்கு சமூகமளிக்காவிட்டால், பொலிஸாரினால் ஆயுதம் பாதுகாவலுக்கு எடுக்கப்படும்.[423] உருமாதிரியான காவல் அலுவலகத்தில் (தனிப்பட்ட உத்தியோகத்தர்கள் வாழுவதும், பணிசெய்வதுமான தூரத்தில் அமைந்த ஸ்தானம்) ஆயுதக் களஞ்சியமோ அல்லது ஆயுதக் கிடங்கோ இல்லை.[424] ஆயுதத்தின் வகையைப் பொறுத்து ரவைகள் வழங்கப்படுகின்றன. ரவைத் துப்பாக்கிகளுடன் ஆயுதப்பாணியிலானவற்றுக்கு பதினைந்து சுற்றுக்களும் வழங்கப்படுகின்றன.[425] பாவனைக்கு ஏற்ப ரவைகள் பதிலீடு செய்யப்படுவதுடன், வெற்று ரவைகள் மீளச் சேகரிக்கப்படுகின்றன.[426] ரவைகளின் உபயோகம் மீது மாதாந்த அறிக்கைகள் செய்யப்படுகின்றன. ஆனால், உத்தியோகத்தர்களினால் மிகவும் அரிதாகவே ரவைகள் பயன்படுத்தப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.[427]

களஞ்சிய நிலைமைகளையும், சுவர்களின் பாதுகாப்பையும் தாமாகவே மதிப்பிடுவதற்கான சந்தர்ப்பத்தை அளவீட்டுக் குழாம் கொண்டிருக்காத போதிலும், மாவட்டத்தில் அளவீட்டுக் குழாம் பார்வையிடுவதற்கு கிட்டிய ஏதாவது ஆயுதக் களஞ்சியத்தைப் போலவே தங்காலை சிறைச்சாலையில் உள்ள ஆயுதக் களஞ்சியமும் பாதுகாப்பாக இருந்ததாகத்

---

[419] 2006 மே 15இல் வன வாழ்வுத் திணைக்களப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[420] அதேவாறு
[421] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[422] அதேவாறு
[423] 2006 மே 24இல் வனத் திணைக்கள வலஸ்முல்ல காவல் அலுவலகப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[424] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.
[425] அதேவாறு
[426] அதேவாறு, மற்றும் 2006 மே 24இல் வன திணைக்கள வலஸ்முல்ல காவல் அலுவலகப் பிரதிநிதிகளுடன் நேர்முகங்காணல்.
[427] 2006 மே 24இல் வனப் பேணல் திணைக்கள உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

தோன்றுகின்றது. ஒவ்வொரு மாதமும் கொழும்பில் உள்ள உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்புடன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள வாகனங்களின் கணக்கெடுப்பினை பிரதம காவலர் எடுக்கின்றார். ஏதாவது இயக்கமின்மை அல்லது இழப்புக்கள்/திருட்டுக்கள் இருந்தால், அது பற்றி பொலிஸாருக்கு சிறைச்சாலையை அறிவிக்க வேண்டும். ஆனால், இத்தகைய சம்பவம் ஒரு போதுமே நடைபெறவில்லை என குறிப்பிடப்பட்டது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான வங்கிகளுக்கு மட்டுமே ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன என அளவீட்டுக்குக் குழுவுக்கு வங்கியொன்றில் உள்ள பொறுப்பான உத்தியோகத்தர் குறிப்பிட்டார். தனியார் வங்கிகள் துப்பாக்கிகளைக் கொண்டிருக்க முடியாது. ஆனால், அதற்குப் பதிலாக, அவர்களுக்கு ஆயுதப் பாதுகாப்பு அவசியப்பட்டால் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை கேள்வுக்கு எடுக்க முடியும்[428] என்பதுடன், ஹம்பாந்தோட்டையில் உத்தரவுப்பத்திரம் பெற்ற தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் இல்லை. அலுவலக நேரங்களின் போது அதன் சுற்றுப்புரத்தில் கண்ணுக்குத் தெரிகின்ற ஏதாவது இடத்தில் அதன் ஆயுதங்களைக் கொண்டிருப்பதற்கு வங்கி அனுமதிக்கப்பட்டுள்ளதென நேர்முகங்காணப்பட்ட வங்கி உத்தியோகத்தர் குறிப்பிட்டார்.[429] வங்கியின் தலைமை அலுவலகத்தின் ஊடாக ரவைகள் கொள்வனவு செய்யப்படுவதுடன், ஒரு நேரத்தில் ஆயுத பாணியிலான உத்தியோகத்தர்களுக்கு பத்துச் சுற்றுக்கள் வழங்கப்படுகின்றன.[430] மாவட்டத்தில் உள்ள அரசாங்க வங்கிகள் இரட்டைப் பூட்டுக்களுடனான பெட்டகங்களில் ஆயுதங்களை வைத்திருப்பதுடன், சாவிகள் புறம்பான தனிப்பட்டவர்களிடம் இருக்கின்றன.[431] மக்கள் வங்கியின் வாகனங்களின் கணக்கெடுப்பு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு, கொழும்புக்கு அனுப்பப்படுகின்றது.[432]

மாவட்டத்தில் உள்ள கடற்படை அல்லது விமானப் படைத் தளங்களில் ஆயுதக் களஞ்சியங்களைச் சோதிப்பதற்கு ஆராய்ச்சிக் குழாமுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. கடற்படைத் தளத்தில் ஆயுதக் களஞ்சியம் போதியளவு உயர்வான நிலத்தில் அமைந்திருந்ததுடன், சுனாமியின் போது அதன் சிறு ஆயுதங்களின் அல்லது ரவைகளின் உடமைகள் எதுவுமே இழக்கப்படாத விதமாக நன்கு போதியளவு பாதுகாப்பாக இருந்தன. வீரவில விமானத்தளத்தில் ஆயுதங்களின் பாதுகாப்பு அதிகம் முக்கியம்வாய்ந்தவை எனக் குறிப்பிடப்பட்டது.[433] ஆதலினால், வெளியே கொண்டு செல்லப்பட்டுவதும், உள்ளே கொண்டு வரப்படுவதுமான ஆயுதங்கள் கையொப்பமிடப்படுவது மட்டுமன்றி, குற்றவாளிகளுக்கு ஆயுதங்கள் வாடகைக்கு கொடுக்கப்படும் என்ற ஆபத்தினைத் தடுப்பதற்காக கடமையில் உள்ள காவலர்களின் துப்பாக்கிகளும் கிரமமான எழுந்தமான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.[434] இணைய தள அடிப்படையிலான கணக்கெடுப்பு முறைமையொன்றுக்கும் தளம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், வேறு அமைவிடங்களுக்கு ஏற்றி இறக்கப்படுவதற்காக வாகனங்கள் புறப்பட்டுச் செல்லுதல், அவற்றின் வகை, தொகை, தொடர் இலக்கங்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட இறக்கப்படும் நேரம் ஆகியவற்றைக் குறிப்பிடுவது சாத்தியமானதாகும்.[435]

### தகவலும், கண்காணித்தலும்

2003 ஜுலையில் UNPOA மீதான நாடுகளின் முதலாவது அரையாண்டு கூட்டத்திற்கான அதன் அறிக்கையில், இலங்கை அரசாங்கம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

---

[428] 2006 மே 23இல் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஹம்பாந்தோட்டை மக்கள் வங்கி சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல். நேர்முகம் காணப்பட்டவரின் கூற்றுப்படி, கிட்டியது மொனராகல மாவட்டமாகும்.

[429] அதேவாறு

[430] அதேவாறு

[431] அதேவாறு

[432] அதேவாறு

[433] 2006 மே 25இல் வீரவில விமானத் தள சிரேஷ்ட உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[434] அதேவாறு

[435] அதேவாறு

'கணக்கில் காட்டப்படாத ஆயுதங்களின் பட்டியலொன்றின் தொகுப்பொன்றினை உட்கட்டமைப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது. "இலங்கையில் சட்டவிரோதமான சிறு ஆயுதங்கள் பல்கிப் பெருகுவதற்கு எதிரான தேசிய ஆணைக்குழுவொன்றை தாபிப்பதற்கு ஆதரவளித்தல்" என்ற தலைப்பிலான கருத்திட்டமானது ஆயுதப் பதிவேடொன்றையும், தரவுத் தளமொன்றையும் தாபிப்பதில் உதவியை வழங்குவதன் மூலம் அப்பணிக்கு பங்களிக்கின்றது. இப் பணியின் கீழ், கிரமமான அடிப்படையொன்றின் மீது தமது இருப்பில் இருந்து காணாமல் போயுள்ள ஆயுதங்களின் பட்டியலொன்றை தேசிய ஆணைக்குழுவுக்கு ஆயுதப் படைகளும், பொலிஸும் வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.'[436]

'தனியார் மற்றும் அரசாங்கம் வசமுள்ள நடைமுறையிலான ஆயுதங்களின் பதிவேட்டினைப் புதுப்பிப்பதே' விரைவிலேயே தாபிக்கப்படவுள்ள NCAPISAஇன் பிரதான பணிகளில் ஒன்றாகும் என அதே அறிக்கை தெரிவித்துள்ளது.[437] இருந்த போதிலும், வேறுபட்ட அரசாங்கத் தாபனங்களினதும், தனிப்பட்டவர்களினதும் உடமைகள், மற்றும் இத்தகைய மூலங்களிலிருந்து காணாமல் போன, திருடப்பட்ட அல்லது திருப்பிக் கொடுக்கப்படாத உடமைகள் தொடர்பிலான எண்ணிக்கைகள் ஒன்றில் தொகுக்கப்படாமல் உள்ளன, அல்லது வேறுபட்ட கடதாசிக் கோவைகளில் பரவியுள்ளன எனத் தோன்றுகின்றது. தகவலானது அங்கீகாரமளிக்கப்படாத ஆளணியினர் அடைவதற்கு கஷ்டமாகத் தொடர்ந்தும் இருப்பதற்காக, இலகுவான மேற்கோளுக்கு இலத்திரனியல் தரவுத் தளமொன்றை உருவாக்கும் கருத்தும், அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரினாலும், கொள்கை வகுப்போர்களினாலும் இத்தகைய தகவலை அடைதலும், பகுப்பாய்தலும் கரிசனையின் கீழ் இருக்கவில்லை என மேலும் குறிப்பிடப்பட்டது. சகல அரசாங்க உடமைகளினதும், கணக்குக் காட்டப்படாத ஆயுதங்களும், தரவுத் தளங்களும் தொடர்ந்துமே இல்லாதிருப்பது பின்வருவனவற்றுக்கு தடையாக இருக்கும்:

- பொறுப்பான உத்தியோகத்தர்கள் மத்தியில் அறிவையும், கொள்கை பதிலிறுப்புக்களையும் முன்னேற்றுதல்,
- ஆளணியினர் மாற்றத்தின் போது நிறுவனரீதியிலான ஞாபகார்த்தத்தின் இழப்பினைத் தடுத்தல், மற்றும்
- கையினாலான பதிவு வைத்திருத்தலுடன் இணைந்துள்ள சரீரத்தொழிலின் சுமையைக் குறைத்தல்.

அரசாங்கச் சேவையாளர்கள் வைத்திருக்கும் சகல ஆயுதங்களையும் சுற்றியுள்ள இரகசியத்தன்மையின் கலாசாரமும், குறிப்பாக ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னர் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களுக்கு கணக்குக் காட்டாமையும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆயுதங்களின் முகாமைத்துவத்தில் முக்கிய பிரச்சினைகளின் தெளிவான தோற்றப்பாடொன்றில் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ளது. மிகவும் ஒளிவு மறைவற்ற வழியொன்றில் பிரச்சினை பகுப்பாயப்பட்டு, கையாளப்படுவது விரும்பத்தக்கது. இது சிறு ஆயுதங்களின் கட்டுப்பாட்டின் கருத்து நோக்கத்திலிருந்து முக்கியமானதொரு படியாக விளங்கும். ஆனால், ஆகக்கூடுதலான அரசியல் மட்டத்திலிருந்து தலைமைத்துவத்துடன் மட்டுமே சாதிக்கக்கூடியதாகும்.

மரணத்தின் விளைவுகளைக் கண்காணிப்பதற்கான இலங்கையின் முறைமை நியாயமானளவில் செயற்றினானது என அவசரகால மருத்துவத்தில் உள்ள உலக சுகாதார தாபன உசாவலர் ஒருவர் நம்புகின்றார்.[438] கையினாலான பதிவு வைத்திருக்கும் முறைமையொன்று 50 வருடங்களாக நிலவுகின்றது,[439] இதே வேளை சுனாமியினால்

---

[436] இலங்கை அரசாங்கம், 'சகல அதன் அம்சங்களிலும், சிறு ஆயுதங்களிலும், இலகு ஆயுதங்களிலும் சட்டவிரோதமான வர்த்தகத்தைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும், ஒழிப்பதற்குமான செயற்பாட்டின் ஐக்கிய நாடுகள் செய்திட்டத்தை அமுல்படுத்தல்', அமுல்படுத்தலை கருத்திற்கு எடுப்பதற்கு நாடுகளின் முதலாவது அரையாண்டுக் கூட்டத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது, 2003 ஜுலை 7-11, நியூயோர்க், பக்கம் 5

[437] அதேவாறு, பக்கம் 2

[438] 2006 மே 09இல் உலக சுகாதார தாபன அவசரகால மருந்துகள் உசாவலருடன் நேர்முகங்காணல்.

[439] அதேவாறு

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரத் தரவுகளைத் திரட்டுவதற்கும், பரப்புவதற்கும் வசதியளிப்பதற்கு கணனிகளின் ஏற்பாட்டினை நிதிப்படுத்தும் இந்த முறைமைக்கு மேம்படுத்தல்களில் உலக சுகாதார தபானம் அண்மையில் மூலதனமிட்டுள்ளது.[440] இதே உசாவலரின் கூற்றுப்படி, நாடுபூராவும் சுகாதார தகவல் முறைமை முழுவதும் கணனி தொழில்நுட்பத்தைக் கைமாற்றுவதற்கான கருத்திட்டமொன்றுக்கு உலக வங்கி ஆதரவளிக்கின்றது. நாடுபூராவும் குறிப்பான அமைவிடங்களில் சுடுகலன்களினாலான தாக்கங்களின் நிகழ்வு மீதான தரவைத் தொகுப்பதற்கு சுகாதார அமைச்சுக்கு உத்தேசமான ஆற்றலளவை எடுத்துக்காட்டுகின்றது.

உண்மையில் தற்போதைய முறைமையானது மரணத்தின் விளைவுகள் மீது புள்ளிவிபரங்களை வழங்குவதில் சார்புரீதியிலான செயற்றிறனுடன் தொழிற்படுவதுடன், 'குழந்தைகளும், 50 வயதுக்கு மேற்பட்டவர்களும் புறநீங்கலாக சக வயதுகளிலும் மரணத்தின் காரணத்திற்கு காயத்தின் வெளிவாரி காரணிகள் இட்டுச் செல்கின்றன' என வெளிப்படுத்துவதில் ஆயுத வன்முறையிலான பிரச்சினையின் அளவுக்கான பயனுள்ள துப்பினை வழங்குகின்றது.[441] எனினும், பெருமளவு நாடுகளில் உள்ளதைப் போன்று, நோய்களின் சர்வதேச வகைப்படுத்தலுடன், ஒத்துப் போகின்ற தற்போதைய சுகாதார தகவல் முறைமையின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தல்கள் இத்தகைய காயங்களின் எந்த விகிதாசாரம் சுடுகலன்களினால் விளைவிக்கப்படுகின்றன என்பதை நிர்ணயிப்பதற்கு ஆராய்ச்சியாளரை அல்லது கொள்கை வகுப்பவரை இயலச் செய்யாது.[442]

சுடுகலன்களினாலான காயங்களில் இருந்து விளைகின்ற வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற சம்பவங்களில் நோய்வாய்ப்பட்டவருக்குரிய சம்பவங்களையும், பிரேதப் பரிசோதனைகளையும் கையாளும் சட்ட வைத்திய உத்தியோகத்தர்கள் சுடுகலன்கள் தொடர்பிலான சம்பவங்களில் தமது சொந்தப் பதிவேடுகளை எழுந்தமான விதமாக வைத்திருக்கிறார்கள். இதனால், இத்தகைய சம்பவங்கள் குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு மருத்துவப் பதிவேடுகள் உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படும் உள்ளக இறப்பு தரவுகளில் விபரமாகப் பட்டியல்படுத்தப்படுவதில்லை. காயங்களின் வெளியிலான காரணிகளைப் பதிவு செய்வதற்கு தரவுத் தளமொன்று தாபிக்கப்படுவதை அவர்கள் வரவேற்பார்கள். ஆனால், அவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்கள், கணனிகள், அதை நிருவகிப்பதற்கு இணைய தளத்திற்கான அடைதல் ஆகியன தேவைப்படும்.[443]

உண்மையில், அதிக விரிவான தரவைப் பொலிஸார் கொண்டிருக்கக்கூடும். சட்டத்தின் படி இலங்கையில் உள்ள வைத்தியசாலையொன்றுக்கு அறிவிக்கப்படும் சுடுகலன்கள் தொடர்பிலான காயம் அல்லது மரணம் பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் அறிக்கையொன்று கோவைப்படுத்தப்பட வேண்டும்.[444] அதன் பதிவேடுகளின் அடிப்படையின் மீது புள்ளிவிபரங்களைத் தொகுப்பதிலும், ஆராய்ச்சிக் குழாமுக்கு அவற்றை வழங்குவதிலும் உள்ளூர் மட்டத்தில் பொலிஸ் திணைக்களம் மிகவும் உதவிகரமாக விளங்கியது. எனினும், அதன் பதிவேடுகளின் அடிப்படையின் மீது பிரச்சினையின் தன்மையை விபரமாகப் பகுப்பாய்வதற்கான தொழில்நுட்பத்தை பொலிஸ் திணைக்களம் கொண்டிருக்கவில்லை, அல்லது அவசியமான வேகத்துடன் அது வைத்துள்ள தகவலின் அடிப்படையின் மீது சிறு ஆயுதங்களின் கட்டுப்பாட்டின் அதன் நிலையங்களையும், உத்தியோகத்தர்களையும், மற்றும் பங்காளி முகவராண்மைகளையும் அது ஒன்று திரட்டுவதற்கு பதிவை வைத்திருப்பதற்கான தற்போதைய ஒழுங்குகள் போதுமானதல்ல. தனிப்பட்ட நிலையங்களினால் வழங்கப்பட்ட தரவுகளுக்கும், முழுப்

[440] அதேவாறு

[441] குடும்ப சுகாதார பணியகம், 'வருடாந்த சுகாதார செய்தித்திரட்டு' (2002). இதுவே வெளியிடப்பட்டுள்ள மிக கிட்டிய இத்தகைய செய்தித் திரட்டாகும்.

[442] 2006 மே 11இல் சனத்தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்கள புள்ளிவிபர உத்தியோகத்தருடனும், 2006 மே 23இல் மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் திட்டமிடல் அலகின் பிரதிநிதிகளுடனும் நேர்முகங்காணல்கள்.

[443] 2006 மே 26இல் மாத்தறை வைத்தியசாலை உத்தியோகத்தருடன் நேர்முகங்காணல்.

[444] 2006 மே 09இல் உலக சுகாதார தாபனத்தின் அவசரகால மருந்துகள் ஆலோசகருடன் நேர்முகங்காணல்.

பிரிவுக்காக தொகுக்கப்பட்ட தரவுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தன. புள்ளிவிபரங்களைக் கட்டுப்படுத்தி, பகுப்பாய்வையும். அறிக்கைகளையும் வழங்குவதற்கு கணனிகளும், பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் பொலிஸ் நிலையங்களுக்கு அவசியமானதாகும்.[445]

சுகாதார அமைச்சினால் அல்லது பொலிஸினால் ஆயுத பாணியிலான வன்முறைக் காயங்கள் மீதான தரவைத் தொகுப்பதற்கும், பகுப்பாய்வதற்குமான முறைமையொன்று சரிவர அமுல்படுத்தப்பட்டால், ஆயுத பாணியிலான வன்முறையின் பிரச்சினை எங்கு செறிந்துள்ளது, அது யாரை மிகவும் பாரதூரமாகப் பாதிக்கின்றது என்பன மீது கொள்கை வகுப்பவர்களுக்கு பெறுமதிமிக்க தகவலின் மூலமொன்றை வழங்கும். சட்டவிரோதமான சிறு ஆயுதங்கள் பல்கிப் பெருகுவதையும், வன்முறையிலான செயற்பாடுகளில் அவற்றின் உபயோகத்தையும் சமாளிப்பதற்கான ஏதாவது முன்னெடுப்புக்களின் செயற்றிறனை எடுத்துக் காட்டுவதற்கான கண்காணிக்கும் பொறிமுறையொன்றின் உள்ளகப் பகுதியில் அது சார்ந்திருக்கும். இவ்வகையிலான தரவுகளைத் திரட்டும் முறைமைகள் காயத்தைத் தடுப்பதற்கான உலக சுகாதார தாபனத் திணைக்களத்தினாலும், நெருக்கடி நிலையைத் தடுப்பதற்கும், மீளுதலுக்குமான இணை ஆயுத பாணியிலான வன்முறையைத் தடுக்கும் செய்திட்டத்திற்கான ஐ.நா.அ.தி. பணியகத்தினாலும் வெளிப்படையாக மேம்படுத்தப்படுகின்றது.[446] ஆதலினால், ஏலவேயுள்ள அதன் தொழிற்படுகின்ற சுகாதார/ பொலிஸ் தகவல் முறைமைக்குள் ஆயுதபாணியிலான வன்முறைக் கண்காணித்தலைக் கட்டியெழுப்புவதற்காக நன்கொடையாளர் ஆதரவைக் கண்டறிவதை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடும்.

சட்டவிரோதமான ஆயுதங்களைக் கண்டுபிடித்தல், குற்றவியல் விசாரணைப் பணி, அல்லது பாதிக்கப்பட்டவர்களை அடையாளங்காணுதல் ஆகியவற்றில் உத்தேசமான வசதியைக் கொண்டுள்ளவையாக முறையே பறிமுதல் செய்யப்பட்ட சுடுகலன்கள், தேவைப்படும் சந்தேகநபர்கள் மற்றும் காணாமல் போயுள்ளவர்கள் ஆகியனவற்றின் தரவுத் தளங்கள் அளவீட்டுக் குழாமுக்கு குறிப்பிடப்பட்டன.[447]

[445] 2006 மே 17இல் மித்தெனிய பொலிஸ் நிலைய சிரேஷ்ட பிரதிநிதியுடன் நேர்முகங்காணல்.
[446] UNDP/WHO 'உலகளாவிய ஆயுதபாணியிலான வன்முறைகள் தடுப்புச் செய்திட்டம் (AVPP) கட்டம் 1: மனித பாதுகாப்பினதும், அபிவிருத்தியினதும் மீது ஆயுத வன்முறையின் தாக்கங்களைக் கவனத்திற்கு எடுப்பதற்கு திட்டவரையொன்றை விருத்தி செய்வதற்கான ஆதரவுச் செய்திட்ட ஆவணம்: 2005 மே 05.
[447] 2006 மே 17இல் பெலியத்த பொலிஸ் நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தருடனும், 2006 மே 26இல் காலி, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை உத்தியோகத்தருடனும் நேர்முகங்காணல்கள்.

CMEV, 'Offences Report (Cumulative Figures) Date: 2005-11-16', http://www.slelections.info/offences.php, accessed 31 May 2006.

CMEV, 'Offences Report (Election day) Date: 2005-11-17', http://www.slelections.info/election day offences.php?PHPSESSID=b90770b91cf631288b70855de25a5ec7, accessed 31 May 2006.

Centre for Policy Alternatives, *Final Report of Election-Related Violence by the Centre for Monitoring Election Violence (CMEV) - General Election 2001*, (Colombo, 2001), http://www.cpalanka.org/research papers/CMEV General Election 2001.pdf

Centre for Policy Alternatives, *Final Report on Election Related Violence by the Centre for Monitoring Election Violence (CMEV): General Election – April 2004*, (Colombo, 2004),

http://www.cpalanka.org/research papers/CMEV GE 2004 English.pdf

GoSL Department of Census and Statistics, 'Population Statistics', http://www.statistics.gov.lk/population/index.htm, and accompanying tabulated data at http://www.statistics.gov.lk/population/tables.pdf, accessed 02 June 2006

GoSL, 'Implementation of the United Nations Programme of Action to Prevent, Combat and Eradicate the Illicit Trade in Small Arms and Light Weapons in all its Aspects', Report Submitted by the GoSL to The First Biennial Meeting of States to Consider the Implementation of the UN Programme of Action to Prevent, Combat and Eradicate the Illicit Trade in Small Arms and Light Weapons in All its Aspects, 7-11 July 2003, New York, p.2.

GoSL, Health Web Portal, 9.0 Tsunami: 2004 Disaster

http://203.94.76.60/tsunami/links/figures.html, accessed 22 May 2006

International Water Management Institute, Bringing Hambantota Back to Normal: A Post-Tsunami Livelihoods Needs Assessment of Hambantota District in Southern Sri Lanka, (2005),

http://www.iwmi.cgiar.org/TSUNAMI/pdf/Formatted_Final_tsunami_report_30-03-05.pdf

Ivan V, *71 Rebel (71 Keralla)*, (Colombo, Durga Publishers, 1979 repr 2000)

Krug E, Dahlberg L, Mercy J, Zwi A, Lozano R (eds), World report on violence and health, (Geneva, World Health Organization, 2002)

PAFFREL, *Final Report on Parliamentary General Election 2004*, (PAFFREL/MFFE, Colombo, 2004)

Smith C, 'In the Shadow of a Cease-fire: The Impacts of Small Arms Availability and Misuse in Sri Lanka', (Small Arms Survey Occasional Paper 11, October 2003)

South Asia Terrorism Portal, 'Fatalities District-wise 2005', http://www.satp.org/satporgtp/countries/shrilanka/database/FatilitiesDisticwise_2005.htm, accessed 03 June 2006

South Asia Terrorism Portal, 'Fatalities District-wise 2006', http://www.satp.org/satporgtp/countries/shrilanka/database/FatilitiesDisticwise_2006.htm, accessed 03 June 2006

TamilNet, 'SLMM Head visits Sea Tiger base in Mullaithivu', 31 May 2006, http://www.tamilnet.com/art.html?catid=13&artid=18358, accessed 03 June 2006

UNDP/WHO, 'The Global Armed Violence Prevention Programme (AVPP) PHASE I: Support for the Development of a Framework to Address the Impacts of Armed Violence on Human Security and Development. Programme Document.' 05 May 2005

| சம்பவம் | மாவட்டத்திலுள்ள அமைவிடம் | சம்பவத்தின் வகை | மரணங்களின் எண். | காயங்களின் எண். | பாதிக்கப்பட்டவரின் வயது | பாதிக்கப்பட்டவரின் பால்நிலை | பாதிக்கப்பட்டவரின் தொழில்நிலை | சம்பவத்தின் தன்மை | குற்றமிழைத்தவரின் வயது | குற்றமிழைத்தவரின் பால்நிலை | குற்றமிழைத்தவரின் தொழில்நிலை | இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் சம்பந்தம் | சிறு ஆயுதங்களினதும், இலகு ஆயுதங்களினதும் வகை | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தங்காலை | (1) கொலை<br>(2) காயம் | 1 | -<br>1 | 54<br>கி/இ | பெ<br>ஆ | கி/இ<br>கி/இ | காணி தகராறு | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | - | - |
| 2 | தங்காலை | காயம் | - | 1 | 70 | பெ | கி/இ | காணி தகராறு | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | | |
| 3 | அங்குனுகொல பெலஸ்ஸ | கொலை | 1 | - | 35 | ஆ | கி/இ | கி/இ | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 4 | யால | கொலை | 1 | - | - | ஆ | வன உத்தி யோகத் தர் | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 5 | அங்குனுகொல பெலஸ்ஸ | கொலை | 1 | - | 48 | ஆ | கி/இ | குடும்ப தகராறு | கி/இ | ஆ | கி/இ | கி/இ | - | - |
| 6 | பெலியத்தை | கொள்ளை | - | - | கி/இ | கி/இ | நிதி கம்பனி கள் | ஒழுங்கு படுத்தப்பட்ட கொள்ளை | கி/இ | ஆ | நிதி கம்பனி யில் உத்தி யோகத்தர் | கி/இ | பிஸ்டல்கள் கைக் குண்டுகள் | கி/இ |
| 7 | பெலியத்தை | காயம் | - | 1 | கி/இ | ஆ | வர்த்தகர் | வாக்குவாதம் | கி/இ | ஆ | உள்ளூர் அரசியல்வாதி | கி/இ | - | - |
| 8 | திக்வெல்லை | காயம் | - | 1 | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | ஆ | கி/இ | கி/இ | - | - |
| 9 | தங்காலை | பாலியல் வல்லுறவு | - | - | கி/இ | பெ | கி/இ | - | கி/இ | ஆ | கி/இ | - | - | - |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | பெலியத்தை | ஒழுங்குபடுத்தப் பட்ட கொள்ளைக்கும், கொலைக்கும் கைது செய்யப்பட்டவர் | 9 | 2 | கி/இ | கி/இ | 2 பொலிஸாருக்கான காயங்கள் உள்ளடக்கம் | ஒழுங்குபடுத் தப்பட்ட குற்றம் | கி/இ | ஆ | கி/இ | கி/இ | T-56 | கி/இ |
| 11 | கட்டுவான | கொலை | 1 | - | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 12 | பெலியத்தை | கொலை | 1 | - | கி/இ | ஆ | முச்சக்கர வண்டி சாரதி | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 13 | மித்தெனிய | குண்டொன்றை வைத்திருந்தமைக்கு கைது | - | - | - | - | - | கி/இ | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 14 | தங்காலை | கொலை | 1 | - | 33 | பெ | கி/இ | குடும்ப தகராறு | கி/இ | ஆ | வழக்கறிஞர் | - | - | - |
| 15 | திஸ்ஸமகரகம | கொள்ளை முயற்சி | - | 1 | கி/இ | ஆ | சிகரெட் கடையில் ஊழியர் | கொள்ளை முயற்சி | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 16 | ஹுங்கம | கொலை | 1 | 1 | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 17 | தங்காலை | கொலை | 1 | - | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 18 | தங்காலை | கொலைக்கு தூக்குத் தண்டனை | 1 | - | கி/இ | ஆ | கி/இ | கி/இ (குத்துதல்) | கி/இ | ஆ | கி/இ | - | - | - |
| 19 | திஸ்ஸமஹரகம | 3 கொள்ளைகளுக்கு கைது | - | கி/இ | கி/இ | ஆ | கி/இ | ஒழுங்குபடுத் தப்பட்ட கொள்ளை | 20<br>18<br>கி/இ<br>கி/இ | ஆ | (1) மாணவர்<br>(2) மாணவர்<br>(3) கி/இ<br>(4) கி/இ | கி/இ | 'கல்கட் டாஸ்' T-56 ரவைகள் | கி/இ |
| 20 | கிரம | பொலிஸாரினால் கொள்ளையர்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர் | 2 | - | கி/இ | ஆ | கி/இ | ஒழுங்குபடுத் தப்பட்ட கொள்ளை | - | - | - | - | - | - |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21 | பல்லேமளல | கொலை | 1 | - | 57 | ஆ | அரசாங்க சேவை யாளர் | காணிக்கான உரிமை மீதான தகராறு (உத்தியோக பூர்வ விடயம்) | கி/இ கி/இ | ஆ பெ | கி/இ கி/இ | கி/இ | - | - |
| 22 | தங்காலை | கொலை | 1 | - | 40 | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | - | - |
| 23 | சீனிமோதர | கொலை (2004இல்) | 1 | - | கி/இ | ஆ | சுவிஸ் தேசிய தோட்ட உரிமை யாளர் | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | - | - |
| 24 | தங்காலை | கொலை | 1 | - | கி/இ | ஆ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | - | - |
| 25 | கேரன்வெல | சுடுகலனினால் விபத்து மரணம் | 1 | - | 40 | பெ | விவசாயி | - | - | - | - | - | ரவைத் துப்பாக்கி | - |
| 26 | வலஸ்முல்ல | சுய பாதுகாப்பில் கொல்லப்படுதல் | 1 | 2 | கி/இ | ஆ | கி/இ | சுய பாதுகாப்பாக சுட்டமை | - | ஆ | கி/இ | கி/இ | ரவைத் துப்பாக்கி (உ.பெ.) | உ. பெ. |
| 27 | தங்காலை | கொலை | 1 | - | 55 | ஆ | கி/இ | குடும்பத் தகராறு | கி/இ | ஆ | கி/இ | கி/இ | - | - |
| 28 | பெலியத்தை | கொலை(?) | 1 | - | கி/இ | ஆ | பொலிஸ் காரர் | உத்தியோக பூர்வ கடமை சட்டவிரோத காய்ச்சி வடிப்போரை கைது செய் கையில் மரணம் | கி/இ | கி/இ | | கி/இ | | கி/இ |
| 29 | பெலியத்தை | கொலை | 1 | - | 42 | ஆ | | அரசியல் தகராறு | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |
| 30 | தங்காலை | கொள்ளை | - | - | கி/இ | கி/இ | கி/இ | கொள்ளை | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ | கி/இ |

தேசிய சட்டவிரோதமான சிறு ஆயுதங்களும், இலகு ஆயுதங்களும் பல்கிப் பெருகுவதற்கு எதிரான ஆணைக்குழு (NCAPISA): 2002இன் UNDDA/UNDESA, UNDP மற்றும் நன்கொடையளிப்பு சமுதாயம் ஆகியவற்றுடனான ஒத்துழைப்புடன் சிறிய ஆயுதங்கள் மீதான தேசிய ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதை நோக்கி முதலாவது நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்தது. தேசிய சட்டவிரோதமான சிறு ஆயுதங்கள் பல்கிப்பெருகுவதற்கு எதிரான ஆணைக்குழுவொன்றை தாபிப்பதற்காக 2003 ஜூனில் UNDDA/UNDESA உடன் உடன்படிக்கையொன்றை இலங்கை அரசாங்கம் செய்து கொண்டது. 2004 நொவம்பர் 5 அன்று, அதன் சகல அம்சங்களிலும், சிறு ஆயுதங்களிலும், இலகு ஆயுதங்களிலும் சட்டவிரோத வர்த்தகத்தை தடுப்பதற்கும், தணிப்பதற்கும், ஒழிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் செயற்றிட்டத்திற்கு அமைவாக, இலங்கையில், சட்டவிரோதமான சிறு ஆயுதங்களுமெ, இலகு ஆயுதங்களும் பல்கிப் பெருகுவதைச் சமாளிப்பதற்காக விசேட ஜனாதிபதி விதிப்பினால் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. 2005இல் புதிய ஜனாதிபதியின் தேர்தலைத் தொடர்ந்து, அதன் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக அவசியமான ஆதரவை வழங்குவதன் மூலம் ஆணைக்குழுவின் தொழிற்பாட்டினை தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் ஏற்றுக்கொண்டுள்ளது.

தேசிய சட்டவிரோதமான சிறிய ஆயுதங்கள் பல்கிப் பெருகுவதற்கு எதிரான ஆணைக்குழு, களனி பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம் மற்றும் சுதந்திர ஊடக ஆராய்ச்சி, பயிற்சிக் குழு ஆகியவற்றுடனான பங்குடமையுடன் ‘சேபர்வேர்ள்ட்”இனால் (Saferworld) நடத்தப்பட்டது.

Saferworld
The Grayston Centre
28 Charles Square
London N1 6HT, UK

Phone: +44 (0)20 7324 4646
Fax: +44 (0) 20 73244647
Email: general@saferworld.org.uk
Web: www.saferworld.org.uk

National Commission Against the Proliferation of Illicit Small Arms (NCAPISA)
Room 5, Ministry of Defence Building
15/5, Baladaksha Mawatha, Colombo 03
Sri Lanka

Phone: +94 (0) 1 2430860 Ext. 279